இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER
இதழ் 385
சனி, 04 ஏப்ரல், 2026 |
பக்கங்கள் 21
www.ilakku.org





# ரஷ்ய எரிபொருள் கொள்வனவு மறைந்துள்ள மர்மங்கள்

விதுரன்

# அமெரிக்க ஈரான் போர்: இலங்கையின் பொருளாதாரம் ஈடு செய்ய நமக்கு நாமே துணை!

பா.அரியநேத்திரன்



ஆனந்தபுரத்தில் வீரகாவியங்களான எமது வீரமறவர்களின் 17வது நிறைவாண்டின் நினைவுகளோடு...



# வானாதிக்கத்தை இழந்த வான் அரசன்

வேல்ஸில் இருந்து அருஸ்

# பொருளாதார ஒத்துழைப்பை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்ல ரஷ்யாவும் இலங்கையும் இணக்கம்



இலங்கை மற்றும் ரஷ்யாவிற்கு இடையிலான 11வது சுற்று இருதரப்பு அரசியல் ஆலோசனைக் கூட்டம் கொழும்பில் உள்ள வெளிநாட்டு விவகாரங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சில் நடைபெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முக உறவுகளை மீளாய்வு செய்ததுடன், எதிர்காலத்தில் அந்த உறவுகளை வலுப்படுத்துவதற்கான மேலதிக நடவடிக்கைகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

சுற்றுலா, கல்வி, பாதுகாப்பு, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதுடன், விளையாட்டு மற்றும் கலாச்சார ரீதியான உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. ரஷ்ய அரசாங்கத்துடன் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் கலந்துரையாடல்களின் தொடர்ச்சியாக, எரிசக்தி மற்றும் பெற்றோலியம், நிலக்கரி மற்றும் உரம் வழங்கல் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்த இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிப்பதற்கான ஒரு புதிய இலக்கை நிர்ணயிக்கவும், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஈடுபாட்டை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லவும் இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர். அத்துடன், ரஷ்ய இராணுவத்தில் பணியாற்றும் இலங்கையின் முன்னாள் படைவீரர்கள் தொடர்பான விடயங்கள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது. இலங்கை மற்றும் ரஷ்யாவிற்கு இடையிலான இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 2027 ஆம் ஆண்டுடன் 70 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இ த னை முன்னிட்டு, உயர்மட்டத் தலைவர்களின் விஜயங்கள் உள்ளிட்ட பல்வேறு விசேட நிகழ்வுகளை உரிய முறையில் முன்னெடுக்க இரு தரப்பும் தீர்மானித்துள்ளன.

## கைது செய்யப்பட்ட 147 வெளிநாட்டவர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு



இணையவழி நிதி மோசடி சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 147 வெளிநாட்டவர்களையும் எதிர் வரும் 09ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப் பட்டுள்ளது.

இன்று (03) குறித்த சந்தேக நபர்கள் சிலாபம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப் பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சிலாபம், இரணவில பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த போதே இன்று காலை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 133 சீனப் பிரஜைகளும், 13 வியட்நாம் பிரஜைகளும், ஒரு மலேசியப் பிரஜையும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## அதிகரிக்கும் வெப்பம்: குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்?



கொழும்பு மாவட்டத்தின் பிரதான நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருவதால், எதிர் வரும் வாரங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (NWSDB) தகவல்களின் படி கலாட்டுவாவ நீர்த்தேக்கத்தில் இன்னும் 22 நாட்களுக்கு மாத்திரமே நீர் போதுமானதாக உள்ளது. அத்துடன் லபுகம நீர்த்தேக்கத்தில் இன்னும் 50 நாட்களுக்கு மாத்திரமே நீர் போதுமானதாக உள்ளது.

வரண்ட வானிலை காரணமாக மேல் மாகாணமே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் சபையின் தலைவர் சந்தன பண்டார தெரிவித்துள்ளார். நாளாந்தம் உற்பத்தி

தொடர்ச்சி: பக்கம் 03

# உலகின் மிகப்பெரிய பெட்ரோ கெமிக்கல் ஆலை மூடப்பட்டது



சவூதி அரம்கோ மற்றும் அமெரிக்காவின் மாபெரும் நிறுவனமான டவ் கெமிக்கல் ஆகியவற்றின் 20 பில்லியன் டொலர் கூட்டு நிறுவனமான சதாரா கெமிக்கல், ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதால் ஏற்பட்ட விநியோகச் சங்கிலி இடையூறுகளைக் காரணம் காட்டி, தனது ஜுபைல் வளாகத்தில் உள்ள அனைத்து உற்பத்திகளையும் கால வரையின்றி நிறுத்தியுள்ளது.

சதாரா உலகின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த பெட்ரோ கெமிக்கல் ஆலைகளில் ஒன்றாகும். இதன் ஆண்டு உற்பத்தித் திறன் 3 மில்லியன் மெட்ரிக் டன்களுக்கும் அதிகமான இரசாயனங்கள் மற்றும் பிளாஸ்டிக்குகள் ஆகும். இது பேக்கேஜிங் முதல் கட்டுமானம் வரை அனைத்திலும் பயன்படுத்தப்படும் எத்திலீன், புரோப்பிலீன், பாலிஎத்திலீன் மற்றும் பிற முக்கிய தொழில்துறை இரசாயனங்களை உற்பத்தி செய்கிறது.

உற்பத்தி எப்போது மீண்டும் தொடங்கும் என்பது குறித்து எந்த மதிப்பீட்டையும் வழங்க முடியாது என்றும், காலக்கெடு “உள்நாட்டு மற்றும் சர்வதேச காரணிகளைப் பொறுத்தது” என்றும் நிறுவனம் கூறுகிறது. இந்த நிறுத்தம் அதன் 2026 ஆம் ஆண்டு நிதி முடிவுகளை கணிசமாக பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஈரான் முன்னதாக ஜுபைல் வளாகத்தின் மீது ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தவுள்ளதாக அச்சுறுத்தியிருந்தது, ஆனால் இதுவரை அது தாக்கப்படவில்லை. இப்போது ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதால், ஒரு துப்பாக்கிச் சூடு கூட நடத்தப்படாமலேயே சேதம் ஏற்பட்டுள்ளது.

## ‘கற்காலத்திற்குத் திரும்புதல்’: இனப்படுகொலை அச்சுறுத்தல்



புதன்கிழமை(1) அமெரிக்க மக்களிடையே ஆற்றிய உரையில், அதிபர் ட்ரம்ப், தற்போது ஐந்தாவது வாரத்தில் இருக்கும் போரை முடிவுக்குக் கொண்டுவர வொஷிங்டனின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு ஒப்பந்தத்திற்கு ஈரான் ஒப்புக்கொள்ளாவிட்டால், அந்நாட்டை மீண்டும் “கற்காலத்திற்கு” குண்டுவீசித் தள்ளப்போவதாக எச்சரித்துள்ளார்.

இந்தச் சொற்றொடர் பொதுவாக கண்மூடித்தனமான குண்டுவீச்சைக் குறிப்பதாகப் புரிந்துகொள்ளப்படுகிறது; அதாவது, மருத்துவமனைகள், பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள், தங்கும் விடுதிகள், வானுயர்ந்த கட்டிடங்கள் அல்லது பூங்காக்கள் போன்ற நவீன நாகரிகத்தின் எந்தவொரு உள்கட்டமைப்பும் எஞ்சியிருக்காத வகையில் ஒரு நாட்டை முற்றிலுமாக அழிப்பதை நோக்கமாகக் கொண்டது.

அமெரிக்காவின் நட்பு நாடான இஸ்ரேல் காசாவில் பெரும்பாலும் செய்தது போல, அத்தகைய ஒரு செயல் மேற்கொள்ளப்பட்டால், அது சர்வதேச சட்டத்தின் கீழ் இனப்படுகொலையாகக் கருதப்படும்.

தொடர்ச்சி: பக்கம் 20

## புற்றுநோய் தடுப்பூசி – ரஷ்யாவில் சிகிச்சை வெற்றி



மெலனோமா சிகிச்சையில் ஒரு திருப்புமுனையாக அமையும் என நம்பப்படும் வகையில், ரஷ்யாவைச் சேர்ந்த மெலனோமா நோயாளி ஒருவருக்கு முதல் தனிப்பயனாக்கப்பட்ட புற்றுநோய் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று ரஷ்ய சுகாதார அமைச்சகம் புதன்கிழமை TASS செய்தி நிறுவனத்திற்கு அளித்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு, இந்த அமைச்சகம் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு மருந்துகளுக்கு ஒப்புதல் அளித்தது. முற்றிய மெலனோமாவுக்கான mRNA அடிப்படையிலான தடுப்பூசியான நியோஆன்கோவாக் (Neoon-covac) மற்றும் தீவிரமான பெருங்குடல் புற்றுக்கட்டிகளைக் குறிவைக்கும் பெப்டைட்

தொடர்ச்சி: பக்கம் 18

## பிரித்தானியா எதிர்கொள்ளப்போகும் மிகப்பெரிய பொருளாதார அதிர்ச்சி



மத்திய கிழக்கு மோதலால் எந்தவொரு நாட்டையும் விட மிகப்பெரிய பொருளாதார அதிர்ச்சிகளில் ஒன்றை இங்கிலாந்து எதிர்கொள்கிறது என்று சர்வதேச நாணய நிதியம் (IMF) எச்சரித்துள்ளது. எரிவாயு மூலம் இயங்கும் மின்சாரத்தை அது பெருமளவில் சார்ந்திருப்பதால், அதிகரித்து வரும் எரிசக்தி விலைகளால் அது “குறிப்பாகப் பாதிக்கப்படக்கூடிய நிலையில்” உள்ளது என்றும் அது கூறியுள்ளது.

பெப்ரவரி மாத இறுதியில் ஈரான் மீது அமெரிக்க-இஸ்ரேல் நடத்திய தாக்குதல்கள் மற்றும் அதனைத் தொடர்ந்து பிராந்தியம் முழுவதும் நடத்தப்பட்ட பதிலடித்

தொடர்ச்சி: பக்கம் 20

## குருக்கள் மட மனித புதை குழி விவகாரம் உண்மைக்குப் புறம்பானது

**பா.அரியநேத்திரன்**

குருக்கள் மடத்தில் காத்தான்குடி இஸ்லாமியர்களைப் படு கொலை செய்து மண்ணில் புதைத்தனர் என்ற புனை கதை நீதிமன்றத்தால் அங்கு நடைபெறவில்லை என்பது நிரூபணமாகியுள்ளது.



1990ஆம் ஆண்டு புனித ஹஜ் யாத்திரை மேற்கொண்டு திரும்பிய 167 ஹஜ் யாத்திரிகர்களை குருக்கள் மடம் பிரதேசத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் கொலை செய்யப்பட்டு குறிப்பிட்ட அந்த இடத்தில் புதைக்கப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டது.

இந்த நிலையில், மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள் மடம் சந்தேகத்திற் கிடமான மனிதப் புதை குழி பிரதேசத்தில் கடந்த 2026 மார்ச் 30 தொடக்கம் ஏப்ரல் 02 ம் திகதி வரை ஆய்வு செய்தும் அங்கே புதைக்கப்பட்டதாக சந்தேகப்படும் 167 பேரில் ஒருவரின் எலும்பு துண்டு கூட கிடைக்கவில்லை என்றால் அது குருக்கள் மடத்தில் அப்படி எவரும் கொலை செய்யப்படவும் இல்லை புதைக்கப்படவும் இல்லை என்பதே உண்மை.

நீதிமன்றத்தின் கட்டளைக்கு ஏற்ப அந்த பிரதேசம் தெரிவு செய்யப்பட்டு சுமார் 5 மீட்டர் நீளமும் 5 மீட்டர் அகலமும் கொண்ட 9 அடி ஆழத்தில் அகழ்வு பணிகள் பல இடங்களில் அடையாளப்படுத்தி அகழ்வுகள் இடம்பெற்றன.

குறித்த மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு 2012ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் 2014ஆம் ஆண்டு வழக்கு இடைநிறுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பின்னர் 2017ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்க காலத்தில் இவ்வழக்கு விசாரணை மீள ஆரம்பிக்கப்பட்டு கடந்த 2025ஆம் ஆண்டு குறித்த மனிதப் புதைகுழி தொடர்பான பிரதேசம் அகழ்விற்கான கட்டளை கோரிய மனு தாக்கல் செய்யப்பட்டு கடந்த மார்ச் 09ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கு விசாரணையின் போது தற்போது மூன்று தினங்கள் குறித்த பகுதியை அகழ்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டு தோண்டப்பட்டும் எந்த தடயமும் கிடைக்கவில்லை.

அப்படியானால் இது உண்மைக்கு புறம்பாக குருக்கள் மடத்தில் இந்த சம்பவம் நடந்ததாக 1990, தொடக்கம் 2026, வரை 36, வருடங்களாக வதந்தி பரப்பப்பட்டுள்ளது என்றே கருத முடிகிறது.

ஆதாரம் இன்றி குருக்கள் மடத்தில் இப்படியான படுகொலை சம்பவம் நடந்தது என கடந்த 36 வருடங்களாக கூறப்பட்ட புனை கதைக்கு முற்றுப்புள்ளி நீதிமன்றம் மூலம் கிடைத்துள்ளது.

உண்மையில் செம்மணி படுகொலை அகழ்வு நடவடிக்கை தீவிரப்படுத்திய போதுதான் மீண்டும் குருக்கள் மடத்தில் இந்த அகழ்வு உடனே நடத்தப்பட வேண்டும் என காத்தான்குடி சட்டத்தரணிகளை கொண்ட குரல்கள் அமைப்பு நீதிமன்றத்தில் மீளவும் சுட்டிக்காட்டியதால் இது துரிதப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

உண்மையில் படுகொலை செய்யப்பட்டவர்கள் எந்த சமூக்கமாக இருந்தாலும் நீதி கிடைக்கவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துகள் இல்லை. ஆனால் குருக்கள் மடத்தில் இந்த படுகொலை நடைபெற்றது அங்கே அவர்கள் புதைக்கப்பட்டனர் என்பது உண்மைக்கு புறம்பானது என்பதே இந்த அகழ்வின் மூலம் அறியமுடிகிறது.

### அதிகரிக்கும் வெப்பம்: ... தொடர்ச்சி...

செய்யப்படும் 2.5 மில்லியன் கனமீட்டர் நீரில், 1.25 மில்லியன் கனமீட்டர் மேல் மாகாணத்திலேயே உற்பத்தி செய்யப்படுகிறது.

கலாட்டுவாவ நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் குறைவினால் இங்கு 15,000 கனமீட்டர் நீர் உற்பத்தி குறைக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் வாரங்களில் பண்டிகைக் காலம் என்பதால் நீரின் பயன்பாடு அதிகரிக்கக்கூடும், எனவே நீரைச் சிக்கன மாகப் பயன்படுத்துவது அவசியமாகும் என குறிப்பிட்டுள்ளார்.

## ஆசிரியர் தலையங்கம் | 04 ஏப்ரல், 2026

### சிறிலங்காவின் ஈழத்தமிழர் இறைமை மற்றும் தேசிய ஒடுக்கத்துக்கு ஈழத்தமிழர் சனநாயக முறையில் எதிர்வினையாற்ற எது தடையாகிறது

ட்ரம்பின் ஈரானை அழிப்பேன் சூளுரைகளும் நெத்தன்யாகுவின் எல்லைவிரிவாக்க மனிதாயமற்ற ஆக்கிரமிப்புக்களும் அனைத்துலக அரசியல் முறைமையை மட்டுமல்ல அனைத்துலக போர்க்கால சட்டங்களையும் கூடச் சீரழித்து இறுதியில் ஐக்கியநாடுகள் சபை போருக்கு உதவாத சட்டங்களை இயற்றி வைத்துள்ளது என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சரே கருத்துத் தெரிவிக்கும் அளவுக்கு எதனையும் மதியாது செயற்படும் போக்கை அமெரிக்கப் போக்காகவே வெளிப்படுத்தி ஈரானின் பாலத்தைத் தகர்த்ததின் மூலம் மக்களின் உட்கட்டுமானங்களை எல்லாம் நினைத்த மாதிரி தகர்த்தெறியும் அமெரிக்கப் போர்முறையை உலகு காண்கிறது.

ஈரானியர் கற்காலத்தவராக வாழ்கின்றனர், ஈரான் அழிக்கப்பட வேண்டியது. பிரான்சின் ஜனாதிபதியின் மனைவி தன்னை சரியாக நடத்தவில்லை என்றெல்லாம் ஒரு உலகத் தலைவருக்கு பொருத்தமற்ற வார்த்தைகளைக் கூட ட்ரம்ப் பொரிந்து தள்ளுகிறார். ஆனால் ஈரான் அமெரிக்காவின் இரண்டாவது எப் 15 போர்விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதன் மூலம் 1976 முதல் மகிப்பாது காப்பான போர் விமானம் என எப் 15க்கு இருந்து வந்த சந்தை மதிப்பையும் ஈரான் சரிய வைத்துள்ளது. அதே வேளை சீனா பாகிஸ்தானுடன் இணைந்து அமைதிக்கான திட்டங்களை முன்னெடுப்பதாகச் செய்திகள் வந்தாலும் அமெரிக்காவின் ஈரானுடனான இதுவரையான 35 நாள் போர்ச்செலவே 1.5 டிரில்லியன் டொலர் என பிபிசி தெரிவித்துள்ளமை எவ்வளவு தூரத்துக்கு போர் தொடருமோ என்ற ஏக்கத்தை உலகெங்கும் தோற்றுவித்துள்ளது.

இந்தப் போர் எவ்வளவுக்குச் சாதாரண மக்களைத் தாக்குகிறது என்பதற்கு வடையின் விலை 50வீதத்தால் உயர்வு என்ற தகவலே போதியதாகவுள்ளது. சாதாரண மக்களின் உணவுப் பற்றாக்குறை அதிக மாகிறதற்கான பலசான்றுகள் வெளியாகிக் கொண்டேயுள்ளன. இந்நிலையில் இலங்கையுடன் ரஸ்யா தனது பதில் வெளிவிவகார அமைச்சர் அன்ரே ருடெனையே அனுப்பி தேசிய மக்கள் சக்கி அரசாங்கத்துக்கு ரஸ்யா இலங்கைக்கு எரிபொருள் தட்டுப்பாடு வராதவாறு உதவும் என நம்பிக்கைக் கரம் கொடுத்துள்ள அதே வேளை ரஸ்யாவில் அனைத்துலகப் போக்குவரத்து மாநாட்டில் உரையாற்றிய சிறிலங்காவின் அமைச்சர் பிமல் ரத்தநாயக்கா “இலங்கைக்கும் ரஸ்யாவுக்குமிடையிலான கடற்பரப்புத் தூரம் அதிகமானாலும் விமானப் போக்குவரத்துத் துறையில் இருநாடுகளும் மிக நெருக்கமாகச் செயற்படுவதாகவும் ரஸ்யா தனது சிறிலங்காவுக் கான விமானச்சேவையை ஆண்டு முழுதும் இயக்க வேண்டுமெனவும் யூரேசியக் கட்டமைப்பில் சிறிலங்கா இணைந்து பயன்பெற ஆர்வமாகவுள்ளதாகவும் அடுத்த மூன்று ஆண்டுகளில் 8 முதல் 10 பில்லியன் டொலர்களை சிறிலங்கா போக்குவரத்துத் துறையில் முதலீடு செய்து இரு புதிய துறைமுகங்களையும் உருவாக்க உள்ளதாகவும் கூறியுள்ளார். கூடவே சிறிலங்கா எந்தவொரு வல்லரசு நாடுகளின் முகாங்களுக்கும் ஆதரவான நாடல்லவெனவும் புவிசார் அரசியலின் போர்க்களமாக மாறச் சிறிலங்கா விரும்பாதெனவும் மாறாக அனைத்து நாடுகளும் இணையும் சங்கமப்புள்ளியாகவே சிறிலங்கா இருக்கவிரும்புகிறது” எனவும் சிறிலங்காவின் நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தி தனக்கான அனைத்துலக நாடுகளின் ஆதரவைப்பலப்படுத்திக் கொள்ளும் இன்றைய சமகாலத்தில் ஈழத்தமிழர் மேலான இறைமை ஒடுக்கத்தையும் தேசிய ஒடுக்கத்தையும் முன்னைய சிறிலங்கா அரசாங்கங்கள் போலவே அவற்றை விட மிகநுட்பமான முறைகளில் தொடர்கிறது. மக்களுக்கு ஊழல் ஒழிப்பு போதையொழிப்பு போன்ற பொதுவிடயங்களில் தாங்கள் மாற்றங்களை கொண்டு வருவதை பெரிதுபடுத்தி அதே வேளை இவற்றைச் சீர்செய்த பின்னரே ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைக்கு உரிய தீர்வென பேசிக்கொண்டு அதே நேரத்தில் புதிய அரசியலமைப்பின் மூலம் ஈழத்தமிழரை வடக்கு வாழ் கிழக்கு வாழ் சமுகங்கள் என வகைப்படுத்தி சமுகங்களின் நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினையாக ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினையை மாற்றிடக் கூடிய முறையில் வேகமாகச் செயற்பட்டு வருகின்றனர். இப்போக்குக்கு ஈழத்தமிழரால் சனநாயக முறைகளில் எதிர்வினையாற்றப்படாத நிலை தொடர்கிறது என்ற உண்மையை இலக்கு இவ்வாரத்தில் தாயக மற்றும் புலம்பதிந்த ஈழத்தமிழர்களுக்குக் கவனப்படுத்த விரும்புகிறது.

ஈழத்தமிழர்களின் தேசியப்பிரச்சினையை இதுதான் என தொடர்ந்து உலகிற்கு விளக்குவதில் ஈழத் தமிழர்கள் இன்று காட்டும் அலட்சியமே ஈழத்தமிழர்களின் இறைமை ஒடுக்கத்துக்கும் தேசிய ஒடுக்கத்துக்கும் எதிரான எதிர்வினையாற்றத் தடையாகவுள்ளது என்பது இலக்கின் கருத்து. உலக அரசியல் மொழியில் கூறுவ தானால் ஈழத்தமிழர் தேசியப்பிரச்சினை என்பது பிரித்தானிய காலனித்துவத்தால் தீர்க்கப்படாத அனைத்துலக நாடுகளின் மன்றமான ஐக்கிய நாடுகள் சபையினால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையாக 1948 முதல் இன்று வரை தொடர்கிறது என்பதாகவுள்ளது.

இந்த ஈழத்தமிழர் தேசியப்பிரச்சினைக்கு பிரித்தானியக் காலனித்துவ அரசு 1833இல் கோல்புறூக் கமரோன் அரசியல் சீர்திருத்தம் ஈழத்தமிழரின் யாழ்ப்பாண அரசின் இறைமையையும் மக்களையும் சிங்களவர்களின் கண்டி கோட்டே அரசுக்களின் இறைமைகளுடனும் கண்டிய மக்கள் கோட்டே மக்களுடனும் இணைத்து ஈழத்தமிழரின் விருப்பு எந்த வகையிலும் பெறப்படாது உருவாக்கிய சிலோன் என்னும் ஒற்றையாட்சி நாடும் அதன் சிலோன் அரசாங்கம் என்னும் அரசுமே மூலகாரணமாகவுள்ளது என்பது உலகு நன்கறிந்த வரலாறு. இதனால் 1833 முதல் இன்று வரை சட்டவாக்கத்தை சிங்கள மேலாதிக்கமில்லாது ஈழத்தமிழர்கள் சனநாயக பாராளமன்ற முறைமையில் செய்ய இயலாதவர்களாக 193 ஆண்டுகள் வாழ்கின்றனர் அவ்வாறே 1931இல் பிரித்தானியக் காலனித்துவம் கொண்டு வந்த டொனமூர் அரசியல் சீர்திருத்தம் முதல் இன்று வரை 95 ஆண்டுகளாக ஈழத்தமிழர்கள் தமது தேச இனத்தவர் என்ற உண்மை உலகுக்கு மறைக்கப்பட்டவர்களாக சிறுபான்மையினம் என்ற பிரித்தானிய காலனித்துவ வகைப்படுத்தலில் தங்களுடைய யாழ்ப்பாண அரசினதும் வன்னியரசினதும் நிலப்பரப்புக்களான இலங்கையின் வடக்கு கிழக்கில் சிங்கள மேலாதிக்க நிர்வாகத்தின் கீழ் வாழ்பவர்களாக 95 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர்.

அடுத்து ஏற்கனவே பிரித்தானியா சோல்பரி அரசியலமைப்பால் சிங்கள நவகாலனித்துவத்தை உருவாக்கிய 04.02.1948 முதல் 78 ஆண்டுகள் சிங்களப் பெரும்பான்மை ஒற்றை யாட்சிப் பாராளுமன்ற முறைமையுள் ஈழத்தமிழர்கள் தம்முடைய தன்னாட்சி உரிமையைப் பய்ன்படுத்தித் தங்களின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்க இயலாதவர்களாக காலனித்துவத்தால் தீர்க்கப்படாத பிரச்சினையை அனுபவித்து வருகின்றனர். அதே வேளை பிரித்தானிய பிரிவிக்கவுன்சில் சிலோன் அரசாங்கத்திறகு சிங்களமட்டும் சட்டத்தை மீளப்பெற்று சோல்பரி அரசியலமைப்புக்கு அமைய மீளவும் கொண்டு வருமாறும் வழக்குத் தொடுத்த சிலோன் அரசாங்கத்தின் சிங்களம் மட்டும் சட்டத்தால் வேலையிழந்த எழுதுவினைஞர் கோடீஸ்வரன் அவர்களுக்கு நட்ட ஈட்டுடன் மீளவும் வேலையைக் கொடுக்குமாறும் சோல்பரி அரசியலமைப்பின் 29(2) விதியின் கீழ் 1969 இல் தீர்ப்பு வழங்கியது. இந்தத் தீர்ப்பை நடைமுறைப்படுத்தாது மாட்சிமைக்குரிய 2வது எலிசபேத் அரசியவர்கள் சிலோன் அரசின் தலைவர் என்ற சோல்பரி அரசியலமைப்பை வன்முறைப்படுத்தி, 1970 களில் சிறிமாவோ பண்டாரநாயக்காவை பிரதமராகக் கொண்டிருந்த சிங்கள அரசாங்கம் சிலோன் அரசாங்கத்தின் பாராளமன்றக் கட்டிடத்துக்கு வெளியே நவரங்கலா மண்டபத்தில் தன்னிச்சையாக சிறிலங்கா சிங்கள பௌத்த குடியரசை நிறுவும் அரசியலமைப்புச் சபையை அமைத்து 22.05. 1972 இல் அதனை பிரகனடப்படுத்தி சிலோன் என்னும் பெயரையும் சிறிலங்காவென மாற்றி பாராளுமன்றம் என்ற சொல்லையும் மாற்றி சிறிலங்கா தேசிய சபையை நிறுவினர்.

இதனால் அன்றைய ஈழத்தமிழர்களின் அரசியல் தலைவராக விளங்கிய சா.ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் அரசற்ற தேசஇனமாகிவிட்ட ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் ஈழத்தமிழர்கள் தங்களுடைய அரசியல் எதிர்காலத்தை முன்னெடுப்பரென உலகுக்கு அறிவித்துத் தனது காங்கேசன்துறைப் பாராளுமன்ற உறுப்புரிமையை விட்டு விலகி அந்தத் தேர்தல் தொகுதியில் நடக்கும் மக்கள் வாக்களிப்பை ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமைப்பிரகடனத்துக்கான அடையாள குடியொப்பமாக அறிவித்து அத்தேர்தலை; சிறிலங்கா அரசாங்கம் காலதாமதமாக 1975 இல் நடத்திய பொழுது அதில் ஒன்பதினாயிரத்துக்கு அதிகமான வாக்குகளால் வெற்றி பெற்று சிறிலங்கா தேசிய சபையில் சத்தியம் செய்து உறுப்பினராக இணையாது அந்தத் சபையில் ஈழத்தமிழர்களின் தன்னாட்சிப் பிரகடனத்தை அறிவித்து சிறிலங்கா சிங்கள பௌத்த குடியரசில் இருந்து வெளியேறினார். 1976 இல் இந்த ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமைப்பிரகடனம் வட்டுக்கோட்டைத் தீர்மானமாக மே14இல் பண்ணாகமத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி உலகிற்கு அறிவித்து.

1977 பொதுத்தேர்தலை வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கான வடக்கு கிழக்கு தழுவிய குடியொப்பமாக அறிவித்து வெற்றியும் பெற்றனர். இவ்வாண்டு இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் 50 வது ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பொன்விழா ஆண்டாக 14.05. 2026இல் வருகிறது. இந்த உண்மையினை ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் இன்று உலகிற்கும் ஈழத்தமிழ் இளைய சமுதாயத்திற்கும் வெளிப்படையாக கூறி ஈழத்தமிழர்கள் பிரிவினை கோரவில்லை தங்களின் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தங்களின் வரலாற்றுத் தாயகத்தில் தங்களின் ஈழத்தமிழர் என்ற தேசியத்தின் அடிப்படையில் தங்களின் பாதுகாப்புடன் கூடிய அமைதியையும் வளர்ச்சிகளையும் கொண்ட அரசியல் எதிர்காலத்தைத் தங்களின் பிரிக்க இயலாத தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் நிர்ணயித்தல் என்பதே ஈழத்தமிழரின் தேசியப்பிரச்சினை என்பதை உறுதி செய்யத் தவறுகிறார்கள். இதுவே சிறிலங்காவின் இன்றைய அரசான தேசிய மக்கள் சக்தி இந்த ஈழத்தமிழரின் தேசியப்பிரச்சினையை வடக்கின் பிரச்சினை எனவும் கிழக்கின் பிரச்சினை எனவும் வகைப்படுத்திட வழிசெய்கிறது. எனவே வடக்கு கிழக்கின் நிலம் ஈழத்தமிழர்களுடையது என்பதை நிலைநாட்டுவதே ஈழத்தமிழரின் தேசியப்பிரச்சினை என்பதை தேசிய மக்கள் சக்திக்கு உணர்த்திட வேண்டும். இதனை உறுதிப்படுத்தக் கூடிய தீர்வே ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைக்கான தீர்வென்பதையும் அழுத்தமாக எடுத்துரைக்க வேண்டும்.

இன்று உலகம் உள்ள நிலையில் ஈழத்தமிழர்கள் தங்களிடையிலும் உலக மக்கள் இடையிலும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தெளிவாக மீள் விளக்கமளிப்பதன் மூலமே ஈழத்தமிழரின் இறைமை ஒடுக்கத்தையும் தேசிய ஒடுக்கத்தையும் தடுத்து நிறுத்த முடியும் என்பதே இலக்கின் இவ்வாரக் கருத்தாகவுள்ளது.

**ஆசிரியர்**




# ரஷ்ய எரிபொருள் கொள்வனவு மறைந்துள்ள மர்மங்கள்

விதுரன்

இலங்கையின் அண்மைய நாட்களில் வலுத்து வரும் நெருக்கடியான பொருளாதாரச் சூழலில் எரிசக்தி பாதுகாப்பு என்பது வெறுமொரு துறை சார்ந்த விவகாரமாக மட்டுமன்றி, நாட்டின் தேசிய பாதுகாப்போடு பின்னிப் பிணைந்தவொரு உயிர்நாடிப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு இலங்கை சந்தித்த வரலாறு காணாத பொருளாதார நெருக்கடி, இறக்குமதி செய்யப்படும் பெற்றோலியப் பொருட்களில் நாடு கொண்டுள்ள அதீத தங்கியிருப்பையும், அதன் விளைவாக ஏற்படக்கூடிய சமூக மற்றும் அரசியல் அதிர்வுகளையும் உலகிற்குப் பறைசாற்றியது.

இந்த இக்கட்டான பின்னணியில், உலகளாவிய எரிசக்தி சந்தையின் பெரும் சக்தியாகத் திகழும் ரஷ்யாவுடன் இலங்கை மேற்கொண்டு வரும் புதிய இராஜதந்திர நகர்வுகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

கொழும்புக்கு கடந்த வாரம் 11 ஆவது இலங்கை - ரஷ்ய இருதரப்பு அரசியல் கலந்தாராய்வுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக விஜயம் செய்த ரஷ்யப் பிரதி வெளி விவகார அமைச்சர் அன்ரே ருடென்கோவின் கருத்துக்கள், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு வெறும் வர்த்தக ரீதியானது மட்டுமல்ல, அதுவொரு நீண்டகால மூலோபாயப் பங்களிப்பை நோக்கியது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

ரஷ்யாவைப் பொறுத்தவரை, இலங்கை போன்ற ஆசிய நாடுகளுக்கு எரிபொருளை வழங்குவது என்பது தற்காலிக விற்பனை முயற்சி அல்ல. அதற்கான தேவைப் பாடும் ரஷ்ய அரசுக்கு கிடையாது.

மாறாக, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைகளுக்கு மத்தியில் தனது பொருளாதாரச் செல்வாக்கை ஆசியப் பிராந்தியத்தில் நிலை நிறுத்திக்கொள்வதற்கான நீண்டகால வியூகமாகும்.

ரஷ்யாவிடம் உள்ள கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு வளங்கள் அளவற்றவை அல்ல என்ற போதிலும், ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தங்களை முழுமையாக நிறைவேற்றுவதில் அந்த நாடு உறுதியாக உள்ளது.



குறிப்பாக, மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் மற்றும் விநியோகச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள் காரணமாக இலங்கை போன்ற நாடுகள் எரிபொருள் இறக்குமதியில் பாரிய சவால்களை எதிர்கொள்கின்றன.

இத்தகைய தருணத்தில் ரஷ்யாவிடமிருந்து சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளைப் பெற்றுக்கொள்வது பாதுகாப்பானதொரு தெரிவாக அமைகிறது. இருப்பினும், சர்வதேச அரசியல் சூழலில் அமெரிக்காவின் ‘இரண்டாம் நிலைத் தடைகள்’ குறித்த அச்சம் பல நாடுகளை ரஷ்யாவுடன் நெருங்குவதிலிருந்து தடுத்து வருகின்றன.

ஆனால், தற்போது அமெரிக்கா, ரஷ்ய எரிசக்தி மீதான சில தடைகளைத் தளர்த்தியுள்ள சூழலை இலங்கை போன்ற நாடுகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே ரஷ்யாவின் எதிர்பார்ப்பாக உள்ளது.

ரஷ்யா தனது எரிசக்தி விநியோகத்தை ‘உடனடி சந்தை’ விலையில் வழங்காமல், நீண்டகால ஒப்பந்தங்களின் அடிப்படையில் வழங்க விரும்புவது, இலங்கைக்கு எரிசக்தி விலைகளில் நிலையான தன்மையை ஏற்படுத்திக் கொடுக்க உதவும். இது உள்நாட்டுப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும், மின்சாரக் கட்டண அதிகரிப்பைத் தவிர்க்கவும் பேருதவியாக இருக்கும்.

இலங்கையின் நீண்டகால மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அணுசக்தி ஒரு சிறந்த மாற்றாக முன்வைக்கப்படுகிறது. ரஷ்யாவிடம் மட்டுமே உள்ள ‘மிதக்கும் சிறிய அணுமின் நிலையம்’ என்ற தனித்துவமான தொழில்நுட்பம் இலங்கைக்கு மிகவும் பொருத்தமானதாக கருதப்படுகிறது.

பெரும் கப்பலில் பொருத்தப்பட்ட இந்த மின் நிலையம், நாட்டின் கடற்கரைக்கு அருகில் கொண்டு வரப்பட்டு தேவையேற்படும் போது மின்சாரத்தை வழங்க முடியும். நிலப்பரப்பில் அணுமின் நிலையங்களை அமைப்பதில் உள்ள இடப்பற்றாக்குறை மற்றும் சூழலியல் சார்ந்த எதிர்ப்புகளைத் தவிர்க்க இந்தத் தொழில்நுட்பம் ஒரு வரப்பிரசாதமாகும்.

இலங்கை ஏற்கனவே ரஷ்யாவுடன் அணுசக்தித் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துள்ள போதிலும், அவை இன்னும் நடைமுறைக்கு வராதது பெரிய குறைபாடாகும். இந்த விடயத்தில் இலங்கை மீது ரஷ்யாவுக்கு கடுமையான அதிருப்திகள் இன்னமும் நீடிக்கின்றன.

அதன் வெளிப்பாடகவே அண்மையில், இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ். ஜகார்யனை ‘இலங்கையில் ரஷ்யா முதலீடுகளைச் செய்வதற்கு என்ன இருக்கின்றது?’ என்ற கேள்வியை பகிரங்கமாகவே எழுப்ப வைத்திருந்தது.

இவ்வாறான நிலையில் ரஷ்யப் பிரதி வெளி விவகார அமைச்சர் அன்ரே ருடென்கோ, தற்போது தொழில்நுட்ப ரீதியாகவும் இயந்திர உபகரணங்கள் ரீதியாகவும் இலங்கைக்கு முழுமையான ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த உறுதியளிப்பு நாட்டின் மின்சக்தித் துறையில் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய காரணியாகும். இத்தகைய தொழில்நுட்பப் பரிமாற்றம் இலங்கையை பிராந்தியத்தின் சக்திவாய்ந்த பொருளாதார மையமாக மாற்ற உதவும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்துகின்றது.

எவ்வாறாயினும், குறித்த விடயங்கள் அடுத்தடுத்த கட்ட உரையாடல்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டிய எதிர்காலத்திட்டங்களாகவே உள்ளன. தற்போதைய நிலையில் இலங்கைக்கு அவசியமாகத் தேவைப்படுவது எரிசக்தியே.

அந்த விடயத்தில் ஆரம்பத்தில் இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ். ஜகார்யனை நேரடியாக அழைத்த வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் எரிபொருள் விநியோக கோரிக்கையை பகிரங்கமாகவே விடுத்திருந்தார்.

உடனடியாகவே தகவல் மொஸ்கோவுக்கு வழங்கப் பட்ட நிலையில் தான், ரஷ்ய வலுசக்தி பிரதி அமைச்சர் றோமன் மார்ஷவின் அவசரஅவசரமாக இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

அவரிடத்தில் நேரடியாகவே எரிபொருள் கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில் எரிபொருளை வழங்குவதற்கு ரஷ்யா தயாராக இருக்கின்றபோதும் அதனை நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கே தயாராக இருப்பதாக இலங்கைக்கு வெளிப்படுத்தப்பட்டது.

அத்தோடு ரூபிள் அல்லது யுவான் ஊடாகவே எரிபொருள் விநியோகத்துக்கான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கே தயாராக இருப்பதாகவும் உறுதியாக வெளிப்படுத்தப்பட்டது.



ரஷ்யாவினுடைய வர்த்தகம் டொலர் அல்லது யூரோ போன்ற முக்கிய நாணயங்களிலிருந்து விலகி, மிக வேகமாக தேசிய நாணயங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

உலகளவில் டொலரின் ஆதிக்கம் குறைவதாக கருதும் ரஷ்யா சில ஆண்டுகளுக்கு முன்பு உலக வர்த்தகத்தில் டொலரின் பங்கு சுமார் 67சதவீதமாக இருந்ததையும் தற்போது அது சுமார் 40சதவீதமாக குறைந்துள்ளமையையும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆகவே இலங்கையுடனான தனது வர்த்தகத்தை தேசிய நாணயங்களான ரூபிள் அல்லது யுவான் ஊடாக முன்னெடுப்பதிலிருந்து விலகி நிற்பதற்கு ரஷ்யா தயாராக இல்லை.

இலங்கையைப் பொறுத்தவரை, டொலர் கையிருப்பு நெருக்கடிக்கு இதுவொரு சிறந்த தீர்வாக அமையும். ஆனால் இலங்கை டொலர், யுரோவில் தான் கொள்வனவுகளை எதிர்பார்க்கிறது.

அதேபோன்று ‘அரசாங்கம் - அரசாங்கம்’ என்ற அடிப்படையில் எரிபொருளைக் கொள்வனவு செய்வதன் மூலம் இடைத்தரகர்களின் தலையீட்டைத் தவிர்க்க முடியும் என்றும் எதிர்பார்க்கின்றது.

ஆனால் ரஷ்யாவைப் பொறுத்தவரையில் ரூபிள் அல்லது யுவான் ஊடாக வர்த்தகம் இடம்பெறாது விட்டால் ‘சர்வதேசத் தடைகளைத் தவிர்ப்பதற்காக தனியார் நிறுவனத்தின் ஊடாக வர்த்தகத்தை முன்னெடுத்தல்’

தொடர்ச்சி: பக்கம் 18

# அமெரிக்க ஈரான் போர்: இலங்கையின் பொருளாதாரம் ஈடு செய்ய நமக்கு நாமே துணை!

பா.அரியநேத்திரன்

இலங்கை 2022 தொடக்கம் 2026 தற்போதுவரை கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் மெதுவான மீட்சியைச் சந்தித்து வருகிறது. பணவீக்கம் கட்டுக்குள் வந்தாலும், வறுமை விகிதம் 2026 வரை 20% க்கும் அதிகமாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதார நிலைப்படுத்தல், கடன் மறுசீரமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை வளர்ச்சி ஆகியவை மீட்புக்கு உதவினாலும், மக்கள் மீதான நிதிச்சுமை தொடர்ந்து நீடிக்கிறது.



2024 இல் இலங்கையின் பொருளாதார நிலை குறித்த முக்கிய அம்சங்களாக 2024 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் 5% வளர்ச்சி அடைந்ததாகக் கணக்கிடப் பட்டுள்ளது. இது 2022 இன் பொருளாதாரச் சரிவுக்குப் பின் ஏற்பட்ட நேர்மறையான மாற்றமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் மற்றும் கடன் மறுசீரமைப்பு விரிவாக்கப்பட்ட நிதி வசதி தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, இரண்டாவது தவணை பெறப்பட்டது. மேலும், வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, ‘கட்டுப்படுத்தப்பட்ட திவால்’ நிலையிலிருந்து இலங்கை மீண்டது. வறுமை நிலை இன்னும் உச்சத்தில் உள்ளது, குறிப்பாக 2026 ஆம் ஆண்டு வரை அது 20% க்கும் அதிகமாகவே இருக்கும் என உலக வங்கி அறிக்கை கணித்துள்ளது.



இலங்கையானது கிராமங்கள் நிறைந்த நாடு என்ற வகையையும் கொண்டது. இங்குள்ள கிராமங்களில் பெரும்பாலானவை பொருளாதார நிலையில் மிகப் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. இலங்கையிலுள்ள பதிவு செய்யப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை சுமார் 14000 மற்றும் அதே அளவு எண்ணிக்கையில் கிராம சேவக உத்தியோகத்தர்கள் பிரிவுகளும் உள்ளன.



இவ்வாறான நிலையில் மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த நிலைமை அமெரிக்கா ஈரான் யுத்தம் அதனால் ஏற்பட்ட மத்திய கிழக்கின் போர் தாக்கத்தின் விளைவுகளால் இன்று இலங்கை வாழ் மக்களும் குறிப்பாக வடகிழக்கு மக்களும் பல நெருக்கடிகளை சந்திக்கும் ஆண்டாக எதிர்வரும் சித்திரை புத்தாண்டு மலர உள்ளது.

போர்களால் பேரழிவை ஏற்படுத்தி, கட்டமைப்பு மற்றும் மனித வளங்களை அழிப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை வெகுவாகப் பாதிக்கின்றன. போர் நிலவும் நாடுகளில் சராசரியாக 30% பொருளாதார உற்பத்தி சரிவு மற்றும் 15% வரை பணவீக்கம் ஏற்படுகிறது. இது முதலீடுகளைக் குறைத்து, நீண்ட கால வறுமை மற்றும் கடன் சுமையை உருவாக்குகிறது.

போர் பொருளாதாரத்தின் முக்கிய பாதிப்புகளாக உற்பத்தி இழப்பு தொழிற்சாலைகள், உள்கட்டமைப்பு மற்றும் மனித மூலதனத்தின் அழிவு. பணவீக்கம்,போருக்கான நிதியைத் திரட்ட நாணயங்களை அச்சிடுவதால், பொருட்களின் விலை கடுமையாக உயர்கிறது.

உள்நாட்டு மற்றும் அண்டை நாடுகள் பாதிப்பு போரிடும் நாடுகள் மட்டுமல்லாது, அண்டை நாடுகளிலும் பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு, வர்த்தகம் குறைகிறது. நுகர்வோர் பொருட்களின் உற்பத்தி குறைக்



கப்பட்டு, ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு சார்ந்த உற்பத்திகளுக்கு அரசு முக்கியத்துவம் அளிக்கிறது.

வேலைவாய்ப்பு மற்றும் வறுமை போரின் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து, வறுமை நிலை மோசமடைகிறது. இவ்வாறான தாக்கம் இலங்கையிலும் ஏற்படலாம். இவைகளில் இருந்து ஈடு செய்யக்கூடிய விடயங்களை தற்போதைய தேசிய மக்கள் அரசால் முன் எடுத்தாலும் அவர்களால் முழுமையாக இலங்கையின் பொருளாதாரத்தை மீளவும் சீர் செய்வது என்பது இன்னும் பல வருடங்கள் கடக்கலாம். எதிர்கட்சிகளை பொறுத்தவரை வழமையாக ஆளும் தரப்பை குற்றம் சாட்டும் பராம்பரிய அரசியலே இப்போதும் உள்ளன.



ஆனால் இந்த பொருளாதார நெருக்கடிகளால் மின்சார வாடகை, எரிபொருள் விலை ஏற்றம், என்பவற்றின் தாக்கம் அத்தியாவசிய பொருட்கள் தொடக்கம் உடுதுணி மற்றும் சகல உணவுப் பண்டங்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. மக்களைப் பொறுத்தவரை ஆடம்பர பொருட்களையும், அனாவசிய பொருட்களையும், அலங்காரப் பொருட்களையும் வாங்குவதை தவிர்த்து அன்றாட உணவுப்பொருட்களை மட்டும் கொள்வனவு செய்ய பழகுவது அவசியமாகும்.

இவைகளுடன் வீட்டுத் தோட்டங்கள், சுயதொழில் வளர்ச்சியையும் ஊக்கப்படுத்துவதும் கட்டாயமாகும் ஏனெனில் ஈரான் அமெரிக்கா போர் எப்போது முற்றுப்பெறும் மேலும் அழிவுகளை ஏற்பட்டுத்துமா என்பதற்கெல்லாம் எவராலும் விடை கூறமுடியாது.

விவசாயம் சார்ந்த தொழில்,முதலில் வருவது கால்நடை வளர்ப்பு, கறவை மாடுகளை நிலம் உள்ளவர்கள் வீட்டில் வளர்பது அதனால் பால் உற்பத்தியும், அதன் சாணம் வயலுக்கு சிறந்த உரமாக பயண்படும்.

வீட்டுத் தோட்டம் இருந்தால் வாழை, முருங்கை மற்றும் காய்கறி பயிரிடலாம். இது குடும்ப தேவைக்கும், சில்லறை வருமானத்திற்க்கான சிறந்த பக்க வியாபாரம். மேற்கூறிய மூன்று தொழிலை சிறப்பாக நடத்தினால் குடும்பம் நடத்த நமக்கு தேவையான பொருளாதாரம் நல்ல முறையில் கிடைக்கும்.

வடக்கு கிழக்கு மக்களை பொறுத்தவரை ஈழ விடுதலைப் போராட்டங்களில் பல பொருளாத தடைகளை சந்தித்த மக்கள் என்பதால் அவர்களுக்கு ஏனைய மாவட்ட மக்களை விட அனுபவம் உண்டு. குறிப்பாக 2006 ஜனவரி தொடக்கம் 2010 வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்று இலட்சம் மக்கள் முடக்கப்பட்டு பாரிய போராட்டம் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல், விமான குண்டுத் தாக்குதல் என்பவற்றுக்கு முகம்கொடுத்து ஒருவேளை உணவு கூட கிடைக்காமல் கஞ்சி குடித்து வாழ்ந்து பழக்கப்பட்டவர்களும் பல ஆயிரம் மக்கள் பல இடர்களை சந்தித்து பொருளாதார நெருக்கடிகளை சமாளித்த வரலாறுகள் உண்டு.

ஆனால் தற்போதைய பொருளாதார நெருக்கடி அமெரிக்கா ஈரான் போரால் இலங்கை பொருளாதார நெருக்கடிகளை சந்திக்கும்போது சகல மக்களும் சுய தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக சிக்கனமான வாழ்க்கையை கடைப்பிடிப்பது காலத்தின் தேவையாக உள்ளது.

சுயதேவை பொருளாதார நடைமுறையை பின்பற்றுவதன்மூலம் ஒருசமூகம்,கிராமம் அல்லது நாடு தனக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை உணவு, உடை, உறைவிடம் பிறரைச் சாராமல், உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து பயன்படுத்தும் முறை ஒன்றை கையாள்வதற்கு உள ரீதியான மாற்றத்தை இப்போது ஏற்படுத்துவது அவசியமாகும். இறக்குமதியை எதிர்பார்க்காமல் , உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்து, பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதே காலத்தின் தேவையாகும்.

தற்போதைய உலக போர் சூழல் அதனால் ஏற்படும் தாக்கம் உள்ளாட்டில் மக்கள் முகம் கொடுத்து அதனை எதிர்கொள்ள கூடிய செயல் அமர்வுகளையும், கருத்தரங்குகளையும் சகல சமூக அமைப்புகள், அரசியல் கட்சிகள், மத தலைவர்கள்,பொது நிறுவனங்கள் தற்போது மக்களுக்கு விழிப்பூட்டும் செயல்பாடுகளை முன் எடுப்பதும் இன்றைய இக்கட்டான காலத்தில் அவசியமாகும்.

தற்போதைய ஈரான் அமெரிக்கா போர் எப்போது முற்றுப்பெறும் என்பதை எவராலும் கூறமுடியாத நிலையே காணப்படுவதால் இதனை உணர்ந்து நாமும் மற்றவர்களில் தங்கி இராமல் நமக்கு நாமே துணை என்ற எண்ணப்பாட்டுடன் வாழ்வதே சிறப்பு.

• • •




# உலகின் கையிருப்பு நாணயம் மாறுகிறது?

# டொலர் ஆட்சிக்கு ஆபத்து!

**சர்வதேச அளவில் தற்பொழுது நிலவும் போர்ச் சூழலை மைய மாக வைத்து, அதன் வரலாற்றுப் பின்னணியைப் பற்றிவிவாதிக்க இருக்கி றோம். குறிப்பாக, *Petrol Dollars* மற்றும் அதன் பின்புலம் குறித்து உரையாட, கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளி யல் துறை மூத்த பேராசிரியர் கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி அவர்கள் இலக்கு மற்றும், உயி ரோடை தமிழ் வானொலி ஆகியவற்றிற்கு வழங்கிய நேர்காணல்.**

**கேள்வி :**

**பெற்றோல் டொலர்' என்றால் என்ன? 1970 களுக்கு முற்பட்ட அதன் வரலாற்றையும், அது உருவான பின்னணியையும் கூற முடியுமா?**

**பதில் :**

இரண்டாம் உலகப் போருக்குப் பின், உலகளாவிய வர்த்தகத்தை மேற்கொள்வதற்கான பொதுவான நாணய அமைப்பு எதுவும்இருக்கவில்லை. ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தை எந்த நாணயத்தில் செய்வது என்ற குழப்பம் நிலவியது. இப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் வகையில், அமெரிக்காவின் பிரிட்டன் வூட்ஸ் (Bretton Woods) என்ற நகரில் 37 நாடுகளின்பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநாடு நடைபெற்றது. இந்த விவாதங்களின் அடிப்படையில் தான் சர்வதேச நாணய நிதியம்(IMF), உலக வங்கி (World Bank) மற்றும் பொதுவான வர்த்தக ஒப்பந்தமான GATT போன்றவை உருவாயின.

இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம், சர்வதேச வர்த்தகத்தை முறையாகவும், பாதுகாப்பாகவும் கொண்டு செல்வதற்கானநாணய ஒழுங்குமுறையை ஏற்படுத்துவதா கும். எந்த நாணயத்தை பொதுவான வர்த்தக நாணயமாக ஏற்றுக்கொள்வது என்றகேள்வி எழுந்தபோது, அமெரிக்க டொலரை ஏனைய நாடுகள் ஏற்றுக்கொள்வதாகவும், அமெரிக்க டொலரின் மதிப்பைத்தங்கத்தின் அடிப்படையில் நிர்ணயிப்பதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன்படி, ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 35 டொலராக நிர்ணயிக்கப்பட்டு, அமெரிக்க டொலருக்குத் தங்கம் அடிப்படையாக அமைந்தது. ஏனைய நாடுகள் தங்கள் நாட்டுநாணயத்தை அமெரிக்க டொலருடன் இணைக்கும் அமைப்பு உருவாக் கப்பட்டது. அதாவது, அமெரிக்கா ஒரு தலைமை நாடாக இருந்து பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காக, 35 டொலரைக் கொடுத்தால் ஒரு அவுன்ஸ் தங்கத்தைத்திருப்பிக் கொடுப்பதாக அமெரிக்கா ஒப்புக் கொண்டது. இதனால், அமெரிக்க டொலருக்குத் தங்கத்தின் பாதுகாப்புபின்புலமாக இருந்தது. உலக வர்த்தகத்தில் இது தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்தது.

**கேள்வி :**

**இந்த அமைப்பில் 70களில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் தங்கக் கட்டுப்பாட்டிலிருந்து டொலர் விடுவிக் கப்பட்டதன் பின்னணி என்ன?**

**பதில் :**

1960களில் ஏற்பட்ட வியட்நாம் போர் மற்றும் அமெரிக்காவில் ஏற்பட்ட உள்நாட்டுப் பணவீக்கம் காரணமாக, அமெரிக்க டொலரின் மதிப்பில் தாக்கம் ஏற்பட்டது. அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு இது மிகப்பெரிய சுமையாக மாறியது. இதை உணர்ந்த ஏனைய நாடுகள், குறிப்பாக ஏற்றுமதியை அதிகம் செய்து இறக்குமதியைக் குறைவாகக் கொண்ட நாடுகள், குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகள், அமெரிக்க டொலர்களைக் கொடுத்து தங்கத்தைக் கொள்வனவு செய்ய முற்பட்டன. இதனால், அமெரிக்காவின் தங்கக் கையிருப்பு வெகுவாகக் குறையும் என்பதை உணர்ந்த அமெரிக்க அதிபர் ரிச்சர்ட் நிக்சன், 1971ல் அமெரிக்க டொலருக்கான தங்கத்தின் மதிப்பீட்டை நிறுத்தி வைத்தார். இனி தங்கத்திற்குப் பதிலாக டொலரைக்கொடுக்க முடியாது என அறிவித்தார்.

**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



இதனால், தங்கத்தின் பின்புலம் இல்லாமல் மற்ற நாடுகள் ஏன் டொலரை நம்ப வேண்டும் என்ற கேள்வி எழுந்தது. அதேநேரத்தில், இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையே போர் மூண்டது. அமெரிக்கா வழக்கம் போல இஸ்ரேலுக்கு ஆதரவாக நின்றது. இதனால் கோபமடைந்த அரபு நாடுகள், குறிப்பாக எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள், அமெரிக்காவுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்யக்கூடாது எனத் தடை விதித்தன. இது அமெரிக்காவுக்கு மிகப்பெரியபொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியது.

**கேள்வி :**

**சவுதி அரேபியாவுடன் அமெரிக்கா செய்து கொண்ட உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள் என்ன?**

**பதில் :**

இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காக, அப்போதைய அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹென்றி கிசிஞ்சர் சவுதிஅரேபியாவுக்கு விஜயம் மேற்கொண்டார். அப்போ தைய மன்னர் பைசலுடன் பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு உடன்படிக்கையைச் செய்துகொண்டார். அந்த உடன் படிக்கையின்படி, சவுதி அரேபியா தனது எண்ணெய் ஏற்றுமதிமுழுவதையும் டொலரிலேயே மேற்கொள்ளும். அதற்குப்பிரதியுபகாரமாக,அமெரிக்காசவுதி அரேபியாவுக்கு முழுமையான பாதுகாப்பையும், இராணுவ உதவியையும் வழங்கும். மேலும், சவுதி அரேபியா இந்த வர்த்தகத்தின் மூலம் பெறும் டொலர் கையிருப்புகளை அமெரிக்காவில் உள்ள திரைசேரி முறிகளிலும் (Treasury Bonds) ஏனைய நிதி கட்டமைப்புகளிலும் வைப்புசெய்யும். இதுவே 'பெற்றோல் டொலர் உடன்படிக்கை' என அழைக்கப்பட்டது. தங்கத்திற்குப் பதிலாக எண்ணெய் இப்போது அமெரிக்க டொலருக்குப் பாதுகாப்பான அரணாக நின்றது. இந்த உடன்படிக்கை நாடுகளின் தலைவிதியைத் தீர்மானிக்கும்சக்தியாக மாறியது.

**கேள்வி :**

**மற்ற ஒபெக் (OPEC) நாடுகள் எப்போது இந்த உடன்படிக்கையில் இணைந்தன?**

**பதில் :**

சவுதி அரேபியா இந்த உடன்படிக்கையைச் செய்து கொண்ட உடனேயே, மற்ற ஆறு முக்கியமான எண்ணெய்ஏற்றுமதி நாடுகளும் வெவ்வேறு காலகட்டங்களில் இதில் இணைந்து கொண்டன. அமெரிக்காவுக்கு எண்ணெய் ஏற்றுமதிசெய்யக்கூடாது என ஒப்புக்கொண்ட நாடுகளே, இந்த உடன்படிக்கையின் பின்னர் தங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு இதில் இணைந்தன. அவர்களுக்குத் தங்களுடைய டொலர் கையிருப்புகளை முதலீடுசெய்ய வாய்ப்பு கிடைத்தது. மறுபுறம், அமெரிக்கா இந்த நாடுகளுக்குப் பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்கியது. இதனால் அமெரிக்க டொலர் ஒரு சர்வதேச நாணயமாக மாறியது மட்டுமல்லாமல், உலகளாவிய ரீதியில் இந்த நாணயத்தைப் பயன்படுத்தி மற்ற நாடுகளைக் கட்டுப்படுத்தவும், யுத்த உபகரணங்களாகப் பயன்படுத்தவும் வழிவகுத்தது.

**கேள்வி :**

**பெற்றோல் டொலர் உடன்படிக்கையை மீறியதற் காகத்தான் சதாம் உசைன் மற்றும் கடாபி படுகொலை செய்யப்பட்டார்களா?**

**பதில் :**

நீங்கள் குறிப்பிட்டது சரிதான். லிபியா மற்றும் ஈராக் போன்ற நாடுகளும் இந்த பெற்றோல் டொலர் உடன்படிக்கையைப் பயன்படுத்தி அமெரிக்கா அடையும் நன்மைகளை உணர்ந்திருந்தன. அமெரிக்கா இந்த டொலர் கையிருப்புகளை வைத்துக்கொண்டு ஏனைய நாடுகளைக் கட்டுப்படுத்துவதையும், பாதுகாப்பு ஒப்பந்தங்கள் மூலம் அரபு உலகம் முழுவதிலும் செல்வாக்கு செலுத்துவதையும் கண்டனர்.

இந்த பொறியில் இருந்து மீள வேண்டும் என்பதற்காக, ஈராக் அதிபர் சதாம் உசைன் டொலரில் அல்லாமல் யூரோவில் எண்ணெய் வர்த்தகத்தை செய்யப் போவதாக அறிவித்தார். இதுதான்அவரது வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. அமெரிக்கா மிகச் சூட்சுமமாக, ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகக்கூறி, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் உத்தரவைப் பெற்று, இராணுவ நடவடிக்கை மேற்கொண்டது. ஈராக்குக்குள் பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்பது கூட்டணியில் இருந்தவர்களுக்குத் தெரியும். ஆனால், டொலரின்


தொடர்ச்சி: பக்கம் 19

# ஊழல் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு: ஒழுக்காற்று நடவடிக்கையில் கவனிக்க வேண்டியவை....?




தாயகத்தில் இருந்து **கலாபாரதீ**

இலங்கையில் ஊழல் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு என்பது அரசின் முக்கியமான கொள்கைகளில் ஒன்றாகத் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் இந்த நடவடிக்கைகள் நாட்டின் சட்ட ஒழுங்கை நிலைநாட்டவும் சமூகத்தைப் பாதுகாக்கவும் அவசியமானவை என்று விளக்குகின்றனர். இருப்பினும், இந்த நடவடிக்கைகள் நடைமுறையில் செயல்படுத்தப்படும் விதம் குறித்து பல்வேறு சமூக மற்றும் மனித உரிமை வட்டாரங்களில் கேள்விகள் எழுகின்றன. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் வாழும் ஈழத்தமிழர்களின் சமூக வாழ்க்கை, கலாச்சார தனித்துவம் மற்றும் அரசியல் வெளிப்பாடு ஆகியவற்றின் மீது இந்த நடவடிக்கைகள் எந்தளவு தாக்கம் செலுத்துகின்றன என்பது ஒரு முக்கியமான விவாதமாக உள்ளது.



இலங்கையின் அரசியல் வரலாறு பல தசாப்தங்களாக இன அரசியலால் வடிவமைக்கப்பட்ட ஒன்று. சிங்கள பெரும்பான்மையும் தமிழர் சிறுபான்மையும் இடையிலான அரசியல் மற்றும் சமூக மோதல்கள் நீண்ட காலமாக நாட்டின் அரசியல் சூழலை தீர்மானித்துள்ளன. உள்நாட்டுப் போர் முடிவடைந்த பிறகும், வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் பாதுகாப்பு அமைப்புகளின் அதிகமான இருப்பு தொடர்ந்தது. இந்த சூழலில் ஊழல் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது, அவை ஒரு சாதாரண சட்ட அமுலாக்க நடவடிக்கையாக மட்டுமல்லாமல், சமூக அரசியல் விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடியதாக மாறுகின்றன.

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் பெரும்பாலும் காவல்துறை மற்றும் பாதுகாப்பு அமைப்புகளின் கண்காணிப்பு, சோதனை, கைது போன்ற நடைமுறைகளைக் கொண்டிருக்கின்றன. சில சமயங்களில் இந்த நடவடிக்கைகள் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையை நேரடியாகப் பாதிக்கக் கூடியதாகவும் இருக்கும். குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் பாதுகாப்பு கண்காணிப்பு அதிகரிப்பதால், அங்குள்ள மக்களின் சமூகச் செயல்பாடுகள், பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சுதந்திரமான இயல்பு வாழ்க்கை சற்றே கட்டுப்பாட்டுக்குள் வரும் நிலை உருவாகலாம். இதனால், அந்த சமூகத்தின் தனித்துவமான வாழ்க்கை முறை குறுக்கீடுகளைச் சந்திக்கிறது என்ற கருத்தும் முன் வைக்கப்படுகிறது.

ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகள் எனும் செயற்பாடானது தற்சமயம் வடக்கு கிழக்கு சார்ந்த தமிழர்கள் பகுதிகளில் பெரும்பாலும் நிகழ்வதை நாம் அவதானிக்கலாம். 2009 இற்குப் பின்னர் தான் இந்த போதைப் பொருள் பாவனை, ஊழல் என்பன இப் பிரதேசங்களை ஆக்கிரமித்தன. இது எவ்வாறு ஆரம்பிக்கப் பட்டது. இதன் பின்னணியில் தமிழர்களின் தலைமைகளில் சிலரும் செயற்பட்டிருக்கின்றனர் என்ற விடயங்கள் செய்திகள் மூலமும் சமூகத்தில் பலரின் கருத்து ஆகவும் முன்வைக்கப் பட்டன.

**அப்போதிலிருந்து இப்போது வரை...**

இராணுவம் காவல்துறை சரியாக இயங்குகிறது என்று சொல்லும் அரசினால் எப்படி இந்த ஊழலும் போதைப் பொருளும் மிகுவாகப் பரவியது? இதன் போது நடந்த பல முறைகேடான பாலியல் கொலைகள், கொள்ளைகள் எப்படி அதிகரித்தன?.

அப்படியாயின் இந்த இராணுவம், காவல்துறை என்ன ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற் கொண்டது?. ஒரு அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இருக்கும் வடக்கு கிழக்கில் இவை எப்படி அறிமுகப் படுத்தப் பட்டு விரைவாகப் பரவியது? தமிழரின் தனித்துவத்தை சிதைக்கும் நடவடிக்கையா இது? இதற்கு தமிழர்களே தமிழர்களுக்கு எதிராக பாவிக்கப் பட்டனரா? என்ற கேள்வி எழுகிறது?



இங்கு இன்னொரு விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். இந்த போதைப் பொருள் ஊழல் என்ற பெயரில் அதிகமாகப் பாதிக்கப் படுபவர்கள் பெண்களும் குழந்தைகளுமே! ஒரு சமூகத்தின் முதுகெலும்பை உடைக்க வேண்டுமெனில் முதலில் கைவைக்கப் படுவது இவர் களிலேயே! என்பது அனைவரும் அறிந்ததொன்று. தற்போதைய சூழ் நிலையில் பல கொலைச் சம்பவங்கள் வடக்கு கிழக்கில் மிகையாக நாளுக்கு நாள் நடந்த வண்ணம் உள்ளன. இதற்கு காரணமென காட்டப்படுபவர்கள் அதே இனத்தைச் சேர்ந்தவர்கள். இதுவும் தனித்துவமான இனத்தின் பெயரை களங்கப்படுத்தும் விதமாக இருக்கிறதல்லவா? போதைப் பொருளுக்கான மற்றும் ஊழல் கைதுகளில் பெயர் சொல்லும் சமூகப் பதவியில் இருந்த தமிழர்கள் அடையாளப் படுத்தப் பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் தண்டனை என்பது வலுவற்ற சமூகம் சார்ந்தவர்களுக்கே நிறைவேற்றப் படுகிறது. இரண்டாயிரத்து ஒன்பதிற்கு முன்னர் இருந்த காலச் சூழலில் குற்றமிழைத்தவர் நீதியான முறையில் தண்டனைக்கு உட்படுத்தப் பட்டார்கள். அதுவே பலரும் குற்றச் செயல்களிலிருந்து விடுபடக் காரணமாக இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.அந்த அமைப்பானது கட்டுப் பாடான ஒரு சமூகத்தை வழி நடத்தியது. அந்தச் சூழ்நிலையில் சமூகச் சீர்கேடுகள் எதுவும் நடக்கவில்லை என்றே கூறலாம்.ஒரிரு சம்பவங்கள் நடக்க முற்பட்ட போது கடுமையான நடவடிக்கைகள் மூலம் தடுத்து நிறுத்தப் பட்டன.

இதை யாராலும் மறுக்க முடியாது. ஆனால் தற்போது அப்படிப் பட்ட அமைப்பில் இருந்து புனர்வாழ்வு பெற்ற போராளிகளில் சிலரது பெயர்கள் தற்சமயம் பாவிக்கப்படுவதும் அடையாளப் படுத்தப் படுவதும் தமிழரின் தனித்துவத்தை பாதிக்கும் விடயமே. இது எமது இனத்தின் மீதான கட்டவிழ்க்கப் பட்ட மறை முகமான இன இழிவுபடுத்தலா ? என்று நினைக்கத் தோன்றுகின்றது.

உண்மையில் ஆரம்பத்தில் இந்த போதைப் பொருள் ஊழலை முன்னைய அரசுகள் நினைத்தால் கட்டுப் பாட்டில் கொண்டு வந்து இருக்கலாம். வடக்கு கிழக்கில் பலத்த பாதுகாப்புக்கு என இராணுவம் குவிக்கப் பட்டு இருந்தன. அவர்கள் என்ன நடவடிக்கைகளை மேற் கொண்டார்கள்? காவற் துறையினருக்கும் இராணுவத்தினருக்கும் போதிய அதிகாரங்கள் இருந்தன. அவர்கள் இவைகளைக் கண்டும் காணாது இருந்தனரோ? காரணம் சர்வ சாதாரணமாக பல கொலைச் சம்பவங்கள், ஊழல்கள் இவர்களுக்கு அருகிலேயே நடந்திருக்கிறது. இதை அப்போதைய செய்திகள் சான்று பகர்கின்றன. இன்னொரு விடயத்தையும் பதிவு செய்ய வேண்டும். பல இடங்களில் இராணுவமும் காவற்துறையினரும் கூட இவ்வாறான செயற்பாடுகளில் குற்றம் சாட்டப்பட்டு இருக்கிறார்கள்.இதெல்லாம் எம்மைச் சிந்திக்க வைக்கின்றன.



ஈழத்தமிழர் சமூகத்தின் தனித்துவம் என்பது மொழி, கலாச்சாரம், சமூக அமைப்பு மற்றும் அரசியல் அடையாளம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாகும். இந்த அடையாளத்தை பாதுகாக்கும் உரிமை மற்றைய சமூகத்திற்கும் அடிப்படை மனித உரிமையாக கருதப்படுகிறது. ஆனால் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கும் சூழலில், சமூக நிகழ்வுகள், அரசியல் கருத்து வெளிப்பாடு அல்லது சமூக இயக்கங்கள் ஆகியவை கண்காணிப்பின் கீழ் வரும்போது, அந்த சமூகத்தின் இயல்பான வெளிப்பாடு சுருங்கும் அபாயம் உள்ளது. இதுவே “தனித்துவம் ஒடுக்கப்படுகின்றதா?” என்ற கேள்வியை எழுப்புகிறது.

அதே நேரத்தில், அரசின் நிலைப்பாடும் கவனிக்கப்பட வேண்டியது அவசியமே. ஒரு நாடு சட்ட ஒழுங்கை பாதுகாக்கவும், போதைப்பொருள் வலையமைப்புகளை கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுப்பது பொறுப்பான செயலாகும். எனவே இந்த நடவடிக்கைகள் முற்றிலும் தேவையற்றவை என்றும் கூற முடியாது. ஆனால் அவை நடைமுறையில் செயல்படுத்தப்படும் விதம், குறிப்பாக சிறுபான்மையினர் பகுதிகளில், சமநீதியும் வெளிப் படைத் தன்மையும் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதே முக்கியமான கோரிக்கையாகும்.

முடிவாக, இலங்கையில் ஊழல் மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் அவசியமானவை என்றாலும், அவற்றின் நடைமுறைச் சமூக சமத்துவம் மற்றும் மனித உரிமைகளை மதிக்கும் வகையில் இருக்க வேண்டும். இல்லையெனில், அந்த நடவடிக்கைகள் அறியாமலேயே ஒரு சமூகத்தின் கலாச்சார மற்றும் அரசியல் தனித்துவத்தை கட்டுப்படுத்தும் கருவியாக மாறும் அபாயம் உள்ளது.அதனால், சட்ட அமுலாக்கமும் சமூக நீதி உணர்வும் ஒன்றோடொன்று சமநிலையுடன் இணைந்திருக்க வேண்டும் என்பதே இந்த விவாதத்தின் முக்கியமான கருத்தாகும்.

• • •

# தமிழர் தாயகம் அபகரிப்பில் இருந்து பாதுகாக்கப்படுமா?

மட்டுநகரான்

தமிழர்கள் தாயகப்பகுதியென்பது தொடர்ச்சியான அச்சுறுத்தல்களுக்கும் அடக்குமுறைகளுக்குள்ளும் அத்துமீறல்களுக்கும் ஆளாகிவரும் பகுதிகளாகவிருந்த காரணத்தினால் இந்த நாட்டில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி அடக்குமுறையாளர்களுக்கு எதிராக போராடிய நிலையில் இன்று அந்த போராட்டங்கள் மௌனிக்கப்பட்டதனால் அந்த போராட்டங்கள் ஊடாக தமது தாயகப்பகுதியை பாதுகாத்த மக்கள் இன்று அதனை தக்க வைப்பதில் போராடவேண்டிய நிலையிருக்கின்றது.

வடகிழக்கில் ஆக்கிரமிப்புகள் முன்னெடுக்கப்படுகின்றதே தவிர யுத்தம் உட்பட பல்வேறு அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தையோ அவர்களின் அடிப்படை தேவைகளையோ செய்துகொடுப்பதற்கு எந்த பேரினவாத சக்திகளும் முன்னெடுப்புகளை முன்னெடுக்காத நிலையே காணப்படுகின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தினை பொறுத்த வரையில் தமிழர்களின் எல்லை பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களை முன்னெடுத்து நிலங்களை அபகரிக்க முனைப்புக்காட்டும் சிங்கள அரசுகள் கிழக்கு மாகாணத்தில் எல்லைப்பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்வதற்கும் வாழ்வாதாரத்தினை வழங்குவதற்கும் பின்னிற்கும் நிலையே அன்றுதொட்டு இருந்துவருகின்றது.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டமாகயிருக்கலாம் திருகோணமலை மாவட்டமாக இருக்கலாம் இங்குள்ள எல்லைப்பகுதிகள் பெரும்பாலும் சிங்கள குடியேற்றங்களினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது மட்டுமல்ல பல தமிழ் கிராமங்கள் முற்றாக வெளியேற்றப்பட்டு சிங்கள கிராமங்கள் ஆக்கப்பட்டு அவர்களுக்கான அனைத்து வகையான வசதிவாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் தமிழர்களுக்கு எந்தவிதமான வசதிவாய்ப்புகளை ஏற்படுத்தாமலும் அவர்களுக்கான அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்துவழங்காமலும் அவர்களாகவே இடம்பெயர்ந்து செல்லும் நிலைமைகளும் தோற்றுவிக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதிகள் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வருகின்ற போதிலும் எல்லைப்பகுதிகளை அபகரிப்பதற்கு அல்லது அங்குள்ள மக்களை அப்புறப்படுத்தி அந்த நிலங்களை அபகரிப்பதற்கான பல்வேறு சூழ்ச்சிகள் காலம்காலமாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.



யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னரும் சரி பின்னரும் சரி எல்லைப்பகுதிகளை அபகரிப்பதற்கான முயற்சிகளை தமிழ் மக்கள் மட்டக்களப்பு மாவட்டத்தினை பொறுத்த வரையில் தொடர்ந்துதடுத்தேவருகின்றனர்.யுத்தகாலத்தில் பாதுகாத்து அதன் பின்னரான காலத்திலும் அதனை பாதுகாத்துவருகின்றபோதிலும் சில அரச அதிகாரிகளின் செயற்பாடுகள் மற்றும் சில திணைக்களங்களின் செயற்பாடுகள் மூலம் எல்லைப்பகுதி தமிழ் மக்களை பொருளாதார ரீதியாக வலுவிழக்கச்செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பெரியபுல்லுமலையில் அப்பகுதி தமிழ் மக்கள் எதிர்நோக் கும் காணி பிரச்சினை தொடர்பில் அகம் மனித வள நிலையமும் கிழக்கு மாகாண காணி வலையமைப்பும் இணைந்து பொதுமக்கள் எதிர்நோக்கும் காணி பிரச்சினை குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் சம்பூர் மற்றும் திரியாய் பிரதேசத்தில் தமிழர்கள் தங்களது காணிகளை பாதுகாப்பதற்காக முன்னெடுத்துவரும் போராட்டம் தொடர்பில் இரண்டு குறுந்திரைப்படங்கள் காண்பிக்கப்பட்ட நிலையில் அந்த காணி பிரச்சினை தொடர்பிலும் அதனை தக்கவைப்பதற்கு அப்பகுதி மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்கள் குறித்தும் இதன்போது ஏற்பாட்டளர்கள் கருத்துரைகளை வழங்கிய பின்னர் பெரியபுல்லுமலையில் எதிர்நோக்கப்படும் காணிப்பிரச்சினை குறித்து ஆராயப்பட்டது.

பெரியபுல்லுமலை பிரதேசம் என்பது மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களின் எல்லைப்பகுதியாக காணப்படுகின்றது.மகோயா என்ற பகுதி காணப்படும் நிலையில் இதன்சில பகுதிகள் அம்பாறை மாவட்டத்துடனும் ஒரு பகுதி மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதியுடனும் காணப்படுகின்றது.ஆனால் இரு பகுதிகளும் பாரிய வேறுபாடுகள் கொண்டதாக காணப்படுதாக பெரியபுல்லுமலை மக்கள் தெரிவிக்கின்றனர்.

யுத்த காலத்தில் தம்மால் பாதுகாக்கப்பட்ட காணியில் தாங்கள் எதனையும் அனுபவிக்கமுடியாமல் தமக்கு திணைக்களங்களினால் தடைகள் ஏற்படுத்தப்படுவதாக இங்குள்ள தமிழ் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். சிங்கள பகுதிகளில் காடுகளை வெட்டி விவசாயம் சேனைப் பயிர்ச்செய்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றபோதிலும் தமது பகுதிகளில் தாங்கள் காலம்காலமாக பயிர்ச்செய்கை முன்னெடுத்த பகுதிகளுக்குள் செல்வதற்கு தங்களுக்கு வனஇலாகா போன்ற திணைக்களங்கள் தடைகளை ஏற்படுத்துவதாக இப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

காலங்காலமாக பரம்பரை பரம்பரையாக தாங்கள் அப்பகுதியில் வாழ்ந்துவரும் நிலையில் யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது பகுதிகளுக்குள் வந்து குடியேறியுள்ள நிலையில் தமது பரம்பரையினர் விளைவித்த பூமியை அடையாளம் கண்டு அவற்றில் தொழில் முயற்சிகளை முன்னெடுக்கும் சந்தர்ப்பங்களில் வனஇலாகாவினால் தடையேற்படுத்தப்படுவதுடன் சில வேளைகளில் தமக்கு எதிராக அம்பாறை பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களில் வழக்கும் தாக்கல் செய்யப்படுவதாகவும் இங்கு மக்களினால் கவலை தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த பெரியபுல்லுமலையினைசேர்ந்த சீ.யோகம்மா என்னும் தாயார், எனது தந்தையார் மற்றும் அவரது உறவினர்கள் இங்குதான் இருந்தார்கள்.எனக்கு எட்டுப்பிள்ளைகள் இருக்கின்றார்கள். எனக்கு ஐந்து பெண் பிள்ளைகளும் மூன்று ஆண்பிள்ளைகளும் இருக்கின்றனர்.நாங்கள் இங்கு இருக்கும் போது பெருமளவான காணிகளுடனும் தென்னந் தோட்டங்களும் வைத்திருந்தோம். 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பகுதியிலிருந்து செல்லுமாறு கோரப்பட்ட நிலையில் நாங்கள் ஏறாவூருக்கு சென்று அங்கு வசித்துவந்தோம்.

அந்தவேளையில் நாங்கள் அடிக்கடி வந்து இப்பகுதிக்கு வந்து காணிகளை பார்த்துச்செல்வோம்.ஒரு தடவை இப்பகுதியில் துப்பாக்கிசூடு நடாத்தப்பட்டதுடன் 35 பஸ்ஸில் கொண்டு செல்லப்பட்டனர்.அந்த காலத்தில் நாங்கள் கூலிவேலைசெய்தே எமது பிள்ளைகளை வளர்த்தோம். எனது சொந்த பந்தம் எல்லாம் ஆமிகொண்டு சென்றுவிட்டான்.2007ஆம் ஆண்டு நாங்கள் இங்கு குடியேறினோம்.ஐந்து ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை இழந்துநிற்கின்றேன்.காணிகளை மீண்டும் எடுப்பதை அதிகாரிகள் தடுப்பதாக தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த பெரியபுல்லுமலையினை சேர்ந்த சதாசிவம் என்பவர், நாங்கள் இந்த பெரியபுல்லுமலையில் 1979ஆம் ஆண்டு குடியேறினோம். 1986ஆம் ஆண்டு யுத்த நிலைமைகள் ஏற்பட்டது.அதன் பின்னர் 1990ஆம் ஆண்டு இப்பகுதியிலிருந்து நாங்கள் வெளியேறினோம்.நாங்கள் வீட்டினை விட்டுச் செல்லும் போது எந்த ஆவணங்களும் எடுக்காமல் வீட்டிலிருந்தவாறே ஓடினோம். இப்பகுதியில் 1985ஆம் ஆண்டு சிறுவர்கள், பெரியவர்கள் உட்பட 55பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

நாங்கள் பல இழப்புகளை எதிர்கொண்டவர்கள். புல்லுமலை பகுதியில் நூறு ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை வனஇலாகாவினர் மக்கள் பயன்படுத்தமுடியாத வாறு தடுத்துவைத்துள்ளனர். அந்த காணிகள் 1990ஆண்டுக்கு முன்னர்நாங்கள்பயிர்ச்செய்கை,விவசாயம்,சேனைபயிர்செய்கை செய்த காணிகள். அதற்கான ஆவணங்கள் எங்களிடம் இல்லை என்பதற்காக அவற்றினை தரமறுக்கினறனர். நாங்கள் மீன்பிடிக்கும் குளத்திற்குள்ளாலும் வனஇலாகா கல்லுப்போகின்றனர்,நாங்கள் வசிக்கும் வீட்டுக்குள்ளாலும் வனஇலாகாவினர் கல்லுப் போடுகின்றனர். நாங்கள் குளங்களுக்குள் கல்லுப்போட்டுள்ளதனால் மீன்பிடிக்க முடியாத நிலை.எங்களுக்கு அருகில் உள்ள சிங்கள கிராம மக்கள் 5 ஏக்கருக்கு மேல் ஒவ்வொருவரும் காணிகளை வைத்துக் கொண்டு விவசாயம் செய்கின்றனர்.அவர்கள் காடுகளை வெட்டி பயிர்ச்செய்கைகள் முன்னெடுக்கின்றனர்.

ஆனால் அவர்களுக்கு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. அவர் பொருளாதாரத்தினை பெருக்குகின்றார்கள்.நல்ல நிலையில் இருக்கின்றார்கள்.ஆனால் அதே அதிகாரிகள் எங்களுக்கு மட்டும் தடையினை ஏற்படுத்துகின்றார்கள்.தமிழர்களுக்கு மட்டுமே இந்த நிலைமை காணப்படுகின்றது.எங்களுக்காக எந்த அதிகாரிகளும் குரல்கொடுப்பதில்லை,எந்த அரசியல்வாதிகளும் குரல்கொடுப்பதில்லை.கேட்பதற்கும் பார்ப்பதற்கும் யாரும் இல்லாத நிலையிலேயே நாங்கள் பின்நோக்கிசென்றுகொண்டிருக்கின்றோம்.

இதன்போது பெரியபுல்லுமலையினை சேர்ந்த நமசிவாயம் என்பவர் கருத்து தெரிவிக்கையில், இந்த பகுதியில் வனஇலாகாவினர் எமது காணிகளை பிடித்து வைத்திருக்கின்றார்கள்.நாங்கள் இருக்கும் காணிகளை எமது பிள்ளைகளுக்கு வழங்கிய பின்னர் நாங்கள் போவதற்கு இடமில்லாமல் இருக்கின்றோம்.எமது காணிகளை எமக்கு வழங்கினால் நாங்கள் வேறு எங்கும் செல்லவேண்டியதில்லை.நாங்கள் கச்சான், சோளன், ஆடு வளர்ப்பு என்று பல்வேறு தொழில்களை செய்தவர் கள். இன்று எங்களுக்கு தொழில்செய்வதற்கு இடமில்லை. இப்பகுதியில் கடமையாற்றிய சில அதிகாரிகள் பெருமளவான காணிகளை அபகரித்து, அதனை விற்று பணத்தினை எடுத்துக்கொண்டுசென்றுவிட்டார்கள்.



இதன்போது கருத்து தெரிவித்த எம்.அருணா என்ற பெண், நாங்கள் பெரியபுல்லுமலை,தும்பாலஞ்சோலையில் ஏழு ஏக்கர் காணியில் கச்சான்,சோளன்,விவசாயம் சென்று நன்றாக தொழில்செய்துவந்தோம்.யுத்த நேரம் அவற்றினை கைவிட்டுச்சென்றுவிட்டோம்.நாங்கள் திரும்பிவந்தபோது வனஇலாகா கல்லு இட்டுள்ளனர்.நாங்கள் எமது காணியை கோரியபோது தகுந்த ஆதாரத்துடன் வருமாறு கூறுகின்றனர். யுத்த நேரத்தில் அனைத்தையும் விட்டுவிட்டே நாங்கள் ஓடினோம்.எமது பிள்ளைகள் கற்ற பின்னர் தொழில் இல்லாமல் இருக்கின்றனர்.விவசாயம் செய்யலாம் என எமது காணியை தருமாறு கடிதங்கள் வழங்கியுள்ள போதிலும் இதுவரையில் எமது காணி வழங்கப்படவில்லை. நாங்கள் அருகில் உள்ள சிங்களவர்களிடம் குத்தகைக்கு காணிகளைப்பெற்று விவசாயம் செய்கின்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். எமது காணியை வனஇலாகாவினர் தரமறுக்கும் நிலையில் சிங்கள மக்கள் தாராளமாக தமது பகுதிகளில் விவசாயம் செய்கின்றனர்.

வனஇலாகாவினர் முன்னெடுக்கும் செயற்பாடுகள் காரணமாக பெரியபுல்லுமலை பிரதேசத மக்கள் பெரும் கஸ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.எல்லைப்பகுதிகளை பாதுகாத்த மக்கள் இன்று தமது வாழ்வாதாரத்தினையே கொண்டுசெல்லமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மறு பகுதியில் உள்ள சிங்கள மக்கள் சகலவிதமான அனுகூலங்களையும் பெற்றுள்ள நிலையிலும் தமது பகுதிகளில் உள்ள காணிகளை பூரணமாக பயன்படுத்துகின்ற நிலையிலும் தமிழர் பகுதிகளில் இவ்வாறான தடைகள் ஏற்படுத்தப்படுவது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு சிங்கள உறுப்பினரை பிரதேசசபை கொண்டிருக்கும் நிலையில் எல்லைப்பகுதிகளில் உள்ள தமிழ் மக்களை அப்புறப்படுத்தி தமது இருப்பினை சிங்கள சமூகம் பலப்படுத்துவதற்கான உத்திகளை அரசாங்கம் பயன்படுத்துவதாக இங்குள்ள மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இப்பகுதியில் உள்ள 100க்கும் அதிகமான குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தினை முன்னெடுக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.இவர்களுக்கான காணிகள் வழங்கப்பட்டு உற்பத்திகளுக்கான வழிகள் ஏற்படுத்தப்படுமானால் இப்பகுதியில் தமிழர்களின் இருப்பு பலமாவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றது.இதனை தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் சிவில்சமூக செயற்பாட்டாளர்களும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

• • •

# இலங்கை ஏன் தொடர்ந்து அவலங்களையே சந்திக்கிறது? இனப்படுகொலையின் சாபமா?




தீபச்செல்வன்

இலங்கைத் தீவு தொடர்ந்து பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது என்று அண்மையில் கிளிநொச்சி நகரத்தில் நின்று நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தோம். 2009இற்குப் பிறகு மாறி மாறி இலங்கை நெருக்கடியைச் சந்திக்கிறது. விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் இலங்கையில் இருந்த நிம்மதி, பாதுகாப்பு, மகிழ்ச்சி இன்றில்லை. இதை ஈழ மக்கள் உணர்வதைக் காட்டிலும் சிங்கள மக்களும் நன்கு உணரத் தொடங்கியுள்ளனர். இந்த நிலையில் ஈழ மண்ணில் நிகழ்ந்த ஒரு உன்னதமான விடுதலைப் போரை சதியாலும் உலககத்தின் தந்திர நோக்கங்களாலும் ஒடுக்கியமையின் விளைவைத்தான் ஶ்ரீலங்கா அறுவடை செய்கிறதா?

## 1983 இனவழிப்பு

உண்மையில் இந்த நெருக்கடி ஒரே காரணத்தால் உருவானதல்ல என்பதும் பல ஆண்டுகளாகச் சேர்ந்து வந்த அரசியல், சமூக, உலகளாவிய மற்றும் உள் தீவின் காரணங்களால் ஏற்பட்ட விளைவுகளாகக் கொள்ளப்படுகின்றன. ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட இனவழிப்பு, ஶ்ரீலங்காவின் ஆட்சிமுறைகளில் ஏற்பட்ட தவறுகள், நீண்டகால திட்டமிடல் இல்லாமை, கடன் சார்ந்த அணுகுமுறை, மற்றும் வெளிநாட்டு பொருளாதார அதிர்வுகளின் தாக்கம் ஆகியவை ஒன்றோடொன்று இணைந்து இந்தச் சூழலை உருவாக்கியுள்ளன.

முதலில், ஶ்ரீலங்கா அரசு வெளிப்படையாக 19983இல் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக தொடங்கிய இனவழிப்புப் போரினால் வடக்கு கிழக்கு மாத்திரமின்றி ஒட்டுமொத்த தீவும் நெருக்கடிகளை எதிர்கொண்டது. அதனை 2009வரை முன்னெடுத்து தமிழ் மக்களை அழிப்பதற்காக ஒட்டுமொத்த தீவையும் சிங்கள அரசு அழித்தது. இந்த காலப்பகுதியில் ஶ்ரீலங்கா அரசின் முக்கிய கவனம் பாதுகாப்பு மற்றும் இராணுவச் செலவுகளுக்கு திருப்பப்பட்டது. இதனால் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, அடிப்படை கட்டமைப்பு போன்ற முக்கிய துறைகளுக்கு வழங்கப்பட வேண்டிய நிதி குறைக்கப்பட்டது. தமிழர் தேசம் என்பதால் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் உற்பத்தி செயற்பாடுகளை ஒடுக்க முற்பட்டது. தொழில் வாய்ப்புகள் குறைந்தன. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டில் முதலீடு செய்ய தயங்கினர். சுற்றுலாத் துறை மிகுந்த பாதிப்பை சந்தித்தது. இப்படியாக இனவழிப்பு யுத்தம் முடிந்தபின்னரும் அதன் பொருளாதார மற்றும் சமூக விளைவுகள் நீண்டகாலம் தொடர்ந்தன.

## ஶ்ரீலங்காவை சீரழித்த கோத்தபாய

ராஜபக்சவின் கொடுங்கோல் ஆட்சி முடிந்த பிறகு 2020 ஆம் ஆண்டு உலகளவில் பரவிய கொரோனா (COVID-19) தொற்று ஶ்ரீலங்காவின் பொருளாதாரத்தை மேலும் சீர்குலைத்தது. உலக நாடுகள் எல்லைகளை மூடியதால், சுற்றுலாத் துறை முற்றிலும் முடங்கியது; இது ஶ்ரீலங்காவுக்கு மிகப்பெரிய வருமான இழப்பை ஏற்படுத்தியது. தொழிற்றுறை மற்றும் சேவைத் துறைகளின் செயற்பாடுகள் குறைந்தன. இறக்குமதி-ஏற்றுமதி சங்கிலிகள் பாதிக்கப்பட்டதால் வணிகச் செயற்பாடுகள் தடுமாறின. இதன் விளைவாக, நாட்டின் வெளிநாட்டு நாணய சேமிப்பு மிகக் குறைந்த நிலைக்கு தள்ளப்பட்டு, பொருளாதார அழுத்தம் மேலும் தீவிரமடைந்தது.



இத்தகைய சூழ்நிலையில், ஈழத் தமிழ் மக்களை அழித்தேன் என வீரம் பேசியபடி ஆட்சிக்கு வந்த முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான ஆட்சி மேற்கொண்ட சில தவறான பொருளாதார முடிவுகள் நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தின. குறிப்பாக திடீரென இரசாயன உரங்களைத் தடை செய்து, முழுமையாக இயற்கை விவசாயத்திற்கு மாற முயன்றது விவசாய உற்பத்தியை கடுமையாக பாதித்தது; உணவுப் பற்றாக்குறையும் உருவானது. மேலும், வரிவிதிப்பில் செய்யப்பட்ட தளர்வுகள் அரசின் வருவாயை குறைத்து நிதிச் சிக்கலை அதிகரித்தன. வெளிநாட்டு கடன்களை திட்டமிடாமல் பெற்றதும், அவற்றைச் சரியாக நிர்வகிக்கத் தவறியதும் நாட்டை கடன் திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்கு தள்ளி, பொருளாதார நெருக்கடியை மேலும் மோசமாக்கியது.

## தலைவரைப் புகழ்ந்த சிங்களப் பெண்கள்

இதன் விளைவாக, 2022 ஆம் ஆண்டு இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது. எரிபொருள் பற்றாக்குறை போக்குவரத்தையும் தொழிற்சாலைகளையும் பாதித்தது. மின்வெட்டுகள் அடிக்கடி நடந்ததால் மக்கள் தினசரி வாழ்க்கையில் கடுமையான சிரமம் ஏற்பட்டது. மருந்து மற்றும் மருத்துவ சாதனங்கள் குறைந்ததால் சுகாதார சேவைகள் பாதிக்கப்பட்டன. உணவுப் பொருட்களின் விலை உயர்வால் சாதாரண மக்கள் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் மக்கள் பரபரப்பான எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டனர். அரசியல் மாற்றங்களும் வந்தன. இது வெறும் பொருளாதார நெருக்கடி அல்ல; அரசியல், சமூக, மற்றும் வாழ்வாதார நெருக்கடியை ஒரே நேரத்தில் காட்டும் சூழ்நிலை ஆகும்.

சிங்கள மக்கள் உணவுக்கு தெருவுக்கு வந்தனர். பால்மாவுக்கு குழந்தைகள் அழுதனர். எரிபொருளுக்கும் சமையல் எரிவாயுவுக்கும் வரிசையில் நின்ற சிங்களப் பெண்கள், தலைவர் பிரபாகரனைப் பற்றிப் புகழ்ந்து பேசினர். தலைவர் பிரபாகரன் நாட்டை ஆண்டிருந்தால் எங்களுக்கு இந்த நிலை வந்திருக்காது என்றனர். வடக்கு கிழக்கில் விடுதலைக்காகப் போராடிய எங்கள் தலைவரை ஒட்டுமொத்த தீவுக்கும் தலைவராக சிங்கள மக்கள் பார்த்த அதிசயமும் நிகழ்ந்தேறியது.

தொடர்ச்சி: பக்கம் 20

# காணி உரிமை முதல் கல்வி வரை: அநுர – மனோ சந்திப்பின் நோக்கம்

மருதன் ராம்



இலங்கை தீவின் மொத்த பொருளாதாரத்திற்கும் மலைநாட்டு பகுதியில் இருந்து பொருளாதார முதுகெலும்பாக இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் திகழும் மலையகப் பெருந்தோட்டச் சமூகம், இன்றும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான விளிம்புநிலை வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றது.

கடந்த 2ம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வுக்கும், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு, இம்மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு ஒரு புதிய அரசியல் தீர்வைப் பெற்றுத்தருமா? என்ற எதிர்பார்ப்பைத் தோற்றுவித்துள்ளது. குறிப்பாக, உலகளாவிய பொருளாதார நெருக்கடிகள் மற்றும் மத்திய கிழக்கு போர்ச் சூழலுக்கு மத்தியில், மலையக மக்களின் இருப்பு மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பு என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பேசுபொருளாக மாறியுள்ளது. இந்த பின்னணியில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஜனாதிபதியுடனான சந்திப்பு அதற்கான அடிப்படையை வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளதாக கூறப்படுகிறது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பு வெறும் சம்பிரதாயபூர்வமான ஒன்று மாத்திரமல்லாமல், மலையக மக்களின் கோரிக்கைகளை அரச இயந்திரத்தின் உயர்மட்டத்திற்கு கொண்டு சென்ற ஒரு நிகழ்வாகவும் பார்க்கப்படுகிறது. குறிப்பாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனின் கோரிக்கையை ஏற்று, ஜனாதிபதி செயலகத்தின் தலைமை அதிகாரி சந்திரகீர்த்தியை மலையக விவகாரங்களுக்கான இணைப்பாளராக ஜனாதிபதி நியமித்துள்ளமை ஒரு முக்கிய மைல்கல்லாகும்.



மலையகம் சார்ந்த விவகாரங்களை நேரடியாக ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்புபடுத்த இது உதவும் என்று நம்பப்படுகிறது. அதேநேரம், அமைச்சுக்களுக்கு இடையிலான இழுபறிகளைக் குறைத்து, கொள்கை முடிவுகளை விரைவாக அமுல்படுத்த இப்பதவி வழிவகுக்கும். இதேவேளை மலையகத்தின் வறுமைச் சுழற்சியை உடைப்பதற்கான ஒரே வழி கல்வியாகும். சந்திப்பில் இது குறித்து விரிவாகப் பேசப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையகப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை மாணவர்களின் எதிர்காலத்தைப் பெரிதும் பாதிக்கின்றது. இந்த நிலையில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் கோரிக்கைக்கு அமைய தகுதியான தமிழ் மொழி மூல ஆசிரியர்களை உடனடியாக ஆட்சேர்ப்பு செய்ய ஜனாதிபதி உடன்பட்டுள்ளார். அத்துடன் மாகாண மற்றும் வலய மட்டங்களில் தமிழ் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களை நியமிப்பதன் மூலம் கல்வி நிர்வாகத்தைச் சீர்மைக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. அது மாத்திரமன்றி கொழும்பில் பாடசாலை விவகாரம் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள முன்னணிப் பாடசாலைகளில் தமிழ் வகுப்புக்கள் மற்றும் அனுமதி குறைப்புச் செய்யப்படுவது குறித்து முறையிடப்பட்டுள்ளது. இது நகர்ப்புறத்தில் வாழும் மலையக மற்றும் தமிழ் மாணவர்களின் கல்வி உரிமையை உறுதிப்படுத்தும் கோரிக்கையாகும். லயன் அறை வாழ்க்கை முறையிலிருந்து மலையக மக்களை



விடுவிப்பதே தற்போதைய பிரதான சவாலாகும். தனி வீட்டுத் திட்டம்: 'தொடர்மாடி' முறையை நிராகரித்து, காணி உரிமையுடன் கூடிய தனிவீட்டுத் திட்டத்தை முன்னெடுப்பது குறித்துப் பேசப்பட்டது.

குறிப்பாக 50 இலட்சம் வீட்டுரிமைத் திட்டம் தொடர்பில் ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் வீடமைப்புத் திட்டங்களை விரைவுபடுத்துவதன் மூலம் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முடியும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை மலையக மக்களுக்கான சகல நலன்புரிசார் செயற்பாடுகளிலும் ஒரு தடையாக திகழும் காணி உரிமை குறித்தும் இந்த சந்திப்பின்போது விசேட அவதானம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

'டிட்வா' போன்ற பேரழிவுகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க, பாதுகாப்பான இடங்களில் காணி உரிமையை வழங்குவது அத்தியாவசியமானது என்று இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது. மலையக மக்கள் தமக்கான சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் உள்ள மொழி மற்றும் தூரப் பிரச்சினைகளைத் தீர்க்க புதிய நிர்வாக அலகுகள் கோரப்பட்டுள்ளன.

தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் மேலதிக பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம சேவகர் வலயங்களை உருவாக்குவது அவசியமாகும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இது அரச நிர்வாக சேவைகளில் மலையக மக்களின் இருப்பை பேணுவதற்கான முக்கிய கோரிக்கையாக கருதப்படுகிறது. அதேநேரம், அரச பொது நிர்வாகத்திலும், பொலிஸ் துறையிலும் மலையகத் தமிழ் இளைஞர்களை உள்வாங்குவது சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என்றும் இது தேசிய ஒருமைப்பாட்டிற்கும் வலுச்சேர்க்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மத்திய கிழக்கு போரில் மலையகத்தின் மீதான தாக்கம்

தற்போதைய மத்திய கிழக்கு போர்ச் சூழல் மற்றும் உலகளாவிய பொருளாதார அசாதாரண நிலைமைகள் இலங்கையை, குறிப்பாகப் பலவீனமான பொருளாதாரத்தைக் கொண்ட மலையக மக்களை நேரடியாகப் பாதிக்கின்றன. மத்திய கிழக்கு பதற்றம் காரணமாக எரிபொருள் விலைகள் உயரும்போது, மலையகத்தின் போக்குவரத்து மற்றும் விநியோகச் சங்கிலி பாதிக்கப்படுகிறது.

இது அத்தியாவசியப் பொருட்களின் விலையை மலையகத்தில் மேலும் அதிகரிக்கச் செய்கிறது. தொழிலாளர்களின் நாளாந்தச் சம்பளம் தற்போதைய பணவீக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் உள்ளது. மத்திய கிழக்கு நெருக்கடியால் இறக்குமதிப் பொருட்களின் விலை உயரும்போது, தோட்டத் தொழிலாளர்கள் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்படும் அபாயம் உள்ளது.

அரசு அறிவித்துள்ள சம்பள உயர்வு முறையான வகையில் தொழிலாளர்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டும். மலையக மக்களின் எதிர்காலத் தைப் பாதுகாக்க சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட வேண்டியது அவசியமாகவும் உள்ளது. தொழிலாளர்களின் சம்பளம் மற்றும் உரிமைகள் வெறும் அரசியல் வாக்குறுதிகளாக அன்றி, சட்டபூர்வமான பாதுகாப்பைப் பெற வேண்டும். பெருந்தோட்டங்களில் உள்ள தரிசு நிலங்களில் சிறுபோகப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதன் மூலம், சர்வதேச சந்தை வீழ்ச்சியடையும் போது மலையக மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யலாம். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது தற்போதைய ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தியினால் இந்த வாக்குறுதி வழங்கப்பட்ட போதிலும் இதுவரையில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதன் மூலம், மலையகப் பிரதிநிதிகள் தமது பிராந்திய அபிவிருத்தியைத் தாமே

தொடர்ச்சி: பக்கம் 19

# தமிழகத் தேர்தல் மோசடிகள்

தமிழ்நாட்டில் மீண்டும் ஒரு தேர்தல் மோசடி, வருகிற ஏப்ரல் 23-ல். அரங்கேற இருக்கிறது. தமிழக மக்களை மிக மிக எளிதாக ஏமாற்றிவிட முடியும் என்பதை எல்லா அரசியல் கட்சிகளும் அறிந்து வைத்திருக்கின்றன. தமிழர்கள் தலையில் மசாலா அரைக்க கடினமான முயற்சி எதுவும் தேவையேயில்லை. கழுதைக்கு முன் கேரட்டை நீட்டுவதைப் போல எதையாவது நீட்டினால், தமிழன் தானாக



முன் வந்து தலையை நீட்டுவான். யார் வேண்டுமென்றாலும் அரைத்துக் கொள்ளலாம்.

அரசியல்வாதிகளின் அடுக்கு மொழிகளில் தடுக்கி விழுந்து தமிழ்நாடு தற்கொலை செய்து கொள்வது. இன்று நேற்றல்ல. 1967-லேயே தொடங்கிவிட்டது. அப்போதைய அரிசித் தட்டுப்பாட்டைப் பயன்படுத்திக் கொண்டு, 'ரூபாய்க்கு ஒரு படி நிச்சயம். மூன்றுபடி லட்சியம்' என்று முழங்கியது தி.மு.க. அந்தப் பிரச்சாரம் தீப்பொறி மாதிரி பரவ, அந்தத் தேர்தலில் அமோக வெற்றி பெற்று, முதல்முறையாக ஆளுங்கட்சியானது தி.மு.க.

2006 தேர்தலில், தி.மு.க. அடுத்த கட்டத்துக்குப் போய்விட்டது. அந்தத் தேர்தலில் தி.மு.க.வை வெற்றி பெறச் செய்தது கருணாநிதியோ, மு.க.ஸ்டாலினோ இல்லை. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிதான், அந்தத் தேர்தலில் தி.மு.க.வை மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமரச் செய்தது.

தி.மு.க. வெற்றி பெற்றால் வீட்டுக்கு வீடு இலவச கலர் டிவி என்கிற கருணாநிதியின் தேர்தல் வாக்குறுதி, இலவசமாகக் கிடைத்தால் பினாயிலைக் கூட குடிக்கத் தயாராயிருக்கிற தமிழ் கூறும் நல்லுலகுக்குப் போதுமானதாயிருந்தது. அந்தத் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்ட மேடையிலேயே. 'இந்தத் தேர்தலின் கதாநாயகன், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிதான்' என்று தி.மு.க. எம்.பி. ஒருவர் வெட்கமேயில்லாமல் பேசியது இப்போதும் நினைவிருக்கிறது எனக்கு!




20 ஆண்டுகளுக்குப் பிறகு, அதே குரல்தான் இப்போதும் கேட்கிறது. 'தி.மு.க.வின் தேர்தல் அறிக்கைதான், இந்தத் தேர்தலின் ஹீரோ என்று முதலமைச்சர் முன்மொழிவதை, அத்தனை அமைச்சர்களும் வழி மொழிகிறார்கள். இந்த அயோக்கியத்தனத்தை அசடு வழிய வேடிக்கை பார்க்கிறது தமிழ்நாடு. தங்களது அர்ப்பணிப்பாலும், தியாகத்தாலும் தலைவர்கள் ஹீரோவாக இருந்த தமிழ்நாட்டில், தேர்தல் கால பரபரப்பு வாக்குறுதிகளே ஹீரோவாகிவிட்ட வரலாறு இது.

இன்னொரு அதிரடி மோசடி, பெப்ரவரி மாதமே அரங்கேறிவிட்டது தமிழ்நாட்டில்! ஏப்ரல் 23 தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாவதற்கு முன்பே, பெப்ரவரி 13-ம் தேதி. அவசர அவசரமாக ஒரு கோடியே முப்பது லட்சம் பெண்களின் வங்கிக் கணக்கில் 5000 ரூபாயை நேரடியாகச் செலுத்தியது தி.மு.க. அரசு. மகளிர் உரிமைத் தொகையை அட்வான்ஸாகக் கொடுத்திருக்கிறார்களாம்..! இப்படியெல்லாம் பேச கூச்சப்படவில்லை தி.மு.க.

தமிழக வாக்காளர்களில், ஆண்களை விட பெண்களின் எண்ணிக்கை அதிகம். 2.89 கோடி பேர். பெண் வாக்காளர்கள். அவர்களைக் குறிவைத்துத்தான். ஐயாயிரத்தை அட்வான்ஸாகக் கொடுத்திருக்கிறது ஸ்டாலின் அரசு.

இந்த மோசடி கூட. தி.மு.க.வின் சுயமான மோசடியில்லை. இரவல் மோசடி. மோசடி செய்வதில் வில்லாதி வில்லனான மோடியின் பாரதீய ஜனதா கட்சி, சென்ற ஆண்டு பீகார் தேர்தலில் கையாண்ட மிகவும் அருவருப்பான உத்திதான் இது. பீகார் தேர்தலில் பாரதீய ஜனதா கூட்டணி நிச்சயமாகத் தோல்வியடையும் என்கிற கணிப்புகள் வெளியான நிலையில், அங்கேயிருந்த மோடியின் கூட்டணி



புகழேந்தி தங்கராஜ்

அரசு, முக்கிய மந்திரி மஹிளா யோஜனா (முதல் மந்திரியின் மகளிருக்கான திட்டம்) என்கிற போர்வையில், பீகார் பெண்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக 10,000 ரூபாய் செலுத்தியது. அரசுப் பணமான அந்த பத்தாயிரத்தின் பலனை. பாரதீய ஜனதா அறுவடை செய்தது.

உலகின் எந்த மூலையிலும், தேர்தலுக்கு முன்பு, இப்படியெல்லாம் அரசாங்கப் பணத்தை வேட்டு விடுவதைப் பார்க்க முடியவில்லை. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று பீற்றிக் கொள்கிற இந்தியாவில்தான். அச்சமேயில்லாமல் நடைபெறுகிறது இந்த வாக்குக் கொள்ளை.

பாரதீய ஜனதாவோ. தி.மு.க.வோ அவர்கள் குடும்பச் சொத்தை விற்று இப்படியெல்லாம் வாரி வழங்குவதில்லை. எல்லாமே மக்களின் வரிப்பணம். பல்வேறு நலப்பணிகளுக்காகவும். உள் கட்டமைப்புகளுக்காகவும் செலவிட வேண்டிய தொகை. அதைத்தான் அள்ளி அள்ளி இறைக்கிறார்கள் இந்தியாவில் இருக்கிற ஆட்சியாளர்கள்.

பிப்ரவரி 13ம் தேதி ஒரு கோடியே முப்பது லட்சம் பெண்களின் கணக்கில் 5000 ரூபாய் செலுத்தப்பட்ட பிறகு, 'எதிர்க்கட்சிகளின் தூக்கமே போச்சு' என்று தி.மு.க. பிரமுகர்கள் ஆளாளுக்குப் புளகாங்கிதத்தோடு பேசியதைக் கேட்க முடிந்தது. எல்லோருமே. கோடி கோடியாகச் சேர்த்து வைத்திருப்பவர்கள். 5 ஆண்டுகள் மந்திரியாகவோ, எம்.எல்.ஏ. ஆகவோ இருக்கிற ஒருவர். குறைந்தபட்சம் 500 கோடியாவது பார்த்திருப்பார். அதில் ஒரே ஒரு சதவிகிதம் போதும், இந்தத் தேர்தலை வெற்றிகரமாகச் சந்தித்து, மீண்டும் பதவியைத் தக்க வைத்துக் கொள்ள!

தேர்தல் கமிஷன் என்கிற பல்லில்லாத பாம்பு. இந்த கூத்தையெல்லாம் வேடிக்கை பார்ப்பதோடு சரி! தேர்தல் 'திருவிழா' என்றுதான் ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. அது நூறு சதவிகிதம் உண்மை. திருவிழா நடக்கிற இடத்தில் பஞ்சு மிட்டாய் விற்கிற வணிகரிலிருந்து ரங்கராட்டினக்காரன் வரை ஒவ்வொருவருக்கும், திருவிழாவுக்கு வருகிற மக்களை எப்படியெல்லாம் கவர்வது. எப்படியெல்லாம் அவர்களிடமிருக்கும் பணத்தை அபகரிப்பது என்பதில் பெரும் போட்டி நிலவும். அதேதான் தேர்தல் திருவிழாவிலும்! அப்பாவி மக்களின் வாழ்க்கையை எப்படியாவது மேம்படுத்துவது என்பதைவிட. அவர்களின் வாக்கை எப்படியாவது அபகரிப்பது என்பதுதான் அரசியல் கட்சிகளின் லட்சியமாய் இருக்கிறது. தலைகீழாக நின்று தண்ணீர் குடித்தாவது வாக்குகளை அபகரித்தால்தான். அடுத்த 5 ஆண்டுகள் மானாவாரியாகக் கொள்ளையடிக்க முடியும் என்கிற உளுத்துப் புழுத்துப்போன அரசியல் கோட்பாட்டில் அவர்கள் உறுதியாய் இருக்கிறார்கள். தமிழீழ விடுதலை தொடர்பாகவோ. தமிழக மறுமலர்ச்சி தொடர்பாகவோ இவர்களுக்கு எந்தப் புரிதலும் இருந்ததில்லை. இனியும் இருக்கப் போவதில்லை.

மாதாந்திர மகளிர் உரிமைத் தொகையை இரண்டு மடங்காக்குவோம் என்று தி.மு.கழகம் சொன்னால். மாதம் 3 கேஸ் சிலிண்டர் இலவசம் என்கிறது அ.தி.மு.கழகம். இலவசமாக ஃபிரிட்ஜ்' கொடுப்போம் என்கிற கோமாளித்தனமான அ.தி.மு.க.வின் அறிவிப்பைக் கண்டிக்கக்கூட முடியாமல். '8000 ரூபாய்க்கு கூப்பன் கொடுப்போம். மக்கள் எதை வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்' என்கிறது தி.மு.க. அந்த 8000 ரூபாய்க்கு டாஸ்மாக்கில் சரக்கு வாங்க முடியுமா என்பதைத்தான் தி.மு.க. வெளிப்படையாக அறிவிக்கவில்லை.

தமிழ்நாட்டுக்கு 5 தலைநகர்கள் என்கிற சீமானின் நாம் தமிழர் கட்சி வாக்குறுதி, நாற்பத்தைந்து



ஆண்டுகளுக்கு முன் திருச்சியைத் தலைநகராக்க முயன்ற எம்.ஜி.ஆர். திட்டத்தின் நகல். சுத்திகரிக்கப்பட்ட இலவசக் குடிநீர் என்கிற வாக்குறுதி, டெல்லி அரவிந்த் கேஜ்ரிவால் அறிவிப்பின் நகல். மதுக்கடைகள் ஓராண்டுக்குள் மூடப்படும் - என்பது நாம் தமிழரின் இன்னொரு அறிவிப்பு. கூடவே. மதுபானத்தைப் பயன்படுத்துவோர் நாம் தமிழர் கட்சியிலிருந்து ஓராண்டுக்குள் நீக்கப்படுவார்கள் என்றும் அறிவித்திருக்கலாம். ஆட்சியைப் பிடிக்க வாய்ப்பில்லாத ஒரு இயக்கத்தின் நேர்மையான அறிவிப்பாக அது இருந்திருக்கக்கூடும்.

மகளிரைச் சிறுமைப்படுத்தும் போக்குக்கு முற்றுப்புள்ளி வைப்பது தொடர்பாகவும் நாம் தமிழர் பேசுகிறது. விஜயலட்சுமி பிரச்சினை தொடர்பில் விருகம்பாக்கம் காவல் நிலையத்துக்கு வந்திருந்தபோது, 'இத்தனை பேர் இருக்கிறப்போ. அந்த மூஞ்சிதான் உனக்குக் கிடைச்சுதா' என்று தனது மனைவி கேட்டதாக சீமான் நக்கலடித்தது இப்போது நினைவுக்கு வருகிறது. அது. காவல் நிலையத்திலேயே நடத்தப்பட்ட மகளிர் இழிவுப் பிரச்சாரம். ஆக. முற்றுப்புள்ளி வைப்பதை சீமான் தன்னிலிருந்து தொடங்கியாக வேண்டும். தலைவன் என்பவன் மற்றவர்களுக்கு முன்மாதிரியாய் இருப்பதுதானே முறை!

இந்தத் தேர்தலில் வியக்க வைக்கிற ஒரே என்ட்ரி. விஜயின் என்ட்ரிதான்! மேடைகளில் விஜயின் Body Language மிக மிக மிகை. அதே சமயம், விஜய்க்கு மட்டும்தான் இப்படியொரு கூட்டம் கூடுகிறது என்பதை ஸ்டாலினோ, எடப்பாடியோ கூட மறுக்க முடியவில்லை. அப்படியொரு கூட்டம்.

அதைவிட வியப்பு மத்திய மாநில ஆளுங்கட்சிகளின் நெருக்கடியைப் பற்றிக் கவலைப்படாமல் தனி வழியை விஜய் தேர்ந்தெடுத்தது. கரூர் சம்பவம் தொடர்பான பல்வேறு ஐயங்கள் அப்படியே நீடிக்கின்றன. அதையும் மீறித்தான் தன்னுடைய தமிழக வெற்றிக் கழகத்தைத் தேர்தல் களத்தில் இறக்கியிருக்கிறார் விஜய்.

விஜய் விஷயத்தில் ஜனநாயகன் தடையிலிருந்து கரூர் சம்பவம் வரை நாம் கண்டிப்பாகப் பேசியாக வேண்டும்.

அடுத்த இதழில்...

# தமிழகத் தேர்தல் 2026:

## ஈழத்தமிழர் சார்ந்த திமுக – அதிமுகவின் வாக்குறுதிகள்

ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைகள் மற்றும் தமிழ்நாட்டில்உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் எதிர்காலம் என்பதுதமிழக அரசியலில் வெறும் உணர்வுப்பூர்வமான விடயம் மட்டுமல்ல, அது தேர்தல் வெற்றிகளைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய காரணியாகவும் உருவெடுத்துள்ளது. 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, திராவிட முன்னேற்றக்கழகம் (திமுக) மற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அதிமுக) ஆகிய இரு பெரும் கட்சிகளும் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் ஈழத்தமிழர் விவகாரத்தை கையாண்டுள்ளன.

தற்போதைய நிலவரப்படி, தமிழ்நாட்டில் உள்ள 104 அரசு மறுவாழ்வு முகாம்கள் மற்றும் வெளி இடங்களில் சுமார் 89,000 ஈழத் தமிழர்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதா அல்லது இரட்டைக் குடியுரிமை கோருவதா என்பதில் இரு கட்சிகளுக்கும் இடையே நிலவும் கொள்கை ரீதியான வேறுபாடுகள் தமிழகத்தின் அரசியல் களத்தில் பெரும் விவாதங்களை உருவாக்கியுள்ளன.

1983-ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனப் படுகொலையைத் தொடர்ந்து அகதிகளின் வருகை தொடங்கியது. 2026-ஆம்ஆண்டின் புள்ளி விவரங்களின்படி, தமிழகத்தில் உள்ளஅகதிகளில் சுமார் 40 சதவீதத்தினர் (சுமார் 35,000 பேர்) இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்தவர்கள் என்பதுகுறிப்பிடத்தக்கது. பல தசாப்தங்களாக இந்தியாவில் வசித்தபோதிலும், இதுவரை வெறும் 11 இலங்கை அகதிகளுக்குமட்டுமே இந்தியக் குடியுரிமை வழங்கப் பட்டுள்ளது.






மறுபுறம், 2009-ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிவடைந்தபிறகு 2025 ஜூன் மாதம் வரை, சுமார் 18,542 இலங்கைத்தமிழர்கள் தன்னார்வத்துடன் மீண்டும் தாயகம் திரும்பியுள்ளனர். இந்தச் சூழலில், எஞ்சியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்வது தமிழகக் கட்சிகளின் முக்கியக் கடமையாக மாறியுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திமுக, ஈழத்தமிழர் விவகாரத்தில் சட்ட ரீதியான ஒருங்கிணைப்பு மற்றும் நிரந்தரக் குடியிருப்புத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது.

திமுக அரசு முகாம்களில் உள்ள சிதிலமடைந்த வீடுகளுக்குப்ப திலாக மொத்தம் 7,469 நிரந்தர வீடுகளைக் கட்டும் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது.

* **முதற்கட்டத் திட்டம்: 3,510 வீடுகள் ₹175.74 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.**
* **இரண்டாம் கட்டத் திட்டம்: 3,959 வீடுகள் ₹228.64 கோடிமதிப்பீட்டில் கட்டுமானத்தில் உள்ளன.**
* **அடிப்படை வசதிகள்: குடிநீர், மின்சாரம் மற்றும் வடிகால் வசதிகளுக்காக ₹30 கோடி நிதி (ஆண்டுக்கு ₹5 கோடி வீதம்) ஒதுக்கப்பட்டுள்ளது.**
* **சுயஉதவிக் குழுக்கள்: முகாம்களில் உள்ள 800-க்கும் மேற்பட்டமகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுமார் ₹11 கோடி வரை நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது.**

### கல்வி மற்றும் மாதாந்த நிதியுதவி

அகதி முகாம்களில் உள்ள குடும்பங்களின் மாதாந்த உதவித்தொகையை திமுக அரசு பின்வருமாறு உயர்த்தி வழங்குகிறது:

* **குடும்பத் தலைவர்: ₹1,500 (முன்பு ₹1,000 ஆக இருந்தது).**
* **மற்ற பெரியவர்கள்: ₹1,000 மற்றும் குழந்தைகள்: ₹500.**

கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ், பட்டயப் படிப்பு(Polytechnic) மாணவர்களுக்கான உதவித்தொகை ₹2,500-லிருந்து ₹10,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கலை மற்றும்அறிவியல் பட்டப்படிப்பிற்கு ₹12,000 மற்றும் தொழிற்படிப்புகளுக்கு ₹20,000 வழங்கப்படுகிறது.

**திலீபன்**

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிச்சாமி வெளியிட்ட 2026 விஞ்ஞாபனம், அகதிகளின் கலாச்சார அடையாளத்தைப் பாதுகாக்கும் வகையில் “இரட்டைக் குடியுரிமை” கோரிக்கையைத் தீவிரமாக முன்வைக்கிறது.

### அதிமுகவின் முக்கிய புள்ளிவிவர அடிப்படையிலான வாக்குறுதிகள்

* **மகளிர் உரிமைத் தொகை: குடும்பத் தலைவிகளுக்கு வழங்கப்படும் மாதாந்த ஊக்கத்தொகையை ₹2,000-ஆகஉயர்த்த அதிமுக வாக்குறுதி அளித்துள்ளது.**
* **மருத்துவ இடஒதுக்கீடு: அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5% இடஒதுக்கீட்டை 10.5%-ஆக உயர்த்தி, முகாம் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் அதனை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது.**
* **குடும்ப நிதியுதவி: விலைவாசி உயர்வைக் கட்டுப் படுத்தவும் குடும்பச் சுமையைக் குறைக்கவும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ₹10,000 சிறப்பு உதவித்தொகை வழங்கப்படும்.**
* **இலவசத் திட்டங்கள்: குடும்ப அட்டை வைத்திருக்கும் பெண்களுக்கு இலவச குளிர்சாதனப் பெட்டி மற்றும் ஆண்டுக்கு 3 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும்.**

### திமுக மற்றும் அதிமுக: கொள்கை ரீதியான அணுகுமுறை ஒப்பீடு

2026 தேர்தலுக்கான இரு முக்கியக் கட்சிகளின் அணுகுமுறைகளை ஒப்பிடும்போது, நடைமுறைச் செயற்பாடுகளிலும் சட்ட ரீதியான கோரிக்கைகளிலும் சில வேறுபாடுகள் உள்ளன:

#### 1. குடியுரிமை மற்றும் சட்ட நிலைப்பாடு

திமுக, ஜனவரி 9, 2015-க்கு முன்னதாக இந்தியா வந்த ஈழத் தமிழர்களை “சட்டவிரோதக் குடியேறிகள்” என வகைப்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்பதில் உறுதியாகஉள்ளது. இந்தியக் குடியுரிமை பெற்றுத் தருவதையே தனதுமுதன்மை இலக்காகக் கொண்டு, அதற்கான சட்டப் போராட்டங்களை முன்னெடுக்கிறது. மாறாக, அதிமுக”இரட்டைக் குடியுரிமை” (Dual Citizenship) கோருகிறது. இந்தியக் குடியுரிமை மட்டும் வழங்கப்பட்டால், அவர்கள்இலங்கையில் உள்ள தங்களின் பூர்வீகச் சொத்துக்கள் மற்றும் அரசியல் உரிமைகளை இழக்க நேரிடும் என்பதால், இரு நாட்டுஉரிமைகளும் தேவை என அதிமுக வலியுறுத்துகிறது.



#### 2. உள்கட்டமைப்பு மற்றும் வீட்டு வசதி

திமுக அரசு ₹400 கோடிக்கும் அதிகமான மதிப்பீட்டில் 7,469 நிரந்தர கான்கிரீட் வீடுகளைக் கட்டி, அகதி முகாம்களை ஒருங்கிணைந்த “மறுவாழ்வு மையங்களாக” மாற்றி வருகிறது.அதிமுக தனது விஞ்ஞாபனத்தில் “அம்மா இல்லம்” திட்டத்தின்கீழ் வீடு இல்லாதவர்களுக்கு நிலம் மற்றும் கான்கிரீட் வீடுகளை வழங்குவதோடு, முகாம் பகுதிகளில் சிறு மற்றும் குறுவிவசாயம் சார்ந்த தொழில்களை மேம்படுத்தவும் வாக்குறுதிஅளித்துள்ளது.

#### 3. கல்வி மற்றும் சமூக மேம்பாடு

கல்வித் துறையில், திமுக பாலிடெக்னிக் மாணவர்களுக்கு ₹10,000 வரை உதவித்தொகையை உயர்த்தி வழங்குகிறது. அதிமுக, மருத்துவச் சேர்க்கையில் வழங்கப்படும் உள் இடஒதுக்கீட்டை 10.5%-ஆக உயர்த்தி, முகாம் மாணவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதாகக் கூறியுள்ளது. மேலும், கல்விக்கடன் தள்ளுபடி மற்றும் மாதாந்த ஓய்வூதியத்தை ₹2,000-ஆக உயர்த்துவது போன்ற திட்டங்களை அதிமுக முன்வைக்கிறது.

#### 4. பெண்களுக்கான அதிகாரமளித்தல்

திமுக 14,700-க்கும் மேற்பட்ட பெண் குடும்பத் தலைவிகளுக்கு நேரடி நிதியுதவி அளிப்பதோடு, 800-க்கும் மேற்பட்ட சுயஉதவிக் குழுக்களுக்கு ₹11 கோடி நிதியுதவிஅளித்துள்ளது. அதிமுக, குடும்பத்

தொடர்ச்சி: பக்கம் 20

# தமிழக சட்டமன்றத் தேர்தல்: சட்டத்தின் உள் நடக்கும் அரசியல் சூழ்ச்சிகள் – ஓர் பார்வை




தமிழ்நாடு 2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்நோக்கி உள்ளது ! தமிழக முன்னாள் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு எழுந்த அரசியல் சூழலை திராவிட முன்னேற்றக்கழகம் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள காய்களை நகர்த்தி அதில் வெற்றியும் பெற்றது!

முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மறைவுக்குப் பின் தமிழகத்தின் தேர்தல் அரசியலை தற்போது வரை பாஜகவே ( பாரதீய ஜனதா கட்சி) தீர்மானிக்கிறது. ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அந்த இடத்திற்கு சசிகலா வர முயற்சி செய்யத நாள் முதல் இன்று வரை பாஜகவின் எதேச்சதிகார போக்கு தொடர்ந்து வருவது யாவருக்கும் தெரிந்த உண்மை. பாஜகவின் இந்துத்துவ அரசியல் வெறும் மதவாத அரசியல் மட்டுமே அல்ல தீவிர வலதுசாரி கலாச்சார தேசியவாதத்தை அடித்தளமாக கொண்டது. காங்கிரஸின் கலாச்சார தேசியவாதம் மென்போக்கு எனில் பாஜகவின் தேசியவாதம் வன் போக்கானது பார்ப்பன அதிகார அமைப்பாக உருவெடுத்தது தான் இந்தியா எனும் நாடு.

அதன் வரலாற்று வழித் தடங்களில் பல தேசிய இனங்கள் இறைமை உரிமை இன்றி அழிக்கப்பட்டன. தமிழகம் திராவிட நாடு கோரிக்கை , தனித்தமிழ்நாடு கோரிக்கை என பல போராட்டங்களை இந்தியாவுக்கு எதிராக நடத்திய போதிலும் அவை அழிக்கப்பட்டன மற்றும் வலிந்து சமரசம் செய்து கொள்ள நிர்பந்திக்கப்பட்டன.

தமிழகத்தை இன்று வரை திராவிட கட்சிகளே ஆண்டு வருகிறது. காரணம் வெளிப்படையானது தமிழக மக்களுக்கு இறைமை அதிகாரத்திற்கான ஏக்கத்தின் வெளிப்பாடு இந்த உண்மையை டெல்லியின் அதிகார வர்க்கம் பல முறை சுட்டி க் காட்டி அதற்கு ஏற்ப தமிழகத்தின் அரசியல் திசை வழி தீர்மானிக்கப்படுகிறது.

இலங்கை போன்று ஒடுக்கும் தேசிய இனம் இந்தியாவில் இல்லை. ஒவ்வொரு ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சாதிய படி நிலை மற்றும் வர்க்கப் படிநிலையில் உள்ள உயர் குடிகள் இந்தியா எனும் பரந்த நிலப்பரப்பினால் தமக்கு கிடைக்கும் ஆதாயங்களால் இந்தியா எனும் நாட்டிற்கு கலாச்சார சாயம் பூசி புதிய தேசியவாதத்தை கட்டமைப்பு செய்தனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தயவில் இவை உருவாக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள இவ்வாறான கலாச்சாரம் தேவைப்பட்டது.

தமிழ்நாட்டின் இறைமை உரிமை பற்றிய விவாதம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவை விட்டு வெளியேறும் காலகட்டத்தில் உச்சம் பெற்றது. பிறகு ஏற்பட்ட சமரச உடன்படிக்கையின் படி தமிழ்நாட்டை சேர்ந்த கந்தசாமி செட்டியாருக்கு பதிதாக அமையப் போகும் இந்தியாவின் முதல் நிதி அமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டது. தமிழகம் மற்றும் டெல்லி என்று இருமுனை அரசியல் செயல்படும் விதத்தை புரிந்து கொள்ள இந்த வரலாறு தெரிவது அவசியம்.

டெல்லியின் ஆட்சி அதிகாரம் பார்ப்பன பணியா குழுக்களின் கைகளில் இப்படி தான் வந்தது. இந்த குழுக்களுக்கு தேசிய விடுதலை என்றால் விசம் போல ஒவ்வாமை உடன் அடித்து நொறுக்கி விடும்.

திமுகவின் வரலாறு திராவிட விடுதலையோடு தொடங்கி சமரசத்திற்கு வந்தடைந்தது தற்செயலாக நடந்தது அல்ல. இந்திய கட்டமைப்பின் உள்ளியல்பிலான வந்து விட்டது. இப்போது வரை தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் நீடித்து வரும் துயரம் அது. பெரும்பாலான மக்களை அடக்கி ஒடுக்கி ஆள்வதை விட சிறந்தது தங்களின் நலனுக்கான அரசியல் தலைவர்கள் மற்றும் அமைப்புகளை உருவாக்கி விடுவது.

**ஆதி**
சட்டவாளர் -தமிழ் நாடு

வெவ்வேறான ஒத்துப் போக முடியாத இரண்டு தேசியவாத அரசியலுக்கு ஒட்டுப் போடும் வேலையை சிறப்பாக தொடங்கி வளர்ச்சி அடைய வைத்தது தான் திமுகவின் அரசியல் சாதனை. அண்ணா வின் சதுரங்க ஆட்டத்தில் தமிழகத்தின் இறைமை உரிமை டெல்லிக்கு காவு கொடுக்கப்பட்டது தான் திராவிட கட்சிகளின் அரசியல் வரலாறு. கருணாநிதியின் துரோகத்தால் வெளியே வந்த ராமசந்திரன் ஆரம்பித்த அதிமுக திமுகவை விஞ்சி டெல்லிக்கு காவடி தூக்கியது இதை எவரும் மறுக்க இயலாது. புள்ளி வைத்தது திமுக அதில் கோலம் போட்டது அதிமுக.



திமுகவின் பாஜக எதிர்ப்பு என்பது மிகச்சிறந்த அரசியல் புலானாய்வு வெற்றி. அதில் சந்தேகமில்லை. இதன் மூளை யார்? என்று தான் இன்று வரை தெரியாத மர்மம்.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு பாஜக செய்த அட்டூழியம் கொஞ்சம் நஞ்சம் அல்ல. சசிகலா, தினகரன் போன்ற அதிமுக தலைவர்கள் சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். தமிழக சட்டபேரவைக்குள் மத்திய ரிசர்வ் படை நுழைந்து தமிழக அரசின் கோப்புகள் களவாடப்பட்டது. 8 கோடி தமிழக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழக சட்டபேரவையை பாஜகவின்ஏஜன்சிகள சட்டவிரோதமாக தன் வசம் படுத்தியது. பாஜகவின் பினாமி எடப்பாடி பழனிச்சாமி அரசு என்று வெளிப்படையாகவே பல அரசியல் செயல்பாட்டாளர்கள் விமர்சனம் செய்தனர்.இவ்வளவு நடந்த போதும் திமுக மௌனம் காத்து நின்றது. பதவியும் அதிகாரத்தின் மீதான ஏக்கமும் படுத்தும் பாட்டில் தமிழக மக்கள் டெல்லிக்கு எதிராக போராடினர். தமிழகத்தின் துயரம் நல்ல அரசியல் இயக்கமோ தலைவர்களோ இல்லை. டெல்லி அனுமதிக்கவும் செய்யாது.

தமிழ்தேசிய விடுதலை உணர்வை மழுங்கடிக்க திமுக தொடங்கி தற்போது விஜய் வரை பலர் களமிறக் கப்பட்டு உள்ளனர். தேர்தல் அரசியலில் எதையும் சாதிக்க முடியாது என்பதை ஒப்புக் கொண்ட பலர் தேர்தல் அரசியல் விளையாட்டுக்குள் இழுக்கப்பட்டு காயடிக்கப்பட்டனர். திமுக இதை திறம் பட செய்கிறது.

சமீப கால திமுக கருணாநிதி தலைமையிலான திமுகவை விட ஆபத்தான வடிவம் கொண்டதாக மாறி உள்ளது. ஸ்டாலினின் குடும்பச் சொத்தாக மாறி நிற்கிறது. தேர்தல் அரசியலில் கட்சிகளில் நிலவும் குறைந்த பட்ச சனநாயகம் கூட அங்கு இல்லை. ஸ்டாலினின் குடும்பச் சொந்தகளே திமுகவை நிர்வகித்து வருகிறார்கள்.

கூட்டணி பேச்சு வார்த்தையில் விசிக தலைவர் திருமாவளவன் மிகவும் கொடூரமான முறையில் அவமானப் படுத்தப்பட்டார். விசிக வின் வேட்பாளர்களை திமுகவின் தலைமை தீர்மானிக்கிறது. இதை விட வேறு அவமானம் ஏதும் இல்லை. மதிமுகவோ திமுகவின் கிளை அமைப்பு போல மாற்றப் பட்டு உள்ளது. தாவாக தலைவர் திமுகவின் மேலாதிக்கத்தை எதிர்த்து வெளியேறி விட்டார்.நடிகர் விஜயை திமுக படுத்தும்பாட்டை உலகம் அறியும். தற்குறிகள் என்று அவமானப் படுத்தப்பட்டனர். கடந்த 50 ஆண்டுகளாக தமிழகம் திராவிட கட்சிகளால் தான் ஆளப்பட்டது என்பதை வசதியாக மறந்து விட்டார்கள்.

தேமுதிக தலைவர் பிரேமலதா விஜயகாந்த் அவர்களுக்கு கிடைத்த மரியாதை கூட திமுகவின் கூட்டணி கட்சிகளுக்கு இல்லை. காரணம் தேமுதிக போன்ற கொள்கை அற்ற அரசியல் தெளிவற்ற கும்பலால் நிலவும் அரச கட்டமைப்புக்கு எந்த சேதமும் வரப்போவது இல்லை.

திமுக தனது கூட்டணி கட்சிகளுக்கு கொடுக்கும் அவமரியாதை தேர்தல் அரசியலுக்கு வெளியே நின்று முற்போக்கு பேசும் அரசியல் இயக்கங்களுக்கு ஏற்பட போகும் அபாயத்தை முன் எச்சரிக்கை செய்கிறது.

பாஜகவின் அரசியல் வேலைத்திட்டத்தை தமிழகத்தில் அரங்கேற்றம் செய்வதற்கு பாஜக எதிர்த்துக் கொண்டே செய்வதற்கு திமுகவுக்கு மட்டுமே தான் துணிச்சல் உண்டு. தமிழகத்தின் அரசியலை வடிவமைப்பு செய்வதில் திமுகவுக்கு நிகர் திமுக தான். திமுகவின் குரலில் தான் அனைத்து கட்சிகளும் அரசியல் பேசும். புதிதாக பிறந்த நாம் தமிழர் கட்சியை எடுத்துக் கொண்டால் திமுகவின் குரலில் தான் பேசும் ஆனால் அரசியல் சொல்லாடலை மாற்றி விட்டு பேசும்.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு கிடைக்க வேண்டிய உலகத் தமிழினத் தலைவர் என்ற பட்டத்தை பிரபாகரன் பெற்று விட்டார் என்ற வயித்தெரிச்சல் திமுகவின் தலைமைக்கு உண்டு. ஈழ விடுதலையை இந்திய அரசின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கொள்கைக்கு ஏற்ப திமுக அனுக வில்லை தமது சொந்த நலனிலிருந்துஅணுகுகிறது. இந்த போக்கு தமிழ்நாட்டிற்கு ஆபத்தானது.

தேர்தல் வரும் போகும் அதைப்பற்றியெல்லாம் ஆளப்படும் தரப்பு பெரிதாக எடுத்துக் கோள்ள தேவை இல்லை. வழமை போல் ஆளப்படும் தரப்பு தனது நலனுக்காக போராடுவதும் விழிப்பு நிலையில் இருப்பது மட்டும் தான் தேவையானது.

• • •


பாராளுமன்றக் கண்காட்சி
உண்மைகள் உறங்காது
தமிழ் இனப்படுகொலை 1948 – 2026
13 வைகாசி 2026 ; காலை 11:00 தொடக்கம் மாலை 4:00
Australian Parliment House, Canbera ACT 2600
Dining Room - 1
கண்காட்சி பற்றி
1948 முதல் இன்று வரை இலங்கை அரசால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இனப்படுகொலையின் உண்மைகளை இந்தக் கண்காட்சி பதிவு செய்கிறது.
வரலாற்று காலவரிசைகள், ஆதாரங்கள் மற்றும் மக்களின் வாழ்வனுபவங்களின் மூலம், பல தசாப்தங்களாக தொடர்ந்து நடைபெற்று வரும் அமைப்புசார்ந்த வன்முறை, கட்டாய இடம்பெயர்வு மற்றும் அநீதிகளை இது வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது.
நிகழ்ச்சி நிரல்
• நாள் முழுவதும் கண்காட்சி திறந்திருக்கும்
• இடைவேளைகளில் பேச்சாளர்களின் உரையாடல்கள்
கலந்து கொள்வதன் அவசியம்
• தமிழ் இனப்படுகொலையின் வரலாற்றை அறிந்து கொள்ள
• சமூகத்தின் குரல்களை கேட்க
• மனித உரிமை ஆதரவாளர்கள் மற்றும் கொள்கை வடிவமைப்பாளர்களுடன் கலந்துரையாட
• நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்காக ஒன்றிணைய
Tamil Refugee Council
KALYANI INPAKUMAR
TRC NSW COORDINATOR
0425 306 933




# உலகம் ஏற்கனவே மூன்றாம் உலகப் போரில் உள்ளதா?

தீபன்

பரவலாக இணைந்துள்ள மோதல்கள், சவாலுக்குள்ளாகும் அங்கீகாரம் (legitimacy), மற்றும் மாறிவரும் அதிகார சமநிலைகள் — பூகோள அரசியல் அமைப்பில் (system) அதிகரிக்கும் அழுத்தம் காரணமாக உலகம் ஏற்கனவே ஒரு உலகப்போரின் நிலையிலிருக்கக்கூடும். பல பிராந்தியங்களில் நடைபெறும் மோதல்கள் இனி தனித்தனியான நிகழ்வுகள் அல்ல; அவை ஒன்றுடன் ஒன்று இணைந்து, அமெரிக்க சாம்ராச்சியம் (American empire) வழிநடத்தும் பூகோள அரசியல் அமைப்பில் (system) தொடர்ச்சியான அழுத்தம் (sustained pressure) ஏற்படுத்துகின்றன. போர்கள் முடிவின்றி நீள்கின்றன; புதிய மோதல் தளங்கள் உருவாகின்றன; ஒரு பிராந்தியத்தில் எழும் பதற்றம் மற்றொன்றின் நிலையை பாதிக்கிறது. இதே நேரத்தில், உலக ஒழுங்கை ஒருங்கிணைக்கும் திறன் (organise the global order) குறைந்து, அதன் அங்கீகாரம் (legitimacy) கேள்விக்குறியாகி உள்ளது.

இவை புதிதல்ல. உலகப்போர் காலங்களில் காணப்பட்ட அதே அறிகுறிகள் இன்றும் தென்படுகின்றன: மோதல்களின் பரவல், நீடித்த போர்கள், பல அதிகார மையங்களின் ஈடுபாடு, மற்றும் உள்ளூர் பிரச்சினைகள் ஒட்டுமொத்த விளைவு (cumulative effect) மூலம் அமைப்பு முழுவதையும் பாதிக்கும் நிலைக்கு மாறுதல். அப்போது கூட, அவை ஆரம்பத்தில் உலகப்போராகப் புரியப்படவில்லை. பின்னர் அவற்றின் பின்னூட்டச் சுற்றுகள் (feedback loops) தெளிவானபோது தான் அவை உலகப் போராக அறியப்பட்டன. இதே நிலை பிரிட்டிஷ் சாம்ராச்சியக் காலத்திலும் உலகப்போர் I மற்றும் உலகப்போர் II இல் ஏற்பட்டது.



இன்றைய சூழல் ஒரு முனைப்புக் கோட்டால் வரையறுக்கப்படுவதில்லை; மாறாக, முழு அமைப்பும் அழுத்தத்தில் இருக்கும் அமைப்பு (system under strain) என்ற நிலையில் உள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உருவான உலக ஒழுங்கு அமெரிக்க சாம்ராச்சியம் (American empire) மீது அமைந்தது. இது நிலப்பரப்பு கட்டுப்பாட்டை விட அதிகார வலையமைப்பு (network of power), இராணுவ வலிமை, கூட்டணிகள் (NATO), மற்றும் டொலர் ஆதிக்கம் (dollar dominance) ஆகியவற்றின் மீது சார்ந்துள்ளது.

இப்போது இந்த அமைப்பின் அடித்தளங்கள் அனைத்தும் அழுத்தத்தை எதிர்கொள்கின்றன.

முதலில், இராணுவ வலிமையின் வரம்புகள் வெளிப்படுகின்றன. அமெரிக்கா மற்றும் மேற்கத்திய ஆதரவு இருந்தபோதிலும், உக்ரைன் போர் இன்னும் தீர்க்கமான முடிவு (decisive outcome) எட்டவில்லை. ரஷ்யா உறுதியாக நிலைநிறுத்தப்பட்ட (entrenched) நிலையில் தொடர்கிறது. அதேபோல், கடுமையான அழுத்தத்திலும் ஈரான் தொடர்ந்து பதிலடி கொடுத்து (retaliate) வருகிறது.. இதன் மூலம், இராணுவ வலிமை இருந்தாலும் அது தீர்க்கமான முடிவுகளை எப்போதும் உருவாக்காது என்பது தெளிவாகிறது.



அதே மாற்றம் பொருளாதார துறையிலும் தென்படுகிறது. டொலர் ஆதிக்கம் இன்னும் முக்கியமானதாக இருந்தாலும், அதன் ஒரே ஆதிக்க நிலை குறைந்து வருகிறது. ஒருகாலத்தில் உலக நாணய கையிருப்புகளில் சுமார் 70% இருந்த டொலர் இன்று 60% க்கும் கீழ் வந்துள்ளது. இதைவிட முக்கியமானது பல்வகைப்படுத்தல் (diversification) மைய வங்கிகள், தங்கம் மற்றும் பல நாணயங்களில் முதலீடு செய்கின்றன; சில சர்வதேச வர்த்தகங்கள் டொலரைத் தவிர்த்து நடைபெறுகின்றன. இது டொலர் முடிவடைந்துவிட்டது என்பதல்ல; அதன் ஒரே ஆதிக்கம் குறைகிறது என்பதே பொருள்.

அடுத்ததாக, கூட்டணிகளின் தன்மையும் மாறுகிறது. நாடுகள் இனி முழுமையாக ஒரே பக்கம் நிற்காமல், தேர்ந்தெடுத்த ஒத்துழைப்பு (selective alignment) அடிப்படையில் செயல்படுகின்றன. இந்தியா தனது மூலோபாய சுயாட்சி நிலையைத்தக்கவைத்துக்கொள்கிறது; பிரேசில் உலக தெற்கு நாடுகள் (global south) பார்வையை முன்வைக்கிறது. உலகம் பல்துருவ (multipolar) அமைப்பாக மாறுகிறது.

மிகப் பெரிய சவால் அங்கீகாரம் (legitimacy) தொடர்பானது. விதிமுறைகளால் நிர்வகிக்கப்படும் உலக ஒழுங்கு (rules-based order) என்ற கருத்து பல இடங்களில் கேள்விக்குள்ளாகிறது. குறிப்பாக இஸ்ரேல் தொடர்பான நிகழ்வுகள், இந்த சவாலை வெளிப்படுத்துகின்றன. விதிகள் சமமாகப் பயன்படுத்தப்படவில்லை என்ற உணர்வு பல பகுதிகளில் அதிகரித்துள்ளது. இது அமைப்பின் மீதான நம்பிக்கையை பாதிக்கிறது.

இந்த அழுத்தங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. இராணுவ வரம்புகள் நம்பிக்கையை பாதிக்கின்றன; நம்பிக்கை குறைதல் கூட்டணிகளை தளர்த்துகிறது; அதனால் பொருளாதார சிதறல் (fragmentation) அதிகரிக்கிறது. இந்த ஒட்டுமொத்த விளைவு (cumulative effect) அமைப்பின் ஒருங்கிணைப்புத் திறனை குறைக்கிறது.

இதே நேரத்தில், சீனா நேரடி மோதலைத் தவிர்த்து, பொருளாதார மற்றும் மூலோபாய வலிமையை விரிவுபடுத்துகிறது. மாற்று அமைப்புகளை உருவாக்கி, அது அழுத்தத்தில் இருக்கும் அமைப்பு (system under strain) நிலையில் பலன் பெறுகிறது.

இந்த மாற்றங்கள் திடீர் வீழ்ச்சியை உருவாக்குவதில்லை. மாறாக, அவை அமைப்பின் மாற்றம் (transformation of the system) என்ற மெதுவான செயல்முறையை உருவாக்குகின்றன.



ஆனால் இந்த மாற்றப் பாதையில் அபாயங்களும் உள்ளன. மோதல்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்திருப்பதால், அழுத்தத்தில் தவறான கணிப்பு (miscalculation under strain), குறைந்து வரும் தேர்வுகள் (narrowing choices), மற்றும் தீவிரமான சூழ்நிலைகள் (extreme conditions) மூலம் மோதல்கள் அதிகரிக்கக்கூடும். ஒரு முக்கிய எல்லை (threshold) தாண்டப்படும் அபாயம் எப்போதும் உள்ளது.

அணு ஆயுதங்கள் இந்த நிலையை கட்டுப்படுத்துகின்றன; ஆனால் அபாயத்தை முற்றிலும் நீக்கவில்லை. தவறான முடிவுகள் உருவாகும் வாய்ப்பு இன்னும் உள்ளது.

எனவே, கேள்வி உலகப்போர் தொடங்குமா என்பதல்ல. அது ஏற்கனவே நடைபெறுகிறதா என்பதே முக்கியம்.

மிகவும் சாத்தியமான முடிவு — உலகம் ஒரு பல்துருவ மற்றும் சிதறலான அமைப்பாக மாறுவது. ஆனால் இந்த மாற்றம் அபாயமில்லாதது அல்ல. அணு பேரழிவு நிகழ வாய்ப்பு குறைவு தான் — ஆனால் அதை முற்றிலும் நிராகரிக்க முடியாது.

• • •



# வோசிங்டனுக்கு தோல்வியின் விலை அதிகமாக இருக்கலாம்

தமிழில்: ஆர்தீகன்

ஈரானுடனான போரின் விளைவு, வரும் ஆண்டுகளில் உலக அரங்கில் அமெரிக்காவின் திறன்களைத் தீர்மானிக்கும். அதுவே, மேற்கு ஆசியாவில் நடக்கும் தற்போதைய மோதலை, அந்தப் பிராந்தியத்தைத் தாண்டியும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆக்குகிறது.



ஈரான் மீதான அமெரிக்காவின் கொள்கை மேலும் மேலும் நிலையற்றதாகி வருகிறது. அதிபரின் மாறிவரும் சொல்லாடல்களில் கவனம் செலுத்துவதை விட, இந்த மோதலுக்குப் பின்னால் உள்ள தர்க்கத்தை ஆராய்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தெஹ்ரானுக்கு எதிராகத் தீர்க்கமாக நடவடிக்கை எடுக்க இதுவே சரியான தருணம் என்று வாஷிங்டன் தன்னைத்தானே நம்பவைத்துக் கொண்டதாகத் தெரிகிறது; அது தனது பலவீனமான தருணமாகக் கருதும் ஒன்றைப் பயன்படுத்திக் கொள்கிறது.

தனித்துப் பார்க்கும்போது, இந்த நோக்கத்தில் ஒருவித உணர்ச்சியற்ற பகுத்தறிவு உள்ளது. கோட்பாட்டளவில், சிறப்பாகச் செயல்படுத்தப்படும் ஒரே ஒரு தாக்குதல், பல நீண்டகால இலக்குகளை ஒரே நேரத்தில் அடைய முடியும்: 1979 தூதரக நெருக்கடியின் வரலாற்றுப் பழியை தீர்ப்பது, இஸ்ரேலுக்கு விரோதமானதாகக் கருதப்படும் ஒரு ஆட்சியை அகற்றுவது, முக்கிய எரிசக்தி வளங்கள் மற்றும் போக்குவரத்து வழிகள் மீது செல்வாக்கு பெறுவது, மற்றும் வளர்ந்து வரும் யூரேசிய ஒருங்கிணைப்புத் திட்டங்களைப் பலவீனப்படுத்துவது. ஆலோசகர்கள் இதை ஒரு அரிய வாய்ப்பாக முன்வைத்ததாகத் தெரிகிறது. அதிபர் அந்த வாதத்தை ஏற்றுக்கொண்டார்.

ஆனால் இத்தகைய லட்சியங்கள் ஒரு அடிப்படைத் தவறான கணிப்பின் மீது தங்கியுள்ளன. ஈரான் என்பது 2003-ஆம் ஆண்டின் ஈராக் அல்ல, 2001-ஆம் ஆண்டின் ஆப்கானிஸ்தானும் அல்ல. சமீபத்திய பத்தாண்டுகளில் அமெரிக்கா நேரடியாக எதிர்கொண்ட எந்தவொரு எதிரியின் திறன்களை விடவும் அதன் இராணுவத் திறன்கள் மிகவும் கணிசமானவை. அது ஆழமான மூலோபாய வலிமையையும், உலகளாவிய வர்த்தகம் மற்றும் எரிசக்தி ஓட்டங்களில் கடுமையான இடையூறுகளை ஏற்படுத்தும் திறனையும் கொண்ட ஒரு பெரிய, மீள்திறன் மிக்க நாடாகும்.

இந்தக் கடைசிப் புள்ளி மிகவும் முக்கியமானது. ஈரானின் புவியியல் நிலை, மிகச் சில நாடுகளுக்கே உள்ள ஒரு சாதகத்தை அதற்கு அளிக்கிறது. ஒரு சிறிய அளவிலான பதற்ற அதிகரிப்பு கூட, மத்திய கிழக்குக்கு அப்பால் உள்ள கப்பல் போக்குவரத்துப் பாதைகளையும் பொருளாதார ஸ்திரத்தன்மையையும் அச்சுறுத்தக்கூடும், இது அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளின் நலன்களை நேரடியாகப் பாதிக்கும். அந்த ஒரு யதார்த்தமே, ஒரு விரைவான, தெளிவான வெற்றிக்கான எந்தவொரு முயற்சியையும் சிக்கலாக்குகிறது.



மேலும், கடந்தகால அமெரிக்கத் தலையீடுகளிலிருந்து அரசியல் சூழல் மிகவும் வேறுபட்டது. முந்தைய நடவடிக்கைகளுடன் வந்த முறையான நியாயப்படுத்தல்கள் கூட இல்லாத தற்போதைய படைபலப் பிரயோகம், வாஷிங்டனின் கூட்டாளிகளை நிலைகுலையச் செய்துள்ளது. ஒரு காலத்தில் அமெரிக்காவை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்தை உணர்ந்திருக்கக்கூடிய நட்பு நாடுகள், இப்போது நிச்சயமற்ற விளைவுகளுக்கு எதிராகத் தலையீட்டின் அபாயங்களை எடைபோட்டு, அதிகத் தயக்கம் காட்டுகின்றன.

ஈரான் விரைவாகச் சரணடைந்துவிடும் என்பதே ஆரம்பத்தில் இருந்த அனுமானமாகத் தெரிகிறது. அந்தச் சரணடைதல் எப்படி இருக்கும் என்பது ஒருபோதும் முழுமையாகத் தெளிவாகவில்லை: ஆட்சி கவிழ்ப்பா, வெனிசுலாவைப் போன்ற கட்டாய இணக்கமா, அல்லது தெஹ்ரானின் அதிகாரத்தைக் கடுமையாகக் கட்டுப்படுத்தும் ஒரு பேச்சுவார்த்தைத் தீர்வா என்பது தெரியவில்லை. எப்படியிருந்தாலும், ஒரு நீடித்த மோதல் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கவில்லை.

தற்போது இந்த மோதல் நீடித்து வருவதால், ஒரு மிக அடிப்படையான கேள்வி எழுந்துள்ளது: வெற்றி என்பது சரியாக என்ன? இந்த இக்கட்டான நிலை, அமெரிக்க



வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்டுள்ள ஒரு பரந்த மாற்றத்தைப் பிரதிபலிக்கிறது. “அமெரிக்கா முதலில்” என்பது பெரும்பாலும் தனிமைப்படுத்துதல் அல்லது கட்டுப்பாடு என்று விளக்கப்படுகிறது. நடைமுறையில், அது முற்றிலும் வேறொன்றைக் குறிக்கிறது: அதாவது, எந்தப் பொறுப்புமின்றியும், முடிந்தால் எந்தச் செலவுமின்றியும் அமெரிக்காவின் நோக்கங்களைப் பின்தொடர்வது. இதன் அடிப்படைக் கொள்கை எளிமையானது: பொறுப்புகளைக் குறைத்துக்கொண்டு அதிகபட்சப் பலனை அடைவது.



ஒரு குறிப்பிட்ட காலம் வரை, இந்த அணுகுமுறை பலனளிப்பதாகத் தோன்றியது. தனது முதல் ஆண்டில், டொனால்ட் டிரம்ப், பெரும்பாலும் தனது அபரிமிதமான பொருளாதார சக்தியைப் பயன்படுத்தி, கூட்டாளிகளை அமெரிக்காவின் நிபந்தனைகளை ஏற்கும்படி அழுத்தம்

தொடர்ச்சி: பக்கம் 18



# வானாதிக்கத்தை இழந்த வான் அரசன்

ஈரான் மீதான அமெரிக்க மற்றும் இஸ்ரேல் கூட்டணி நாடுகளின் தாக்குதல்கள் ஐந.தாவது வாரத்தை எட்டி யுள்ளது. ஈரானின் படை பலத்தை இந்த நாடுகளால் குறைக்க முடியவில்லை என்பதற்கு மாறாக அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய படையினர் ஈரானின் பதில் தாக்குதல்களை தடுக்க முடியாது திணறி வருகின்றனர் என்பதே கள யதார்த் தமாக உள்ளது.



கடந்த மார்ச் 19 ஆம் நாள் அமெரிக்காவின் மிக முக்கிய ஐந்தாம் தலைமுறை விமானமான எப்-35 விமானத்தை ஈரான் சுட்டு சேதப்படுத்தியதை தொடர்ந்து இந்த மாதம் மற்றுமொரு விமானம் சுடப்பட்டுள்ளது. இந்த தடவை அமெரிக்க விமானத்தின் பாகங்கள் ஈரானுக்குள் வீழ்ந்துள்ளதால் ஈரானின் உரிமைகோரல்களை உறுதிப்படுத்த ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

ஈரானிய ஊடகங்கள் வெளியிட்ட காணொளியில் அமெரிக்க வான் படையின் 494 ஆவது போர் விமானப் படைப்பிரிவைச் சேர்ந்த எப்-15ஈ ஸ்ட்ரைக் ஈகிள் ரக விமானத்தின் சிதைவுகள் தென்படுகின்றன. ஆனால் அதனை எப்-35 விமானம் என ஈரானிய படையினர் தெரி வித்திருந்தனர். எனினும் விமானத்தின் சிதைவுகள் அது எப்-15 என்பதையே காட்டுகின்றன. சிதறிக்கிடந்த பாகங்கள் நீண்டதூர தாக்குதல் பணிகள் மற்றும் வான்வழிப் போர்களுக்கு பயன்படுத்தப்படும் இரட்டை இயந்திரம் கொண்ட ஸ்ட்ரைக் ஈகிள் விமானத்துடன் ஒத்துப் போகின்றது.



இந்த விமானம் அமெரிக்க வான்படையின் முன் னணி தாக்குதல் பிரிவுகளில் ஒன்றான பந்தர்ஸ் என்று அழைக்கப்படும் 494 ஆவது பைட்டர் ஸ்குவாட்ரனுக்கு சொந்தமானது. அது பலத்த பாதுகாப்புள்ள இலக்குகளுக்கு எதிரான ஆழஊடுருவும் தாக்குதல் பணிகளுக்காக பயிற்று விக்கப்பட்டது.

தரையில் உள்ள இலக்குகளை துல்லியமாக தாக்குவதற்கும் அதேசமயம் எதிரிவிமானங்களை வானில் எதிர்கொள்வதற்கும் உள்ள திறமையை கொண்ட அமெரிக்க வான்படை விமானங்களில் எப்-15 முதன்மையான நான்காம் தலைமுறை விமானமாகும். எனினும் இந்த விமானம் ஈரானின் உட்பகுதிக்குள் வீழ்ந்துள்ளதால் அதில் இருந்த விமானகளின் நிலை என்பது குறித்த தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை.

இந்த தகவலை அமெரிக்காவின் மத்திய கட்டளை மையம் இந்த கட்டுரை எழுதப்படும் வரையிலும் உறுதிப் படுத்தவில்லை, ஆனால் அது உறுதிப்படுத்தப்பட்டால் ஈரா னின் உட்புற வான்பரப்பில் சுட்டுவீழ்த்தப்பட்ட முதலாவது விமானம் இதுவாகும். இதற்கு முன்னரும் குவைத்தில் 3 எப்-15ஈ விமானங்கள் வீழ்ந்திருந்தன. அதனை குவைத்தின் வான்படை தனது எப்-18 விமானங்களால் தவறுதாலாக சுட்டு வீழ்த்தியதாக அமெரிக்கா தெரிவித்திருந்தது.

அதன் பின்னர் அமெரிக்காவின் எப்-35 விமானம் ஈரான் வான்பரப்பில் வைத்து சுடப்பட்டிருந்தது. ஈரான் உண்மையில் ஒரு எப்-35 ஸ்ரெல்த் ஜெட் விமானத்தை எப்படித் தாக்கியது? தற்போது ஒவ்வொரு படைத்துறை ஆய்வாளர்களையும் உலுப்பும் கேள்வி இது தான்.



ரஸ்யாவின் பில்லியன் டொலர் ரேடார் அமைப்புக் களால் கூட கண்டறியமுடியாதவாறு வடிவமைக்கப்பட்ட ஒரு போர் விமானத்தை ஒரு சிறிய ஈரானிய ஏவுகணை எப்படித் தாக்கியது?

இந்த ராட்சத விமானம் லக்கீட் மார்டின் நிறுவ னத்தின் எப்-35 லைட்னிங் ஸ்ரைட்க் இரண்டு என்ற ஐந்தாம் தலைமுறை விமானத்தின் தலைசிறந்த விமானம். 2 றில்லியன் டொலர்கள் செலவில் 20 ஆண்டுகள் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பலனாக உருவாக்கப்பட்டது.

எதிரிகளின் ரடார்களை தாண்டிச் சென்று எந்த சிரமமும் இன்றி எதிரிக்கு தெரியாமால் தாக்கிவிட்டு வரும் இந்த விமானத்தின் பெறுமதி 110 மில்லியன் டொலர்கள். அதன் முக்கிய பணி எதிரியின் வான் பாதுகாப்பு அமைப்புக்களை அழித்து அவர்களின் வான்பரப்பை தனது ஆதிக்கத்தின் கீழ் எடுத்துக்கொள்வது. அதனை சாதிக்க அது உலகின் மிகவும் அபாயகரமான அதி இரகசிய ஸ்ரெல்த் தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்றது. கடந்த 8 வருடங்களில் இந்த விமானத்தை யாரும் ஒருமுறை கூட தாக்கவில்லை.

எனவே உலகின் மிகவும் பலமான இந்த ஆயுதத்தின்

வேல்ஸில் இருந்து **அருஸ்**

பலவீனமான புள்ளி என்ன என்பதே தற்போதைய கேள்வி. ரஸ்யாவினாலும், சீனாவினாலும் செய்ய முடியாததை ஈரான் எப்படி செய்து காட்டியது?



ஏவுகணைகளை வழிநடத்த பெரும்பாலும் இரண்டு வழிகளைப் பயன்படுத்துகின்றன. ரேடார் மற்றும் வெப் பத்தை கண்டறிதல். ஆனால் எப்-35 இன் விசித்திரமான வடிவம் மற்றும் ரேடார் கதிர்களை உறிஞ்சும் இரசாயனப் பொருட்களைக்கொண்ட கொண்ட உடல் அமைப்பு காரணமாக அதை ரடார்களால் வழிநடத்தப்படும் ஏவுகணை கள் தாக்க முடியாது. எனவே எஸ்-300 மற்றும் எஸ்-400 போன்ற பில்லியன் டொலர்கள் பெறுமதியான ஏவுகணை களே அதனை குறிவைக்க தடுமாறும்.



அதாவது அனுப்பபடும் ரடார் சமிக்கைகள் திரும்பி வருவதில்லை. விமானம் அதனை உறிஞ்சிவிடும். ஆனால் எப்-35 இன் பிராட் ரூ விட்னி கு-135 என்ற ஒற்றை இயந்திரம் உலகின் மிகவும் சக்திவாய்ந்த இயந்திரமாகும். ஆனால் அதன் சக்தியுடன், அதிகளவான வெப்பமும் வெளிவருகின்றது. அது தான் அதன் குறைபாடு. மார்ச் 19 ஆம் நாள் அதிகாலை ஈரானிய நேரம் 2.50 மணியளவில் ஈரான் தமது பாதுகாப்புக்காக ரடார்களை நம்புவதற்குப் பதிலாக அகச்சிவப்பு தேடுதல் மற்றும் கண்காணிப்பு அமைப்பு (Infrared Search and Track System, or IRST) என்ற

தொடர்ச்சி: பக்கம் 18

## போரில் ஈரான் ... தொடர்ச்சி...

சிகிச்சையான ஆன்கோபெப்ட் (Oncopept). இவை இரண்டும் 2025-ல் மனிதர்களுக்கான முன்னோட்ட சோதனைகளைத் தொடங்கின.

செவ்வாயன்று(31), நியோஆன்கோவாக் அதன் முதல் மருத்துவ நோயாளிக்குச் செலுத்தப்பட்டது. அவர் மூன்றாம் நிலை தோல் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 60 வயது ஆண் ஆவார். இந்தத் திருப்புமுனையான கட்டி எதிர்ப்பு மருந்தை உருவாக்க உதவிய கமாலேயா தொற்றுநோயியல் மற்றும் நுண்ணுயிரியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவியல் இயக்குநர் அலெக்சாண்டர் கின்ஸ்பர்க் இவ்வாறு தெரிவித்தார்.

"இதுவரை, அவர் நலமாக இருக்கிறார். மருந்துக்கு எந்தவிதமான பக்க விளைவுகளும் ஏற்படவில்லை" என்று கின்ஸ்பர்க் புதன்கிழமை ரஷ்ய செய்தி இணையதளமான Gazeta.ru-விடம் கூறினார். "அவருக்கு 60 வயது, மேலும் மெட்டாஸ்டாசிஸுடன் கூடிய மூன்றாம் நிலை மெலனோமா உள்ளது. இந்தத் தடுப்பூசி குறிப்பாக மெட்டாஸ்டாசிஸை எதிர்த்துப் போராட உதவுகிறது."

நோயாளியின் கட்டி மற்றும் கட்டி அல்லாத திசுக்களிலிருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு, புற்றுநோய் செல்களைத் தாக்க நோயெதிர்ப்பு மண்டலத்திற்குப் பயிற்சி அளிக்கும் ஒரு பிரத்யேக தடுப்பூசியை உருவாக்க, ஆராய்ச்சியாளர்கள் அதன் மரபணுவை ஆய்வு செய்தனர் என்று கின்ஸ்பர்க் விளக்கினார்.

"இது அடிப்படையில் ஒரு வித்தியாசமான அணுகுமுறை நோய்க்கு வெறுமனே சிகிச்சை அளிப்பது மட்டுமல்ல, அச்சுறுத்தலாக இருக்கும் செல்களைத் துல்லியமாக அடையாளம் கண்டு அழிக்க நோயெதிர்ப்பு மண்டலத்திற்கு 'பயிற்சி' அளிப்பதாகும் என்று அவர் புதன்கிழமை அன்று TASS செய்தி நிறுவனத்திடம் கூறினார்.

## வானாதிக்கத்தை ... தொடர்ச்சி...

அமைப்பை பயன்படுத்தியது.

இந்த அமைப்பு வானத்தில் வெப்ப சமிக்ஞைகளை தேடி கண்டறியவல்லது. தேடியது போலவே இந்த அமைப்பு எப்-35 இல் இருந்து வெளிவந்த அதிக வெப்பத்தை கண்டறிந்தது. இந்த அமைப்பு தானாக எந்த சமிக்ஞைகளையும் அனுப்புவதில்லை எனவே எப்-35 விமானி தான் குறிவைக்கப்படுவதை அறியவில்லை. அதன் பின்னர் ஈரான் விமானத்தை தாக்குவதற்கான ஆயுதத்தை தெரிவு செய்தது. அதனை தாக்க ஈரான் தெரிவுசெய்த ஏவுகணை எஸ்.ஏ-38 எனப்படும் 358 இலக்க ஏவுகணையாகும். இந்த ஏவுகணை தந்திரமான ஏவுகணை, அது ஒரு சாதாரண தரை-வான் ஏவுகணையல்ல.

அதாவது பாதி தற்கொலை ரோன் தொழில்நுட்பம், பாதி ஏவுகணை தொழில்நுட்பம் கொண்டு வடிவமைக்கப்பட்ட ஏவுகணை. அது மெதுவாக பறந்து ஒரு குறிப்பிட்ட பகுதியை சுற்றி எட்டு வடிவில் வட்டமிடும். அதில் ஒளியியல் மற்றும் வெப்ப உணர்திறன் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. அதாவது அது இலக்குக்காக வானில் காத்திருக்கும் விமானத்தின் வெப்பம் அதில் பட்டதும் அடுத்த நொடியே இலக்கை நோக்கி பாய்ந்துவிடும். மேலும் தரையில் உள்ள அகச்சிவப்பு உணர்திறன் கருவிகளைக் கொண்டும் இந்த 358 ஏவுகணையை வழிநடத்தமுடியும்.

ரடார் எச்சரிக்கை இல்லை என்பதற்காக எப்-35 விமானத்தை இலகுவாக தாக்க முடியாது. இந்த விமானத்தில் மிகவும் மேம்பட்ட பரவலாக்கப்பட்ட துளை அமைப்பு பொருத்தப்பட்டுள்ளது (super-advanced distributed aperture system, or DAS). அதில் 6 அகச்சிவப்பு கமராக்கள் உள்ளன. அவை விமானிக்கு விமானத்தை சுற்றி 360 பாகையில் பார்வையை அளிக்கின்றது. 358 ஏவுகணை முழுவீச்சில் சென்று அதன் ரக்கட் மோட்டர் வெப்பத்தை வெளியிடத் தொடங்கிய அடுத்த நொடியே இந்த கமராக்கள் (DAS)அதனை கண்டறிந்து விமானிக்கு எச்சரிக்கையை அனுப்பிவிடும்.

தற்போது விமானி எதிர்வினையாற்ற சில நொடி அவகாசமே இருக்கும். ஏவுகணையின் பிடியை உடைப்பதற்கு விமானி விமானத்தை அதிக ஈர்ப்பு விசை கொண்ட திருப்பங்களுக்குள் திடீரென திருப்பி திருப்பி அதனை குழப்பவேண்டும். அதேசமயம், விமானம் ஒளிக்கீற்றுக்களை (flares) வெளியிடத் தொடங்கும். இந்த ஒளிக்கீற்றுக்கள் ஏவுகணையின் உணரியை ஏமாற்றி அது விமானத்தை விடுத்து அந்த ஒளிக்கீற்றுக்களை துரத்த வைப்பதேயாகும். அதனை எப்-35 செய்து வெற்றி கண்டது. ஆனால் 358 ஏவுகணை இந்த போலியான ஒளிக்கீற்றுக்களில் சிக்கினாலும், அது விமானத்திற்கு அருகில் சென்றுவிட்டது.

ஏவுகணை இலக்கிற்கு அருகில் தான் இருப்பதை விமானி உணரும்போது ஏவுகணை விமானத்திற்கு அருகில் நடுவானில் வெடித்து சிதறியது. அந்த வெடிப்பு அதிர்வினாலும், அதிவேக குண்டுச் சிதறல்களினாலும் எப்-35 விமானத்தின் உடல் கடுமையாக சேதமடைந்து அதன் ஸ்ரேல்த் அமைப்பு அகற்றப்பட்டது. விமானத்தின் கட்டுப்பாட்டு அமைப்புக்களும் செயலிழந்தன. விமானத்தில் நேரிடையாக ஏவுகணை மோதியிருந்தால் விமானம் நெருப்பந்தாக மாறியிருக்கும்.

எனவே தான் பெரும் சேதம் ஏற்பட்டபோதும் விமான ஒரு பாதுகாப்பான அவசர தரையிறக்கத்தை வெற்றிகரமாக செய்துள்ளார். அமெரிக்காவின் ஐந்தாம் தலைமுறை விமானத்தை சுட்டு வீழ்த்த ஒரு பில்லியன் டொலர்கள் பெறுமதியான ரடார் தேவையில்லை என்பதை ஈரான் நிரூபித்துள்ளது. நவீன போர் முறை மாறிவருகின்றது. அது அமெரிக்கா தனது போர் உத்திகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது.

• • •

## வாஷிங்டனுக்கு தோல்வி ... தொடர்ச்சி...

கொடுத்தார். ஆனால் அந்த உத்தி, அர்த்தமுள்ள எதிர்ப்பு இல்லாத நிலையைச் சார்ந்துள்ளது. கட்டுப்படுத்த முடியாத ஒரு சூழ்நிலையில் இதைப் பயன்படுத்தும்போது இது மிகவும் ஆபத்தானதாகிறது.

ஒரு பெரிய புவிசார் அரசியல் நெருக்கடியை உருவாக்கி, அதன் விளைவுகளை மற்றவர்கள் தாங்கிக் கொள்ள வேண்டும் என்றும், வாஷிங்டன் தனக்குச் சாதகமாகப் பலன்களைப் பெற வேண்டும் என்றும் எதிர்பார்ப்பது முற்றிலும் வேறுபட்ட ஒரு செயலாகும். இது எதிரிகளை மட்டுமல்ல, அமெரிக்கா இயங்கும் முழு அமைப்பையுமே நிலைகுலையச் செய்யும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

"நன்மை செய்யும் மேலாதிக்க சக்தி" என்ற கருத்து இந்தக் காலகட்டத்தில்தான் உருவானது. ட்ரம்பின் உலகப்பார்வை அந்தக் கருத்தை நிராகரிக்கிறது. மாறாக, அமெரிக்காவின் செழிப்பு மற்றவர்களின் இழப்பில்தான் வர வேண்டும் என்றும், பழைய சமநிலையை மாற்றியமைக்க வேண்டிய நேரம் இது என்றும் அது கருதுகிறது.

இந்த மாற்றம் ஆழமான தாக்கங்களைக் கொண்டுள்ளது. ஸ்திரத்தன்மையை வழங்க முற்படாத ஒரு மேலாதிக்க சக்தி, வற்புறுத்தலை அதிகமாகச் சார்ந்திருக்க வேண்டும். ஆனால், வற்புறுத்தல் பயனுள்ளதாக இருக்க, அதற்கு நம்பகத்தன்மை தேவை. ஆதிக்க சக்தி, தேவைப்படும் போது தனது விருப்பத்தைத் திணிக்க முடியும் என்பதைத் தெளிவாக நிரூபிக்க வேண்டும்.

### ஈரான் ஒரு சோதனைக்களமாக மாறியுள்ளது.

அமெரிக்கா, நடைமுறையில், இந்தச் சவாலைத் தனக்காகவே தேர்ந்தெடுத்துள்ளது. எனவே, இதில் உள்ள பந்தயம் மிக அதிகம். ஒரு தீர்க்கமான முடிவை அடையத் தவறினால், அது மற்றொரு பின்னடைவாக மட்டும் இருக்காது; அது, வாஷிங்டன் நிறுவ முயற்சிக்கும் புதிய விதிகளின் கீழ் ஒரு உலகளாவிய சக்தியாகச் செயல்படும் திறனையே கேள்விக்குள்ளாக்கும்.

இதுதான் தற்போதைய மோதலை முந்தைய போர்களிலிருந்து வேறுபடுத்துகிறது. ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் தெளிவான வெற்றிகள் இன்றி முடிவடைந்தன, ஆனால் அவை வேறுபட்ட ஒரு மூலோபாயக் கட்டமைப்பின் கீழ் நடத்தப்பட்டன. இன்றைய மோதல், சட்ட அல்லது சித்தாந்தக் கட்டுப்பாடுகளால் அதிகம் பாதிக்கப்படாமல், மிகவும் வெளிப்படையான பரிவர்த்தனைத் தன்மையுடனும், அதிகாரத்தை நிலைநிறுத்துவது பற்றியதாகவும் உள்ளது.

அது வெற்றியை வரையறுப்பதை மிகவும் அவசரமானதாகவும் அதே சமயம் கடினமானதாகவும் ஆக்குகிறது. விருப்பத் தேர்வுப் போரில், வெற்றிக்கான அளவுகோல்கள் முன்கூட்டியே நிர்ணயிக்கப்படுவதில்லை. ஆயினும், சில முடிவுகள் தெளிவாகவே திருப்தியற்றதாக இருக்கும். உதாரணமாக, உலக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நெருக்கடிப் பகுதியான ஹோர்முஸ் ஜலசந்தியின் மீது ஈரான் தனது கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக் கொண்டால், எந்தவொரு நடவடிக்கையையும் வெற்றிகரமானதாகக் கருத முடியும் என்று கற்பனை செய்வது கடினம்.

தெளிவான தீர்வு இல்லாமல் இந்த மோதல் எவ்வளவு காலம் நீடிக்கிறதோ, அவ்வளவு அதிகமாக வாஷிங்டன் மீதான அழுத்தம் அதிகரிக்கும். சர்வதேச அமைப்பில் தனது பங்கை மறுவரையறை செய்ய விரும்பும் ஒரு சக்திக்கு, தெளிவின்மை என்பது ஒரு தேர்வாக இருக்க முடியாது.

முடிவு மிகவும் கடுமையானது. அமெரிக்காவிற்கு இப்போது ஒரு தீர்க்கமான வெற்றி தேவை. அதற்கு மாற்றாக, தெளிவான முடிவு இல்லாத ஒரு நீடித்த மோதல், மத்திய கிழக்கில் மட்டுமல்ல, உலக அளவிலும் அதன் நிலையைச் சீர்குலைக்கும்.

அபாயங்கள் வெளிப்படையானவை. ஆனால் வாஷிங்டனுக்கு, தோல்வியின் விலை இன்னும் அதிகமாக இருக்கலாம்.

**நன்றி ரஸ்யா ருடே**

## ரஷ்ய எரிபொருள் ... தொடர்ச்சி...

என்ற அடிப்படையில் வரையறுக்கப்பட்ட எரிபொருளை வழங்குவதே திட்டமாக உள்ளது.

அதுகூட இன்னமும் உறுதியாகவில்லை. இலங்கையின் எரிபொருள் கோரிக்கையை மொஸ்கோ இன்னமும் பரிசீலனையிலேயே வைத்திருக்கின்றது. இலங்கைக்கு எரிபொருளை வழங்குவது குறித்து சாத்தியக்கூறுகளே அங்கு ஆராயப்படுகின்றன.

அத்தோடு, ரஷ்யாவின் எரிபொருட்களை தனியார் நிறுவனங்கள் ஊடாக முகவர்களை மையப்படுத்தியதாக கொள்வனவு செய்யப்படுகின்றபோது கொள்வனவு விலைகளில் கணிசமான அதிகரிப்பு காணப்படும். அது உள்நாட்டு எரிபொருள் விலைகளில் அதிகரிப்பு ஏற்படுத்துவதை தவிர்க்க முடியாது போகும்.

இத்தகைய சூழலில் இலங்கை அரசாங்கம் தற்போது வலுச்சக்தி அமைச்சு, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தொடர்பே இல்லாது போக்குவரத்து மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் ஊடாக ரஷ்யா எரிபொருளை வழங்கவுள்ளதாக ஊடக அறிவிப்புக்கள் மூலம் தீவிரமான பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது.

ஆனால் யதார்த்தத்தினை புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகின்றது, ரஷ்யாவைப் பொறுத்தவரையில் வலுச்சக்தி துறைக்கு பிரதான அமைச்சரை விடவும் நான்கு பிரதியமைச்சர்கள் காணப்படுகின்றார்கள். அதில் இலங்கைக்கு வருகை தந்திருந்த ரோமன் மார்ஷவின் மூன்றாம் நிலையில் உள்ளவராவார்.

அதேபோன்று தான் ரஷ்யாவின் வெளிவிவகார துறைக்கு பிரதான அமைச்சரை விடவும் நான்கு பிரதியமைச்சர்கள் உள்ளனர். அவர்களில் இரண்டாம் நிலையில் உள்ள அன்ரே ருடென்கோவே இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

ஆகவே மேற்படி இரு அமைச்சர்களும் தீர்மானம் எடுக்கக்கூடிய 'தகைமை' உள்ளவர்கள் அல்லர். அவர்கள் இலங்கையில் நடைபெற்ற சந்திப்புக்களின் வெளிப்பாடுகளையும், கோரிக்கைகளையும் நேரடியாக மொஸ்கோவிடம் கொண்டு சேர்ப்பவர்கள் மட்டும் தான்.

அவ்விதமான நிலையில் ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் கிடைப்பது உறுதியானது என்ற இலங்கை அரசாங்கத்தின் பிரசாரம் எவ்வளவு தூரம் நடைமுறைச் சாத்தியமானது என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.

இத்தகைய நிலையில் மொஸ்கோவுக்குச் சென்றிருக்கும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க பல்வேறு சந்திப்புக்களில் ஈடுபடுகின்றார். அவருடைய நோக்கமும் இலக்கும் ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 'அரசாங்கம்-அரசாங்கம்' என்ற வகையில் எரிபொருள் கொள்வனவு உடன்பாட்டை எட்டுவதற்கான இணக்கப்பாட்டை அடைவது தான்.

ஆனால், பிமல் ரத்நாயக்கவைப் பொறுத்தவரையில் அவர் ஜே.வி.பியின் சீனப் பிரிவை கையாள்பவர்களில் முக்கியமான ஒருவர். ரஷ்யா, சீனா இடையே உறவுகள் சுமூகமாக காணப்பட்டாலும் சீன விவகாரங்களை கையாளும் ஒருவரை வைத்து ரஷ்யாவை நெருக்கமாக்க பிற்போக்கான இராஜதந்திர மூலோபாய அணுகுமுறையாகும்.

ஜே.வி.பியின் தலைமையகமான பெலவத்தையில் இருந்து ஒட்டுமொத்த கட்டமைப்பை நிர்வகிக்கும் முதிர்ச்சியான தோழர் ரில்வின் சில்வாவுக்கு மேற்படி அணுகுமுறை குறித்த புரிதல் கூட ஏற்படாது போனது என்பது ஆச்சரியம் தான்.

அதேநேரம், ரஷ்யாவின் எரிசக்தி வளம் என்பது வெறும் கச்சா எண்ணெயுடன் மட்டும் நின்றுவிடவில்லை; அது இயற்கை எரிவாயு மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு ஆகியவற்றிலும் உலகத்தரம் வாய்ந்தது.

இலங்கையின் மின்னுற்பத்தி நிலையங்களை இயற்கை எரிவாயுவுக்கு மாற்றும் திட்டங்களுக்கு ரஷ்யாவின் ஒத்துழைப்பு கிடைத்தால், அது பாரிய செலவுச் சேமிப்பைத் தரும்.

அதேநேரம், ரஷ்யாவிடமிருந்து உரங்கள் மற்றும் ஏனைய கைத்தொழில் மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதன் மூலம் விவசாயத் துறையிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும்.

ரஷ்யா ஆசிய நாடுகளுடன் கொண்டுள்ள நல்லுறவை ஒருபோதும் கைவிடப்போவதில்லை என்றும், தடைகளுக்கு முன்னரும் பின்னரும் தனது கொள்கையில் உறுதியாக இருப்பதாகவும் அறிவித்துள்ளமை இலங்கைக்கு ஒரு பெரிய நம்பிக்கையை அளிக்கலாம்.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் அமெரிக்காவின் புதிய நிர்வாகத்தைப் பகைத்துக் கொள்ளாமல், ரஷ்யா போன்ற நீண்டகால நட்பு நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறுவது என்பது சவாலான காரியமாகும். அதுமட்டுமன்றி, இந்தியாவின் பிராந்திய நலன்களையும் கருத்திற் கொண்டு, இலங்கை தனது எரிசக்திப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயத்திலும் உள்ளது.

ரஷ்யாவுடனான 70 ஆண்டுகால இராஜதந்திர உறவை புதிய பரிமாணத்திற்குக் கொண்டு செல்ல வேண்டிய தருணம் இலங்கைக்கு இப்போது வலிந்து ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் ஆசியப் பிராந்திய மூலோபாயங்களுக்கு அப்பால் எரிசக்தித் துறையில் அந்நாடு வழங்க முன்வந்துள்ள இந்த நீண்டகாலப் பங்களிப்பு, இலங்கையை தன்னிறைவு பெற்ற நாடாக மாற்றுவதற்கு உதவும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் இலங்கையின் எரிசக்தி எதிர்காலம் என்பது தொழில்நுட்பம்,இராஜதந்திரம் மற்றும் பொருளாதார வியூகங்களின் ஒன்றிணைந்த செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது. அதற்கான 'அரசியல் இயலுமை' அநுர அரசிடம் உள்ளதா என்பது கேள்வியே.

• • •

## அமெரிக்கா - ஈரான் போர் ... தொடர்ச்சி...

முதன்மைத்தன்மையைத் தக்கவைக்க வேண்டும் என்பதற்காகவே சதாம் உசைன் அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்டு, படுகொலைசெய்யப்பட்டார்.

அதேபோல், லிபியாவின் அதிபர் கடாபியும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகக் குரல் எழுப்பியவர். அவரும் அமெரிக்காவின் செல்வாக்கைக் குறைக்க முயன்ற காரணத்தினால்தான், மிகச் சூட்சுமமான முறையில் அவரது சொந்தநாட்டுப் படையினராலேயே படுகொலை செய்யப்பட்டார். இந்த இரு உதாரணங்களும் டொலரின் முதன்மைத் தன்மையை அடிப்படையாக வைத்து அமெரிக்கா செலுத்தும் செல்வாக்கிற்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற பயத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகக் கருதலாம்.

**கேள்வி :**

**டொலருக்கு மாற்றாகச் சீன யுவானில் எண்ணெய் வர்த்தகம் நடைபெறுவது மற்றும் 'ஸ்விப்ட்' (SWIFT) அமைப்புக்கு மாற்றான சீன முயற்சிகள் பற்றி விளக்குங்கள்.**

**பதில் :**

அமெரிக்கா டொலரைத் தன்னுடைய செல்வாக்கைக் காட்டவும், ஏகாதிபத்தியத்தை ஏற்காத நாடுகளுக்கு எதிராகப்பொருளாதார யுத்தக் கருவியாகவும் பயன்படுத்தி இருக்கிறது. இந்த கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள 'ஸ்விப்ட்' (SWIFT) என்ற சர்வதேச நிதியியல் முகாமை அமைப்பு உருவாக்கப்பட்டது. இது வங்கிகளுக்கு இடையிலான செய்திப்பரிமாற்றத்தை எளிதாக்கும் ஒரு முறையாகும். ஸ்விப்ட் பெல்ஜியத்தில் நிறுவப்பட்டு, G10 நாடுகளின் மத்திய வங்கிகளால் மேற்பார்வை செய்யப்பட்டாலும், அமெரிக்க டொலருடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. உக்ரைன் போரின்போது ரஷ்யாவுக்கு எதிராகவும், ஈரானுக்கு எதிராகவும் ஸ்விப்ட் முறை பயன்படுத்தப்பட்டது.

இந்த நெருக்கடியை உணர்ந்த சீனா, டொலருக்கு மாற்றாகச் சீன நாணயத்தை சர்வதேச வர்த்தகத்தில் அதிகரிக்கஒழுங்குபாடுகளைச் செய்து வருகிறது. சீனா இருவகையான முறைகளை உருவாக்கி இருக்கின்றது. ஒன்று CIPS (Cross-Border Interbank Payment System), இது ஸ்விப்ட் போன்றது. சீன நாணயத்தில் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்க்க இதுஉதவுகிறது. ஆனால், சீன மத்திய வங்கிதான் இதனை முழுமையாகக் கையாளுகிறது என்பது ஒரு குறைபாடாகும். இதற்குமாற்றாக சீனா 'mBridge' என்ற மற்றொரு முறையையும் கொண்டு வந்திருக்கின்றது. இதில் சீன நாணயத்தோடு ஏனைய நான்கு அல்லது ஐந்து நாடுகளின் நாணயங்களும் தொடர்பு படுகின்றன. ரஷ்யா மற்றும் சவுதி அரேபியா கூடச் சீன நாணயத்தில் வர்த்தகம் செய்ய ஒப்புக்கொண்டுள்ளன. பல ஐரோப்பிய நாடுகளும் இதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. எனவே, பெற்றோல் டொலரின் செல்வாக்கைக் குறைக்கப் பல நடவடிக்கைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

**கேள்வி :**

**ஈரான் - இஸ்ரேல் - அமெரிக்கப் போர் மற்றும் சவுதி அரேபியாவின் பெற்றோல் டொலர் ஒப்பந்தம் புதுப் பிக்கப்படாதது டொலரின் முதன்மைத் தன்மையை எவ்வாறெல்லாம் பாதிக்கும்?**

**பதில் :**

நிச்சயமாக. அமெரிக்கா இந்த பெற்றோல் டொலர் உடன்படிக்கையை அரபு நாடுகள் ஏற்றுக்கொள்ளுமாறு அழுத்தம் கொடுப்பதற்கான முக்கிய காரணம் பாதுகாப்பு. ஈரான் எப்போதும் அரபு நாடுகளுக்கு ஒரு பாதுகாப்பு அச்சுறுத்தலாகவே இருந்து வந்திருக்கின்றது. அமெரிக்காவின் பாதுகாப்பு கட்டமைப்புகள் மற்றும் ஒப்பந்தங்கள் மூலம் இதுவரை காலமும் அவர்கள் சமாளித்து வந்தனர். ஆனால், இந்தப் போர் ஆரம்பித்த பிறகு அமெரிக்காவின் பாதுகாப்பு என்பது உண்மையான பாதுகாப்புதானா? என்ற கேள்வி அவர்களுக்குள் எழுந்திருக்கிறது. அமெரிக்காவின் பாதுகாப்பு அமைப்புகள் மீறப்பட்டு, ஈரானின் ஆயுதங்கள் வந்து விழக்கூடிய சூழ்நிலை உருவாகி இருக்கிறது. மேலும், நெருக்கடியான காலப்பகுதியில் அமெரிக்கா அவர்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக இஸ்ரேலைப் பாதுகாக்கச் சென்றிருக்கின்றது. இந்த நடவடிக்கைகள் அமெரிக்கா மீதான அவர்களின் நம்பிக்கையை வெகுவாகக் குறைத்திருக்கிறது.

சவுதி அரேபியா தனது பெற்றோல் டொலர் ஒப்பந்தத்தை 2024ஆம் ஆண்டு ஜூன் மாதம் காலாவதியாகிய போதுபுதுப்பிக்கவில்லை. அதன் பிறகு சீனாவோடு இணைந்து யுவானில் வணிகம் செய்ய ஆரம்பித்தது. சவுதி அரேபியாவின் இந்தநடவடிக்கை அமெரிக்காவைத் தூண்டி இருக்கலாம். ஈரானைக் கட்டுப்படுத்தி எண்ணெய் வர்த்தகத்தைத் தன் கைக்குள் கொண்டு வராவிட்டால், சவுதி அரேபியா சீனப் பக்கம் போய்விடும் என்ற பயம் அமெரிக்காவிற்கு இருக்கிறது. இது நன்கு கணக்கிடப்பட்ட இராணுவ நடவடிக்கை. போர் என்று அறிவித்தால் போர் குற்றங்கள் வந்துவிடும் என்பதால் கவனமாகக்கையாண்டு வருகின்றனர். எது எப்படியாக இருந்தாலும், அரபு நாடுகளைப் பொறுத்தமட்டிலே அமெரிக்க டொலரின் முதன்மைத்தன்மை இனி இருக்கப் போவதில்லை.

**கேள்வி :**

**பெற்றோல் டொலர் அன்றாட வாழ்வில் எத் தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது?**

**பதில் :**

இலங்கை 2022ஆம் ஆண்டு பொருளாதார ரீதியாகப் பின்னடைவைச் சந்தித்ததற்கு டொலர் கையிருப்புகள்இல்லாமையே காரணம். எனவே, ஒவ்வொரு நாடும் டொலர் கையிருப்புகளை பேண வேண்டிய கட்டாயத்திற்குத்தள்ளப்பட்டது. இல்லாவிட்டால் வணிகம் செய்ய முடியாது என்ற அடிப்படைச் சூழல் உருவானது. இப்போது சீன நாணயமும்மாற்றாக உருவெடுக்கும்போது, நாடுகளுக்கு ஒரு புதிய வழி கிடைக்கிறது.

அமெரிக்கடொலர்இதிலிருந்துமுழுமையாகநீங்கப் போவதில்லை. ஆனால், ஒரு ஒதுக்கு நாணயம் (Reserve Currency) என்ற அடிப்படையில் அமெரிக்க டொலரோடு சமமாக வேறு நாணயங்களும் வரும். அப்படி வரும்போது, அமெரிக்கா செலுத்தும் செல்வாக்கு படிப்படியாகச் சரியும். வளரும் நாடுகளுக்கு அது ஒரு மாற்று வழியைத் தரும்.

**கேள்வி :**

**பெற்றோல் சார்ந்த உர உற்பத்திகள் மற்றும் பிற பொருட்களின் ஏற்றுமதி, இந்தப் போர்ச் சூழலில் எவ்வாறுபாதிக்கப்படும்?**

**பதில் :**

உண்மைதான். எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் மட்டுமல்லாது, பெட்ரோலை அடிப்படையாகக்கொண்டு மசகு எண்ணெயைச் சுத்திகரிக்கும் போது கிடைக்கும் 'பைப்ரடக்ட்' (Byproducts) மூலம் முக்கியமான விவசாயஉரங்கள் மற்றும் பிற இரசாயனங்கள் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

உலக நாடுகளுக்குத் தேவையான யூரியாவில் சுமார் 48% இந்த நீரிணை வழியாகத்தான் செல்கிறது. அதேபோல, பிற உரங்களுக்குத் தேவையான பாஸ்பரஸ்போன்ற உள்ளீடுகளும் இந்தப் பகுதியிலிருந்துதான் செல்கிறது.

கப்பல் கட்டணங்கள் மற்றும் காப்புறுதி கட்டணங்கள் அதிகரிக்கும்போது, உரங்களின் விலைகளும் அதிகரிக்கும். இது விவசாய உற்பத்தியின் செலவுகளை அதிகரித்து, உணவுப்பாதுகாப்பின்மையைக் கொண்டுவரும்.

மேலும், கணினித் துறை மற்றும் செமி கண்டக்டர்கள் (Semiconductors) உற்பத்திக்கான செலவுகளும் அதிகரிக்கும். கால்குலேட்டர் முதல் ஏவுகணை வரை அனைத்துப் பொருட்களின் உதிரிப்பாகங்களின் விலைகளும் சடுதியாக அதிகரிக்கும். இது நாடுகளின் டிஜிட்டல் கட்டமைப்புகளைப் பாதிக்கும். AI தொழில்நுட்பம் மூலம் அறிவுப் பொருளாதாரத்திற்குப் மிகப்பெரிய அடியாக இது விழக்கூடும்.

• • •







## காணி உரிமை ... தொடர்ச்சி...

தீர்மானிக்கும் அதிகாரம் கிடைக்கும். ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுடனான தமிழ் முற்போக்கு கூட்டணியினரின் சந்திப்பு மலையக மக்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையை தந்துள்ளது. எனினும், அந்த நம்பிக்கையானது வெறும் பேச்சுகளுடன் நின்றுவிடாமல், ஜனாதிபதி செயலகத்தின் புதிய இணைப்பாளரின் ஊடாகச் செயலாக்கம் பெற வேண்டும்.

மத்திய கிழக்கு போர் போன்ற சர்வதேச காரணிகளால் ஏற்படும் பொருளாதாரப் பின்னடைவுகளைத் தாங்கும் வலிமையை மலையகச் சமூகத்திற்கு வழங்க வேண்டுமாயின், அவர்களுக்குக் காணி உரிமை, முறையான கல்வி மற்றும் கௌரவமான வருமானம் என்பன உறுதிப் படுத்தப்பட வேண்டும். இலங்கையின் தேசிய உற்பத்தியில் பெரும் பங்காற்றும் இந்த மக்கள், இனிமேலும் "நாடற்றவர்களாகவோ" அல்லது "உரிமையற்றவர்களாகவோ" கருதப் படக்கூடாது. மாறாக, நாட்டின் தீர்மானம் எடுக்கும் சக்திகளாக அவர்கள் மாற வேண்டும் என்பதே தற்போதைய தேவையாகும்.

## ஈழத்தமிழர் மற்றும் 2026 ... தொடர்ச்சி...

தலைவிகளுக்கானஉரிமைத் தொகையை ₹2,000-ஆக உயர்த்துவதோடு, இலவசகுளிர்சாதனப் பெட்டி மற்றும் சமையல் எரிவாயு போன்ற வீட்டு உபயோகப் பொருட்களை வழங்குவதன் மூலம் அவர்களின்பொருளாதாரச் சுமையைக் குறைக்க முயல்கிறது.

### இலங்கையின் புதிய அரசியல் சூழலும் தாக்கமும்

இலங்கையில் 2024-இல் அமைந்த NPP அரசாங்கத்தின் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, தமிழகத்தில் உள்ள அகதிகள் திரும்ப விரும்பினால் அவர்களுக்கு அனைத்து உதவிகளும் செய்யப்படும் எனக் கூறியுள்ளார். இருப்பினும், தமிழகத்தில் உள்ள 40% இந்தியாவிலேயே பிறந்த ஈழத் தமிழர்கள், தங்களுக்குக் குடியுரிமையையே நிரந்தரத் தீர்வு எனக்கருதுகின்றனர்.

2025-ஆம் ஆண்டு மத்திய அரசு வெளியிட்ட “குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் (விலக்கு) ஆணை” மூலம், 2015-க்குமுன் வந்தவர்களுக்குச் சிறைத் தண்டனையிலிருந்து விலக்குஅளிக்கப்பட்டாலும், அது அவர்களுக்குக் குடியுரிமையையோ அல்லது நீண்டகால விசாவையோ (LTV) இன்னும்வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2026 தேர்தல் விஞ்ஞாபனங்கள் காட்டும் புள்ளிவிவரங்கள், தமிழக அரசியல் கட்சிகள் அகதிகளின் வாழ்க்கையை”தற்காலிக முகாம்” என்ற நிலையிலிருந்து “நிரந்தர வாழ்விடமாக” மாற்ற முயற்சிப்பதைக் காட்டுகின்றன. திமுகவின் உள்கட்டமைப்பு மற்றும் சட்ட ரீதியான குடியுரிமைஅணுகுமுறையும், அதிமுகவின் சமூகப் பாதுகாப்பு மற்றும் இரட்டைக் குடியுரிமை கோரிக்கைகளும் சுமார் 89,000 மக்களின் 40 ஆண்டு காலக் காத்திருப்பிற்கான தீர்வைத் தேடுகின்றன. 2026 தேர்தலுக்குப் பிறகு அமையும் அரசாங்கம், மத்திய அரசுடன் இணைந்து இந்த மக்களின் குடியுரிமைச் சிக்கலுக்கு ஒரு இறுதித் தீர்வை எட்டவேண்டியது அவசியமாகும்.

• • •

## இலங்கை ஏன் தொடர்ந்து ... தொடர்ச்சி...

### இனப்படுகொலையின் சாபமா?

அத்துடன் உலகளாவிய சூழலும் ஶ்ரீலங்காவின் பொருளாதாரத்தை பெரிதும் பாதித்தது. குறிப்பாக ரஷ்யா – உக்ரைன், தற்போது அமெரிக்கா, இஸ்ரேல் – ஈரான் இடையிலான போர்கள், உலகளாவிய எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களின் விலைகளை குறிப்பிடத்தக்க அளவில் உயர்த்தின. ஶ்ரீலங்கா போல இறக்குமதிகளுக்கு மிகவும் சார்ந்துள்ள நாடுகள் இதன் தாக்கத்தை நேரடியாக அனுபவிக்க நேரிடும். எரிபொருள் விலை உயர்வு போக்குவரத்து செலவுகளை அதிகரித்து, உணவுப் பொருட்கள் மற்றும் தினமும் பயன்பாட்டுப் பொருட்களின் விலையை மேலும் உயர்த்தியது. உலக சந்தையில் ஏற்பட்ட குறைவுகள் மற்றும் மாற்றங்கள், சிறிய மற்றும் பாதிப்பு வாய்ந்த பொருளாதாரங்களுக்கு மிகப் பெரும் சவால்களாக உருவாகின. இதனால் உள்ளக பொருளாதார நிர்வாகம் மிகவும் கடினமான சூழ்நிலையில் குதித்தது.

தமிழ் மக்கள்மீதான இனவழிப்பு மற்றும் கொல்லப்பட்ட மக்களுக்கான நீதி மறுப்பு இலங்கையின் நிலைமைக்கு முக்கியமான காரணிகளாகும். 1983 முதல் 2009 வரை நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது, தமிழ் மக்களை இலங்கையின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக சூழலில் முறையாகச் சேர்க்காத முறைகள் மற்றும் பல்வேறு முறைகளில் தடைகள், ஈழ மக்களை கொன்றொழிக்கும் பேரினவாதப் போர் இதன் விளைவாக, தமிழர் பகுதிகளில் உற்பத்தி, கல்வி, தொழில்துறை வளர்ச்சி குறைந்தது; மக்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது.

யுத்தத்திற்குப் பிறகு, இனப்படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு நீதி வழங்காமை, காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கு பொறுப்புக் கூறாமை, ஈழமக்களின் நிலங்களை விடுவிக்காமை, இன்னமும் ஈழ மக்கள் வீதிகளின் போராடுகின்றமை, என இத் தீவின் மக்களை தொடர்ந்து அவலத்தில் தள்ளியமையின் விளைவாகவே ஶ்ரீலங்கா தேசம் இன்னமும் அதன் அறுவடைகளை அனுபவிக்கின்றது. இதைப் பற்றி சிங்கள மக்கள் சிந்தின்ற காலம் அவ்வளவு தொலைவில் இல்லை.

• • •

## கற்காலத்திற்குத் திரும்புதல் ... தொடர்ச்சி...

ஆனால் இந்த அச்சுறுத்தலும் சரி, கண்மூடித்தனமான குண்டுவீச்சு நடத்துவதற்கான அமெரிக்காவின் விருப்பமும் சரி, புதியவை அல்ல.

ஒரு நாட்டை “கற்காலத்திற்குத் தள்ளும்” குண்டுவீச்சு என்ற சொற்றொடரை, இரண்டாம் உலகப் போரில் ஜப்பானிய நகரங்களை அழிப்பதை மேற்பார்வையிட்ட அமெரிக்க விமானப்படை அதிகாரியான கர்டிஸ் லெமே தான் முதன்முதலில் பயன்படுத்தினார் என்று பரவலாகக் கூறப்படுகிறது.

1950-களின் முற்பகுதியில், அமெரிக்கத் தலைமையிலான படைகள் வட கொரியா மீது ஒரு கண்மூடித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தி, அதன் 95 சதவீத மின் உற்பத்தித் திறனையும், 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட கட்டடங்களையும் அழித்தன.

அதன்பின்னர், தென்கிழக்கு ஆசிய நாடான வியட்நாமில் போர் நடந்துகொண்டிருந்தபோது, அந் நாட்டை “கற்காலத்திற்குத்” தள்ளும் வகையில் அமெரிக்கா குண்டுவீச வேண்டும் என்று லெமே தனது நினைவுக் குறிப்பில் வாதிட்டார். 1972-ல், அமெரிக்க அதிபர் ரிச்சர்ட் நிக்சன் வட வியட்நாம் மீது கண்மூடித்தனமான குண்டுவீச்சு நடத்த உத்தரவிட்டார் – இது அமெரிக்க மக்களுக்கு “கிறிஸ்துமஸ் குண்டுவீச்சு” பிரச்சாரம் என்று பரிசுப் பொட்டலம் போல வழங்கப்பட்டது.

மேலும், செப்டம்பர் 11 தாக்குதல்களுக்குப் பிறகு, தலிபான்களுக்கு எதிரான போரில் பாகிஸ்தான் சேராவிட்டால், அந்நாட்டை “கற்காலத்திற்குத்” தள்ளும் வகையில் குண்டுவீசுவதாக அமெரிக்கா அச்சுறுத்தியதாக அப்போதைய பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரஃப் கூறினார்.

## பிரித்தானியா எதிர் ... தொடர்ச்சி...

தாக்குதல்களைத் தொடர்ந்து விலைகள் உயர்ந்ததால், ஐரோப்பா முழுவதும் உள்ள எரிசக்தி இறக்குமதியாளர்கள் மிகக் கடுமையான பாதிப்பைச் சந்தித்து வருகின்றனர். இந்த நெருக்கடியானது, உலகளாவிய எண்ணெய் விநியோகத்தில் சுமார் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்டு செல்லும் ஒரு முக்கிய கப்பல் வழித்தடமான ஹோர்முஸ் நீரிணையை திறம்பட மூடியுள்ளது. இது சரக்குப் போக்குவரத்தைத் தடைசெய்து, எரிபொருள் மற்றும் உள்ளீட்டுச் செலவுகளை அதிகரிக்கச் செய்துள்ளது.

இந்த வாரத் தொடக்கத்தில், தலைமைப் பொருளாதார நிபுணர் பியர்-ஒலிவியர் கோரின்சாஸ் உள்ளிட்ட மூத்த IMF அதிகாரிகள் வெளியிட்ட ஒரு வலைப்பதிவில், அதிகக் கடன் சுமை கொண்ட அரசாங்கங்களுக்கு இந்தத் தாக்கத்தைத் தணிப்பதற்கு அதிக வாய்ப்பில்லை என்றும், இது குடும்பங்களையும் வணிகங்களையும் மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் என்றும் அந்த நிதியம் கூறியுள்ளது. மத்திய கிழக்கு போரின் தாக்கம் “உலகளாவியதாகவும் மிகவும் சீரற்றதாகவும்” இருக்கும் என்றும், இங்கிலாந்து உட்பட சில நாடுகள் வாழ்க்கைத்தரத்தில் மீண்டும் ஒரு நெருக்கடியை எதிர்கொள்ளும் என்றும் அது மேலும் கூறியுள்ளது.


உயர்ந்து வரும் எரிசக்தி கட்டணங்கள் வாழ்க்கைச் செலவுகளை அதிகரிக்கும் என்பதால், இங்கிலாந்து மற்றும் இத்தாலி மிகவும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளில் அடங்கும் என்று சர்வதேச நாணய நிதியம் (IMF) கூறியது. அதே நேரத்தில், அணுசக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை அதிகம் சார்ந்திருப்பதால் பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் ஒப்பீட்டளவில் பாதுகாப்பாக உள்ளன.

எரிபொருள் விநியோகம் பாதுகாப்பாக உள்ளது என்று வலியுறுத்திய இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், திங்களன்று பொதுமக்களை “வழக்கம் போல் செயல்படுமாறு” கேட்டுக்கொண்டார்.

உக்ரைன் மோதல் காரணமாக ஐரோப்பிய ஒன்றியமும் இங்கிலாந்தும் மலிவு விலையில் கிடைக்கும் ரஷ்ய எரிவாயு மற்றும் எண்ணெயை படிப்படியாக நிறுத்தத் தொடங்கிய நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட, பிரிட்டிஸ் பொருளாதாரம் இப்போது மிகவும் பலவீனமான நிலையில் உள்ளது என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

1973 அரபு-இஸ்ரேல் போருக்குப் பிறகு, அரபு உற்பத்தியாளர்கள் மேற்கத்திய நாடுகள் மீது தடை விதித்ததால் எண்ணெய் விலைகள் நான்கு மடங்கு உயர்ந்தது. 1970-களின் கொந்தளிப்புக்கு ஒப்பான ஒரு எரிசக்தி நெருக்கடியை நோக்கி இங்கிலாந்து செல்லக் கூடும் என்று இங்கிலாந்து வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் ஹோவர்ட் டேவிஸ் இந்த வாரம் கூறினார்.






இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# தாயகமும் வாழ்வும்







